ஜூன் 2015
OLIARAZI
மகளிர் மாத சஞ்சிகை

# ஒளிஅரசி

இல்லத்தரசிகளின் தோழி
ඔලිඅරසි
அரசியலோ பாலியலோ கலக்காத ஒரு பரிணாமப் படைப்பு
ரூபா 75

PUBLIC LIBRARY
JAFFNA

## பிள்ளைகளுக்கு பரந்துபட்ட தேடல் அறிவை வழங்குங்கள் - சிறப்புத் தந்தை



ஒளி - 02 இதழ் - 07
பக்கங்கள் : 68 + viii

Free
வெட்டுத்துணிகளில் அலங்காரப் படைப்புக்கள்

## தந்தையர் தின சிறப்பிதழ்

தரம் 5 சிங்கள மொழிபெயர்ப்பு வினாத்தாள்

அன்பு + அறிவு + அழகு + திறன் + முயற்சி + வாழ்த்து + பொழுதுபோக்கு

அதிர்ந்தது தமிழ் தேசம்!
காவியமாகிய இளம் மொட்டு வித்தியா



புத்திஜீவிகள் முன்வைக்கும் தீர்வுகள்

நட்சத்திர இல்லத்தரசி



தகர்த்தெறியும் ஆற்றலே தேவை

இம்மாத மங்கை



உள்ளக அங்கீகாரம் முக்கியம்



முதலாவது பெண் மருத்துவர்



சாதனை மாணவி



நந்தவனப் பூக்கள்



சிறப்புக் கவிஞர்



புதுமைப்பெண்

அம்மா அப்பா இப்படி!

வலியில்லா பிரசவம் சாத்தியம்

CANARA
முன்பள்ளி கல்விக் கோட்பாடு



4TH
Happy birthday
wishes
JESLIJA
RENIBERD
(POOYA)
2015.06.29
2015. 06.29 அன்று தனது பிறந்தநாளைக்
கொண்டாடும் ஜெஸ்லியாவை பல்லாண்டு
காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.
-குடும்பத்தினர்

# உள்ளே



04 தந்தையின் தோழமை...


10 உறவுகள் சுகமானது...


16 வாசிப்பே கல்விக்கான...



18 கண்ணுக்கு விருந்தளி...


19 அதிஷ்டம்...


23 ஆயுளை அதிகரிக்க...



27 அந்தை...


30 இசைப்பிரியாவுடன்...


34 தேசிய மட்டத்தில்...


37 வலியில்லா பிரசவம்...


48 பெண்கள் மீதான...


55 அழகாகத் தோற்றம்...


மே 18 இல் காவியமானவர்களின் முள்ளிவாய்க்கால் நினைவுகூரல்



பெண்தலைமைத்துவத்தின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் நினைவுகூரல் நிகழ்வு வலிகாமத்தில் இடம்பெற்ற பொழுது.



## ஒளிஅரசியின் அனுசரணையுடன் தாதியர் தின நிகழ்வுகள்



வவுனியா பொது வைத்தியசாலையில்

# தந்தையின் தோழமை வெற்றிக்கு வழிவகுக்கும்!



**'ஒளிஅரசி'யின் அன்பான வாசகர்கட்கு,**

இம்மாதம் (ஜூன் மாதம் 21 ஆம் திகதி) தந்தையர் தினத்தை நினைவுகூர்ந்து தந்தையரை கௌரவப் படுத்த என ஒதுக்கப்பட்டுள்ளது. ஒரு குடும்பத் தலைவன் தலைநிமிர்ந்து வெற்றிப்பாதையில் நிற்க வேண்டுமாகில் நிச்சயமாக அவனுக்குப் பின்னணியில் தாய், மனைவி அல்லது மகள் என்றொரு சக்தி பக்கபலமாக இருப்பாள் என்பதை மறுக்கமுடியாது.

ஒரு குடும்பத்தலைவனின் சுமைகள் ஏராளம். பொருளாதார வளம் தேடி, குடும்பச் சுமைகளுக்கு ஈடு கொடுத்து ஆகவேண்டும். பிள்ளைகளின் கல்வி, தொழில் வளம் என்றெல்லாம் தேடி போராட வேண்டும். பெண் குழந்தைகள் என்றால் கல்வி முதல் திருமணம் வரை போராட்டம் தொடரும். சில பெண்பிள்ளைகள் பொருளாதார வளத்தில் தன்னிறைவு காணும்போது எதிர்கால வளம் தொடர்பாக தந்தையரின் சுமைகளைத் தாங்களே தாங்கிக் கொள்கின்றனர். இவற்றையெல்லாம் சீராகச் செய்து முடிக்க பெண்ணின் அன்பும், ஆதரவும், ஒத்துழைப்பும் என யாவும் அத்தியாவசியமாகும்.

குடும்பத்தில் ஒரு தந்தையின் அன்பும் தோழமையும் பிள்ளைகளுக்குக் கிடைக்குமாகில் பிள்ளைகள் எதிர்காலத்தில் எதிர்நோக்கும் சவால்களைச் சாதனைகளாக்க வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

குறிப்பாக, பெண்குழந்தைகளைப் பொறுத்தமட்டில் ஒரு தந்தையானவர் சிறந்த புரிந்துணர்வுள்ள தோழமையுடன் அமைந்துவிட்டால் எந்தப் பெண்ணும் தன்நம்பிக்கையுடன் முதல் அடியை இந்த சமூகத்தில் எடுத்து வைக்க முடியும். பிள்ளைகள் தந்தையிடம் என்னென்ன எதிர்பார்ப்புகளை விரும்பிவாழ்கின்றனரோ அவ்வாறே தந்தைமார்களின் எதிர்நோக்குகள் எத்தகையது என்பதைப் பிள்ளைகள் ஏனோ புரிந்துகொள்வதில்லை.

தந்தையர் தின அனுஷ்டானத்தில் எமது கவனத்தை தந்தையரின் சுமைகளிலும் செலுத்தி அவர்களுக்கு எத்தகைய ஒத்தாசைகள் வழங்கமுடியும் என்பதையும் எண்ணிப்பார்க்கவேண்டும்.

'மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என்நோற்றான் கொல் எனும் சொல்'


என்னும் திருக்குறளை நாம் இங்கு நினைவுகூருதலும் நன்மை பயக்கும். அதாவது, மகன் தந்தைக்குச் செய்யவேண்டிய கைமாறு அறிவும் ஒழுக்கமுடையவனாகவும் நடந்து தந்தை இவனைப் பெறுவதற்கு என்னதவம் செய்தானோ? என்று பிறர் வியந்து சொல்லுமாறு நடப்பதாம்.

வாழ்நாள் பூராகவும் தந்தையர் சுமக்கும் சுமைகளுக்கு நாமும் சுமைதாங்கிகள்போல வாழ்ந்து அவர்களைக் கௌரவிப்பதுடன் அவர்கள் மட்டில் நாம் வைத்துள்ள அன்பையும் பாசத்தையும் வெளிப்படுத்தலாமே.

அம்மா, அப்பாவை மதித்து மரியாதையுடன் நடக்கும் போதே பிள்ளைகளும் அப்பாவின் முக்கியத்துவத்தை உணர்ந்து நடப்பார்கள். எனவே இதன் வெற்றி தோல்வி இல்லத்தரசிகளின் கைகளில். இதற்கேற்றவாறு பல ஆக்கங்களை இந்த இதழில் சேர்க்கப்பட்டுள்ளது.

**- ஆசிரியர் குழு-**

## அப்பாவுக்கு



வலிசுமந்து உழைத்து
எமை காத்த உனை கௌரவப்படுத்தவே
நாம் எல்லோருக்கும் உன்
பெயரை முதலெழுத்தாக்கி மதிக்கின்றோம்.


தொன்றுதொட்டு வரும் இந்த மரபே உன்
முதன்மைக்கு உச்ச எடுத்துக்காட்டு.

இப்படிக்கு,
- அம்மா, பிள்ளைகள் .

ஜனா ஜெஸ்மின்
மட்டுவில்

PUBLIC LIBRARY JAFFNA

# ஓர் முழுமையான வரலாற்று விளக்கம்



## 4000 வருடங்களுக்கு முன்பே மட்பாண்டத்தில் வாழ்த்து மடல்...

கடந்த மே மாதம் அன்னையர் தினத்தைக் கொண்டாடி மகிழ்ந்த நாம், ஜூன் மாதம் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை தந்தையர் தினத்தையும் கொண்டாடி தந்தையரைக் கௌரவிக்கின்றோம். தந்தையோடு கல்வி, தந்தை சொல் மிக்க மந்திரமில்லை, தந்தையோடு வீரம் என்றெல்லாம் நாம் தந்தையைக் குறித்து முதுமொழிகளைக் கேட்டிருந்தபோதும், தாய்மாருக்குக் கொடுக்கும் பாசமிகு அன்பை தந்தைக்குக் காட்டுவது அரிதாகவே இருந்தது. ஆனால், இன்றைய காலகட்டத்தில் தந்தையரைக் கௌரவிக்கும் முயற்சியும் அதிகரித்துவருகின்றது.

தந்தையர் தின விழாவை நோக்கும்போது, நூற்றாண்டுகால கட்டத்திலேயே இவ்விழா கொண்டாடப்பட்டதாக வரலாறு தெரிவிக்கின்றது. வாஷிங்டன் நகரைச் சேர்ந்த திருமதி. சோனோரா லூயிஸ் ஸ்மார்ட் டொற் என்பவர் அன்னையரைக் கௌரவிக்க விசேட தினத்தைப் பிரகடனப்படுத்தியது போல் தந்தையரின் பங்களிப்பும் ஒரு குடும்பத்திற்கு அத்தியாவசியமாகும் என வலியுறுத்தினார்.

ஆனால், புத்திஜீவிகள் பலர் தந்தையரைக் கௌரவிக்கும் வழக்கம் 4000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருந்ததாகத் தெரிவிக்கின்றனர். மேலும், பபிலோனியா இடர்பாடுகளிடையே தந்தையர் தின ஏடுகளும் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 4000 ஆண்டுகளுக்கு முன் எம்மேசு என்னும் சிறுவன் களிமண்ணினால் வாழ்த்து மடலைத் தயாரித்து தந்தையர் தின வாழ்த்தைப் பொறித்து வைத்திருந்ததாக ஏடுகள் தெரிவிப்பதாகவும் வெளியிடப்பட்டுள்ளது. இச்சிறுவன் பபிலோனியாவில் வாழ்ந்த தன் தந்தைக்கு ஆரோக்கியமும் நீண்ட ஆயுளும் கிடைக்கவேண்டுமென வாழ்த்தியிருந்தான். தந்தைக்கும் தனயனுக்கும் இறுதியில் என்ன நடந்தது என்ற குறிப்புகள் தெரிவிக்கப்படவில்லையெனினும் தந்தையர் தினம் உலகெங்கிலும் அனுஷ்டிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தந்தையர் தினத்தைக் குறித்து பல பரவலான வரலாறுகள் தொடருகின்றன. மேற்கு வேர்ஜீனியாவில் 1908 ஆம் ஆண்டு ஆலயத்தில் நடைபெற்ற ஆராதனையின்போது தந்தையரைக் கௌரவிக்க வேண்டுமெனவும் விழா ஆரம்பிக்கப்பட்டது. மேலும் வேறு சிலர் வாஷிங்டன் வன்கூவர் ஆலய வழிபாட்டில் ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிவிக்கின்றனர்.

சிக்காகோவில் லயன்ஸ் கழகத் தலைவர் ஹரி மீக் என்பவர் தந்தையரைக் கௌரவிக்கும் முகமாக 1915 ஆம் ஆண்டு லயன்ஸ் கழக அங்கத்தவராக இருந்த கால கட்டத்தில் தந்தையர் தினத்தை ஆரம்பித்ததாகவும் கூறப்படுகின்றது. இவர் ஜூன் மாதத்தில் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை அவரது பிறந்த தினத்தையொட்டி தந்தையர் தின விழாவை ஆரம்பித்தார்.

இவரது கருத்தையும் நல்லெண்ணத்தையும் பாராட்டி அமெரிக்க லயன்ஸ் கழகம் 1920ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20 ஆம் திகதி இவரது முயற்சிக்கு ஆதரவு வழங்கி தந்தையர் தினத்தின் ஆரம்ப கர்த்தா எனப் பட்டம்

> "ரோஜா மலருடன் பரிசுப் பொருள் வழங்கி தந்தையை கௌரவிக்க மறக்காதீர்கள்..."

வழங்கி ஒரு தங்க கடிகாரத்தை அன்பளிப்பாகக் கொடுத்தனர்.

சிலர் மேற்கு வேர்ஜீனியாவில் திருமதி சார்ள்ஸ் கிளேடன் தந்தையர் தினத்தை ஆரம்பித்ததாகவும் கூறுகின்றனர். ஆனால், கத்தோலிக்க

இன்று உலகளாவிய ரீதியில் தந்தையர் தினம் கொண்டாடப்படுகின்றது. தந்தையர் தமது குடும்பத்தைப் பாதுகாத்து மனைவி, மக்களின் நல்வாழ்வுக்காக பல தியாகங் களைச் செய்து வாழ்ந்துவருபவர். பொருளாதார வளம் தேடும் தந்தையருக்கு ஏற்படும் நெருக்கடிகள் ஏராளம். சாண் ஏற முழம் சறுக்கும் நிலையே இன்றைய நிலைப்பாடு. எனவே, குடும்ப முன்னேற்றத்துக்காக தந்தைமார் சுமக்கும் சுமைகளைக் கருத்திற் கொண்டு அவர்களைக் கௌரவப்படுத்துவது எமது தலையாய கடமையாகும்.

ஆலயங்கள் மார்ச் மாதம் 19ஆம் திகதி புனித சூசையப்பர் தின விழாவின்போது தந்தையர் தின விழாவைக் கொண்டாடுமாறும் கருத்து தெரிவித்தனர்.

ஆனால், அன்னையர் தின அனுஷ்டானத்தை தந்தையர் தினம் கொண்டாடுவதற்கு அமோக வரவேற்பு இருக்கவில்லை. 1908 ஆம் ஆண்டு மேற்கு வேர்ஜீனியாவில் முதன் முறையாக தந்தையரைக் கௌரவிக்கும் நிகழ்வு ஞாயிறு தின வழிபாட்டின்போது நடைபெற்றது. அன்றைய தினம் பியார் மொன்ட் நிலக்கரிச் சுரங்க சரிவினால் இறந்த 362 தொழிலாளர்களை நினைவுகூரும் நிகழ்வாக இவ்வழிபாடு ஆரம்பிக்கப்பட்டது.

ஆனால், வாஷிங்டனில் வாழ்ந்த சோனோரா ஸ்மார்ட் டொற் என்பவர் தாய் இறந்த பின் தந்தையாரின் பராமரிப்பில் பேணிவளர்க்கப் பட்டார். இவரது தந்தையார் தனது ஆறு குழந்தைகளையும் மனைவியின் மரணத்தின் பின்னர் பாதுகாத்து வந்ததால் அவரது சேவை பாராட்டப்படக்கூடியதாகும். இதனைக் கண்ணுற்ற மூத்த மகள் சோனோரா தனது தந்தையைக் கௌரவிக்க விரும்பி, அவரது சேவையையும் பாராட்டினார்.

அவர்கள் வாழ்ந்த பகுதியிலுள்ள ஆலயங்கள், வை.எம்.சீ.ஏ, அரச அதிகாரிகள், வர்த்தக நிலையங்களின் ஆதரவை நாடினார். அதில் வெற்றியும் கண்டார். இதனால் வாஷிங்டன் நகரில் 1910இல் ஜூலை மாதம் 19ஆம் திகதி முதலாவது தந்தையர் தினம் கொண்டாடப்பட்டது.

1924ஆம் ஆண்டு ஜனாதிபதி கல்வின் கூல்புச் தேசிய விழாவாக அனுஷ்டிக்க அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து வாழ்த்து மடல்கள், மலர்ச் செண்டுகள் வழங்க முன்வந்தார்.

பின்னர் கடுமையான போராட்டத்தின் பின்னர் தந்தையருக்கு தனியான தினம் வழங்க இணக்கம் தெரிவிக்கப்பட்டது. இதனால் அவர்களுக்குத் தேவையான கழுத்துப்பட்டிகள் (டைகள்), தொப்பிகள், காலுறைகள், புகையிடுவதற்கு புகையிலைச் சுங்கான், கொல்ப் கழக விளையாட்டு உபகரணங்கள், வாழ்த்து மடல்கள் வழங்க முன்வந்தனர்.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் அமெரிக்கப் போர் வீரர்களும் தந்தையர் தினத்தில் கௌரவிக்கப்பட்டனர். 1972ஆம் ஆண்டு ஜனாதிபதி றிச்சர்ட் நிக்ஸன் தந்தையர் தினத்தை தேசிய விடுமுறையாகப் பிரகடனப்படுத்தினார்.

அமெரிக்க தந்தைய தின விழாவில் ஒரு பில்லியன் டொலருக்கு அதிகமான வெகுமதிகளை தந்தையருக்கு வழங்குவதாகக் கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

**வாசகர் கருத்து :**

'ஒளி அரசி' பெண்களுக்காக பத்திரிகை என தங்கள் எழுத்துகள் புலப்படுத்தினாலும் என் போன்ற ஆண்களும் நான் அறிந்த வரைத் தேடி படிக்கின்றனர் என்பதைத் தெளிவுபடுத்துகின்றேன். வெளிவந்த அத்தனை 'ஒளி அரசி'யும் நான் பேணிப் பாதுகாத்து வருபவன். ஆக்கங்கள் யாவும் தரமானவை. இந்திய சஞ்சிகைகளின் தரத்துக்கு இதுவும் சமமாய் திகழ்கின்றது என்பது எனது கருத்து. தொடரட்டும் இப்பணி. அநேக விடயங்கள் எமக்கு தெரிந்ததுபோல் மனதுக்குள் தோன்றினாலும் 'ஒளி அரசி'யை வாசிக்கும்போது அதன் உண்மைக்கருத்து ஐயமின்றி மனதுக்குப் புலனாகின்றது. நிறைகுடமாக 'ஒளி அரசி'யில் குறை காண்பது சாத்தியமல்ல.

**எஸ். ஜெயச்சந்திராசா, வவுனியா.**

**ஆசிரியர் குறிப்பு :**

உங்கள் கருத்துக்கு நன்றி. ஒளிஅரசி இல்லத்தரசியூடாக குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் பயன் தரக்கூடிய ஆக்கங்களை உள்ளடக்கி வெளியிடுகின்றோம். அந்தவகையில் பொறுப்பான கணவர்கள் ஒவ்வொருவரும் வாசித்து நேசிக்க வேண்டிய சஞ்சிகை இது. அந்தவகையில் நீங்கள் ஒரு பொறுப்பான கணவர் என்பது பாராட்டுக்குரியது.

## தந்தையர் பெருமை தொடர்பாக மாணவிகளின் எண்ணக்கருக்களை அறிவதற்காக யாழ். அச்சுவேலி சென். திரேசா பெண்கள் பாடசாலையில் ஒளிஅரசி மேற்கொண்ட கவிதைப் பதிவுகள்.

ஒழுக்கத்தையும் அன்பையும்
ஊட்டி வளர்ப்பவரே!
கண்ணும் கருத்துமாய் எம்மை
காப்பவரே!
விழி மூடினாலும் எம் நினைவாய்
இருப்பவரே!
வாழ்த்துகிறேன் வாழிய நீங்கள்!

- பா. கபிர்த்தனா -

அன்பான அரவணைப்போடு
எம்மை வளர்த்திடும்
எம் தந்தையை
இத்தினத்தில் வாழத்துகிறேன்.

என் கண் காணும் - கடவுள்
என் தந்தையே!

அறிவெனும் அமுதூட்டி
அகிலத்தில் ஒளி வீசி
வாழ வழிகாட்டும்
தந்தையே வாழிய நீங்கள்!

- ஜீ. டிலக்சி -

பாசத்தின் ஒளிவிளக்காய்
பண்பின் இலக்கணமாய்
வாழும் எம் தந்தையே
வாழ்க!

தாயன்பிற்குக் குறைவில்லை
தந்தையின் அன்பு
இதுவும் உலகில்
உன்னதமான அன்பு.

- ம. டினுஜா -

அகிலத்தில் நான்
அவதரித்த நாள் முதல்
இன்று வரை
அன்புடன் ஒழுக்கமும் சேர்த்து
அழகாய் வளர்த்த - அப்பாவே!
எத்தனை ஜென்மம் வந்தாலும்
உமக்கே மகளாக வேண்டும்

அப்பாவுக்கு எப்போதும் நான்
இளவரசிதான்.

- ஜெ. சிரோமிக்கா -

எமது வாழ்வின்
எழுச்சிக்கு
முன்னுதாரணமான
அப்பாவே வாழ்க!

அன்போடு ஆதரவையும்
பண்போடு ஒழக்கத்தையும்
என்றுமே ஊட்டும்
தந்தையே வாழ்க!

- ர. ராகவி -

தெய்வங்கள் எல்லாம்
தோற்றே போகும்
தந்தை அன்பின் முன்னால்
வாழ்க! வாழ்க!

- ரீ. துஷ்யந்தினி -

தந்தையாக இருந்து
தாய்போல் காக்கும்
தந்தையே வாழ்க!

- அ. யஸ்மின் -

ஜூலை மாத இதழுக்கான கவிதைப் பதிவுகளுக்கான தலைப்பு

**''பெண் அடக்குமுறையை உடைப்போம்!''**

கவிதை எழுதுவதில் ஆர்வம் உள்ள மாணவ, மாணவிகள், இல்லத்தரசிகளிடம் இருந்து 6 - 8 வரிக்கு மேற்படாத கவிதைகள் எதிர்பார்க்கின்றோம். உங்கள் ஆக்கங்களை தபாலட்டையில் எழுதி இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பு அனுப்பி வையுங்கள். சிறந்த 10 கவிதைகள் இப்பக்கத்தில் பிரசுரம் செய்யப்படும்.

# நீங்கள் நலமா?

**கேள்வி : எனக்கு 38 வயதாகிறது. அதிக பசி எடுக்கிறது. ஆனால், நான் திடீரென மெலிந்துவிட்டேன். அடிக்கடி சிறுநீர் கழிக்கிறேன். எனது பாதத்தில் புண் ஏற்பட்டுள்ளது. எனது புண்கள் பலநாட்களாக மாறவில்லை. பலரும் இதனால் எனது கால்களை இழக்கவேண்டிவரும் என்று பயமுறுத்துகின்றனர். எனக்கு என்ன நோய் ஏற்பட்டுள்ளது; என்ன சிகிச்சை பெறமுடியும் என்று கூறு முடியுமா?**

**பதில் :** நீங்கள் சொல்லும் அறிகுறிகளைப் பார்க்கும்போது உங்களுக்கு நீரிழிவு நோய் ஏற்பட்டிருக்கலாம். நீரிழிவு நோயினை உறுதிசெய்வதற்கு இரத்தத்தில் உள்ள குளுக்கோஸ் அல்லது சர்க்கரையின் அளவானது அளவிடப்படுகின்றது. மருத்துவரிடம் சென்று இதற்கான பரிசோதனை மேற்கொள்வதன் மூலம் நீரிழிவு நோயா என்பதை உறுதி செய்துகொள்ள முடியும். கால்களை இழக்கவேண்டிவரும் என்ற மனப்பயத்தை அகற்றிவிட்டு மருத்துவரிடம் செல்லுங்கள். நீரிழிவு நோய் என்பது பரிசோதனையில் உறுதிப்படுத்தப்படின் மருத்துவரது ஆலோசனைப்படி சிகிச்சையை பெற்றுக்கொள்வதன் மூலமும் உணவுக் கட்டுப்பாட்டை மேற்கொள்வதன் மூலமும் நீங்கள் இதற்கான தீர்வை பெற்றுக்கொள்ளமுடியும்.

**கேள்வி : எனது மகள் தற்பொழுது தரம் 10 இல் படித்துக் கொண்டிருக்கிறாள். படிப்பில் கவனக்குறைவாக இருக்கிறாள். எனது மகன் அனைத்திலும் திறமையானவனாக உள்ளபோது மகளின் இவ்வாறான செயற்பாடு எனக்கு கவலை அழிக்கிறது. அதுமட்டுமல்லாது நடுஇரவில் நித்திரையில் சிறுநீர் கழித்துவிடுகிறாள். இதனை வைத்தியரிடம் சொல்லிவிடுவேன் என்ற வெட்கத்தில் வைத்தியசாலைக்கு வருவதற்கு மறுக்கிறாா். இதற்கு தங்களிடம் ஏதாவது தீர்வு உண்டா?**

**பதில் :** மகனைப்போலவே மகளும் இருக்கவேண்டும் என எதிர்பார்ப்பது தவறான விடயம். மகளிற்கு உங்களின் அரவணைப்பு அதிகமாக தேவைப்படுகிறது என நினைக்கிறேன். அவ்வாறான அரவணைப்பு குறைகின்ற சந்தர்ப்பங்களில் உங்களை தன் பக்கம் கவருவதற்காக சிறுவயதிலிருந்தே இரவில் சிறுநீர் கழிக்கும் பழக்கத்தை உருவாக்கி இருக்கலாம். அந்தப் பழக்கம் தொடர்வதனால் அதனை மாற்ற முடியாது அல்லல்படுவதாக கூட இருக்கலாம். எனவே, மகளை அரவணைத்து உற்சாகப்படுத்துங்கள். மகளுக்கு பக்கபலமாக நீங்கள் இருக்கிறீர்கள் என புரியவைத்து அவளை உற்சாகப்படுத்துங்கள். மகளுக்கு அருகிலிருந்து அவளின் பாடங்களை கற்பதற்கு நீங்களும் ஒத்துழையுங்கள். அப்பொழுது அவள் கல்வியில் கவனம் செலுத்தக்கூடிய தன்மையை நீங்களே உருவாக்கிவிடுவீர்கள். பாடசாலையிலும் அவளது செயற்பாடுகளை ஆராய்ந்து கல்வியில் சிறந்து விளங்க ஆசிரியர்களுடன் கலந்தாலோசித்தல் நல்லது. எந்த நோயிற்கும் மருத்துவமே தீர்வு. மருத்துவர்களிடம் சிகிச்சை பெற்றுக் கொள்வதற்கு எந்தப்பயமும் வெட்கமும் தேவையில்லை என்பதை கூறி புரியவையுங்கள். உங்கள் மகளை வைத்தியரிடம் அழைத்துச்சென்று தகுந்த ஆலோசனை பெறுவது சிறந்தது. ஏனெனில், சிறுநீர்த்தொகுதியுடன் சம்பந்தப்பட்ட நோய்கள் ஏதாவது உண்டா என பரிசோதனை செய்து அதற்கேற்ற வகையில் சிகிச்சை பெற்றுக்கொள்ள முடியும்.

**கேள்வி : நான் உயர் தரம் படிக்கும் மாணவி. என் வகுப்பில் ஒரு மாணவன் எப்போதும் என்னையே பார்த்துக்கொண்டிருக்கிறான். இதனால் நான் மிகவும் தவிப்பாக உணர்கிறேன். அவன் தனது பாடத்தைக் கவனிப்பதில்லை. அவனால் நானும் பாடத்தை சரியாக கவனிக்க முடியாமல் இருக்கிறேன். இது காதலாக மாறிவிடுமோ என்று பயமாக இருக்கிறது. என் எதிர்கால கனவுகளும் இதனால் பாதிக்கப்படுமோ என்றும் பதற்றமாக இருக்கிறது. இதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?**

**பதில் :** நீங்கள் பதற்றப் படுவதை தவிருங்கள். உங்கள் வயதில் இந்த மாதிரி எதிர் பாலினத்தால் கவரப் படுவதும் இந்த உணர்வுகளும் இயல்பானதுதான்.

அந்தப் ஆண் உங்களை பார்க்கிறான் என்பதே நீங்கள் அவனை பார்ப்பதால் தானே உங்களுக்குத் தெரிகிறது. நீங்களும் அவனின் மீது கவரப்பட்டிருக்கிறீர்கள் என்பது இதிலிருந்து தெரிகிறது. இந்த உணர்வுகள் இயற்கையானதுதான் எல்லோருக்கும் உள்ளதுதான் என்பதை முதலில் ஏற்றுக்கொள்ளுங்கள். அடுத்து இம்மாதிரி கவரப்படுவது காதலில் முடிந்துவிடுமோ, இதனால் எதிர்காலம் பாதிக்கப்படுமோ என்பதெல்லாம் உங்கள் பதற்றத்தினால் ஏற்படும் பயம். இது தேவையில்லை. உங்கள் உணர்வுகளை உங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டால் உங்களை மீறி எதுவும் நடக்க வாய்ப்பில்லை. அந்த ஆணுடன் மற்ற ஆண்களுடன் பேசுவதுபோல் சகஜமாக பேசுங்கள். உங்கள் லட்சியத்தில் உறுதியாக இருங்கள். இப்போதைய உங்கள் கடமை நன்றாகப் படிப்பது என்பதில் தெளிவாக இருங்கள். அந்த ஆணுடன் சகஜமாக பழக ஆரம்பித்தாலே தேவையற்ற இந்த சஞ்சலம் போய்விடும். நீங்கள் இந்த வயதில் காதல் வலையில் விழத்தேவையில்லை. உங்கள் வாழ்க்கை பற்றிய முடிவுகளை உங்கள் பெற்றோரே பார்த்துக்கொள்வர்.

**கேள்வி : எனக்கு வயது 25. எனது கணவர் என்னை விட்டு பிரிந்து வேறு திருமணம் செய்துவிட்டார். எனக்கு ஒரு பெண் குழந்தை இருக்கிறது. தற்போது ஒருவர் என்னை மறுமணம் செய்யும்படி கேட்கிறார். நான் மறுமணம் செய்வது தவறான விடயமா?**

**பதில் :** மறுமணம் என்பது தவறான விடயம் அல்ல. வரவேற்கத்தக்க விடயமாகும். ஆனால், நீங்கள் எந்த நிலையில் மறுமணம் செய்துகொள்ளவிரும்புகிறீர்கள்; யாரை மறுமணம் செய்துகொள்ளப்போகிறீர்கள் என்பதில்தான் கவனம் செலுத்தவேண்டும். முதலாவது குடும்பத்தெரிவிலும் தோற்ற நீங்கள் இரண்டாவது குடும்பத்தெரிவில் தோற்றுவிடக்கூடாது. உங்களைத் திருமணம் செய்யும்படி கேட்டவரின் பின்னணிகளை முதலில் ஆராய்ந்து உங்களுடன் ஒத்துப்போககூடிய மனநிலையில் அவர் உள்ளாரா என்பதை முதலில் அறியுங்கள். மேலும் நீங்கள் ஒரு குழந்தைக்கு தாயாக இருக்கிறீர்கள். தங்களின் திருமண வாழ்வு அந்தப் பெண்குழந்தையின் வளர்ச்சிக்கு காரணமாக அமையவேண்டுமேயொழிய வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்துவிடக்கூடாது. அவ்வாறான புரிந்துணர்வுடன் இரண்டாவது வாழ்க்கை துணைவர் இருப்பார் என்பதை நீங்கள் எதிர்பார்க்க முடியாது. எனினும், தங்களையும் தங்களின் குழந்தையையும் எதிர்காலத்தில் பேணிப் பாதுகாக்க கூடியவராக இருந்தால் நீங்கள் இரண்டாவது திருமணம் செய்வதில் தப்பில்லை.

# புதுமை படைக்கும் பெண் பஸ் சாரதி



படப்பிடிப்பு
அருள்மதி

ஆணுக்குப் பெண் சரிநிகராய் போட்டியிடும் தளங்கள் பெருகிக்கொண்டே செல்கின்றன தற்போது. அந்த வகையில் திருமதி அஞ்சலா கோகிலகுமார் என்பவரும் புதுமைப் பெண்ணாகச் சாதனை படைத்துள்ளார்.

இதுவரைகாலமும் ஆண்கள் மட்டுமே செலுத்த முடியுமென எதிர்பார்க்கப்பட்டு வந்த பெரிய ரக பஸ்ஸை துணிச்சலாக செலுத்தி சாதனை புரிந்துள்ள இவர் பாலமோட்டை என்னும் பகுதியைச் சேர்ந்தவர்.கணவர் வெளிநாடு சென்ற சமயத்தில் தங்களுக்குச் சொந்தமான பஸ்ஸை செலுத்துவதற்குச் சாரதி கிடைக்காமையினால் அவ்வேலையை இவரே செய்யவேண்டிய நிர்ப்பந்தமான சூழல் ஏற்பட்டது. பின்னர் அதுவே தொடர்கின்றது. வவுனியா - பாலமோட்டை இவரது பஸ் பாதை. இரு தடவைகள் பயணம்.

ஒரு பெண்ணாக இதனைச் செய்வதில் தனக்கு எந்தச் சிரமமும் ஏற்படவில்லை எனவும் பஸ்ஸில் பயணம் செய்பவர்கள் பெரும்பாலும் உறவினர்களாகவும், தெரிந்தவர்களாகவுமே உள்ளதனால் நல்ல விமர்சனங்களே தனக்கு கிடைத்தன எனக் கூறியுள்ள இவர் தனது கணவரின் வற்புறுத்தலினாலேயே அனுமதிப் பத்திரம் எடுத்துக்கொண்டேன் எனவும் இத்துணிச்சலான சாதனைக்குப் பின்னால் தனது கணவரின் தட்டிக் கொடுப்பும், புரிந்துணர்வும், ஒத்துழைப்புமே உள்ளது எனவும் 'ஒளிஅரசி'க்கு பெருமையுடன் கூறியுள்ளார்.

இவரது வெற்றியான இல்லறம் இன்னும் சிறக்க ஒளிஅரசி மகிழ்வுடன் வாழ்த்துகின்றாள்.



# உறவுகள் சுகமானது

நெடுந்தொடர் 08

''நீ பேசாட்டி என்ன, அடுத்த வாரமே என்னோட அப்பா அம்மாவைக் கூட்டிவந்து மதுவிழி என்ற சின்னராணியை எங்கட வீட்டு மகாராணியா தாங்கன்னு கேட்டு உரிமையோட அழைச்சிட்டுப்போய் பேசவைப்பேனே'' என்றான்.

ஒருகணம் உடலெங்கும் சிலிர்த்தது மது விழிக்கு. உள்ளத்தின் நெகிழ்ச்சியை சொல்ல வார்த்தையில்லை.

''அஸ்வந் என்னை மறந்திடமாட்டீங்களே. எனக்கு என்னவோ பயமாயிருக்கு...?''

''துவி. நானே நினைச்சாக்கூட உன்னை என்னால மறக்கமுடியாது. தெரியுமா. அந்தள வுக்கு என் மனசுல நீ ஆழமா பதிஞ்சுபோயி ருக்கே. இன்னும் ரூ வீக்ல நான் ஊருக்குப் போயிடுவன். அதுக்குப்பிறகு சுசரி மூலம் அப்பா, அம்மாட்ட மெசேஜை சொல்லி கூடிய விரைவில உன்னை திருமதி அஸ்வந்தா கூட்டிப்போயிடுவன். ஓ.கேயா?''

அவன் பேசப்பேச செக்கச் செவேலென சிவந்தது மதுவிழியின் கன்னங்கள். நல்லவேளை யாக அஸ்வந் அருகில் இல்லை என எண்ணிக் கொண்டாள்.

''என்ன துவி. எதுவுமே பேசமாட்டேன்ற?'' என அவன் கேட்க,

''என்ன பேசட்டும்? நீங்கதான் எல்லாம் பேசிட்டீங்களே'' என்றாள்.

''அப்பாடா இப்படியேனும் பேசுறியே. எங்க இனி கதைக்கவே மாட்டியோன்னு பயந்திட்டேன் தெரியுமா'' என்றான்.

''சாப்பிட்டீங்களா...?'' என மென்மை யான கேள்விகளைத் தொடுத்தாள்.

''இல்ல. இனித்தான் தீபக்கும், வினையும் வெளிய போயிருக்காங்க. வந்ததும்தான் சாப்பிடணும். நீ சாப்பிட்டாச்சா?''

''ம். இப்பத்தான் சாப்பிட்டேன்''

''துவி. நான் இப்படி வா, போ, நீன்னு கதைக்கிறதில உனக்கொண்ணும் வருத்தமில் லையே. யாரோடையும் இப்பிடி பேசாத நான், உன்னோட மட்டும் ஏன் இப்பிடி பேசுறேன்னு புரியல. உன்னைப் பாத்ததும் மனசுக்கு தெரிஞ்சு போச்சு. என்னோட உரிமைக்காரி நீதான், நீ மட்டும்தான் என்று.''

சரி என்றது உங்க அக்காவா?

''ஐயோ. நான் சொல்லவே இல்லை. பாத்தியா அவ என்னோட தங்கச்சி. ஆனா அக்கா மாதிரிதான். அவ்வளவு பக்குவம் அவகிட்ட இருக்கு. வீட்ல எல்லாருக்கும் அவன்னா உயிர். எனக்கும்தான். தீபக்தான் அவளோட வருங்கால கணவன். துணையா

என் பிரண்டையே தன்னோட துணையா அவ தேர்வு செய்தது எனக்கு ரொம்ப சந்தோஷம். நானும் தீபக்கும் எது செய்யிறதுன்னாலும் அவதான் பெமிஷன் வாங்கித் தருவா. நானோ, தீபக்கோ யார் உடைஞ்சு போனாலும் அவ தாங்கமாட்டா. லீவு நாள்ள நாங்க மூண்டு பேரும் போடுற கூத்து இருக்கே... அப்பப்பா... வீடே அதிரும்''

''நீங்க சொல்லும்போதே எனக்கு சந்தோஷமா இருக்கு. ஓ.கே. குட்நைட்'' என்றாள்.

''ம். குட்நைட்'' என்றவன் போனை வைத்தான்.

அவளோடு பேசியதில் அஸ்வந்தின் மனம் குதூகலித்தது. ஆனால், இது நல்லதல்லவே, மனமோ சூறாவளியாய் சுழன்றடித்தது. மனதின் ஒரு பகுதி அவளுக்காக விடாமல் துடித்தது. இன்னொரு பகுதி வேண்டாம் என விலக்க நினைத்தது.

சிரிப்பும், கும்மாளமும், கலகலப்புமாய் இரவு உணவை உண்டனர் தீபக்கும், வினையும், அஸ்வந்தும்.

''சரிடா அஸ்வந். நான் புறப்படட்டுமா?'' எனக் கேட்ட வினையை ஆச்சரியமாய் பார்த்தான் அஸ்வந்.

''என்ன வினய். திடீரென வந்தாய். இப்ப திடீரென உடனே போறனென்றாய். என்னடா?''

''அஸ்வந். நான்தான் அவனை வரச்சொன்னன். மதுவிழியைப் பற்றி கேட்டான். சொன்னேன். பாக்கணும் என்றான், சரி அப்ப வந்துபார் என்றேன். வந்திட்டான்''

தீபக் சொல்லி முடிப்பதற்குள் அவனை முறைத்துப் பார்த்த அஸ்வந், ''என் பிறண்டா மதுவிழியைப் பத்தி சொன்னியா இல்ல. மதுவிழிக்கு அண்ணனா உன் தங்கச்சியை பாக்க வரச்சொன்னியா?'' என்றான்.

''ரெண்டும்தான்'' என்ற தீபக்கை ஏதும் சொல்ல வழியின்றி பேசாமல் இருந்தான் அஸ்வந்.

''அஸ்வந், மதுவிழி இஸ் கிறேட். அவ உனக்கு எல்லா விதத்திலையும் பொருத்தமான பெண். நாங்க விளையாட்டு வயசில விளையாட்டுத்தனமா முடிவு பண்ணினது வாஸ்தவம்தான். அதை மனசில வைச்சிட்டு எதையும் சாதிக்கமாட்டேன்னு நினைக்கிறன். எப்பவோ நடந்த தப்புக்கு இப்ப தண்டனை குடுக்கிறது ரொம்ப அதிகப்படி. அதுவும் மதுவிழியைத் தண்டிக்கிறது முறையே இல்ல. அவ ஒரு பூ மாதிரி; கசக்கிட வேணாம். பழசையெல்லாம் மறந்திட்டு லைபை என்ஜோய் பண்ணு. நான்கூட இங்கதான் ஒரு பெண்ணை செலக்ட் பண்ணியிருக்கன். அதை வீட்ல சொல்ற பொறுப்பை சுசரிகிட்டதான் குடுக்கணும். அவதான் பக்குவமா சொல்லுவா'' என்றான் வினய்.

தங்கையை அவ்வாறு சொன்னதும் பெருமையாய் புன்னகைத்த அஸ்வந்,

''டேய் வினய். அங்க பாரு தீபக் முகத்தில 'டண்டண்ணா' பெருமை பொங்கி வழியுது'' என்றான்.

''தீபக், சுசரியை தூதனுப்புறதில உனக்கேதும் மறுப்பு இல்லையே?''

''வினய், என்னடா நீ அவ எனக்கு காதலியாகிறதுக்கு முதலே உனக்கு மாமா மகள். என் காதலிக்கு அத்தை மகன் என்றதைவிட எனக்கு நீ பெஸ்ற் பிறண்டுடா. ஒற்றுமையான - சந்தோஷமான உங்கட பமிலியில நானும் ஒருத்தானாகிறதில எனக்கு ரொம்பப் பெருமை. இந்த அழகான குடும்பத்தில மதுவிழியும் வந்திட்டா சந்தோஷப்படுவா. தனியாவே வளர்ந்து, ஸ்வேதா மேடத்தோட வளர்ப்பு முறை இதுகளால அவ அதிகமா பேசவே சங்கடப்படுறா. நம்ம சுசரிதாவோட சேர்ந்திட்டா பிறகென்ன. அஸ்வந் பாடு திண்டாட்டம்தான்'' எனக்கூறி முடித்தான்.

ஓ.கே. அஸ்வந், தீபக் நான் புறப்படட்டா எனக் கேட்டு எழுந்துகொண்ட வினயின் கைகளைப் பற்றிய தீபக், ''அந்தப் பெண் யாருன்னு சொல்லாமல் போறே'' என்றான்.

என் காதலிக்கு அத்தை மகன் என்றதைவிட எனக்கு நீ உயிர் நண்பனடா. ஒற்றுமையான - சந்தோஷமான உங்கட குடும்பத்தில நானும் ஒருத்தனாகிறதில எனக்கு ரொம்பப் பெருமை...

''அது சஸ்பென்ஸ். அம்மாவும், அப்பாவும் வந்து முறைப்படி பேசும்போது எல்லாருக்கும் தெரியும்'' என்றான்.

''பேசியபடியே மூவரும் வீதிக்கு வந்துவிட்டனர். அப்போதுதான் காரை எடுக்காது மூவரும் நடந்தே வீதிக்கு வந்துவிட்டது புரிந்தது. அஸ்வந் உள்ளே திரும்ப'' ''வேணாம் அஸ்வந்'' என்ற வினய், ''ஓட்டோ... என்றுவிட்டு 'பை... பை...' என்றபடியே விரைந்து சென்றான்.

''ஆக வினயை வரவைச்சது உன்னோட வேலை தானா?'' என்ற அஸ்வந், ''என்னடா தீபக் இதெல்லாம்'' என்றான்.

''அஸ்வந்... இன்னும் எவராவது மதுவிழியைப் பாத்திட்டு உனக்கு அபிப்பிராயம் சொல்லணும்னு நினைச்சேன். அதனாலதான் வினயை வரவைச்சேன்'' என்றான்.

''ஒரு அண்ணனா உன் தங்கச்சியை காப்பாற்றப் பாக்கிறயே தவிர, ஒரு பிறண்டா என்னோட உணர்வை நீ மறந்திட்டே இல்லையா?''

''உன்னுடைய உணர்வை நான் நல்லாவே புரிஞ்சிட்டேன் அஸ்வந். உன்னால மதுவிழியை மறக்கவும் முடியாது. அவ இல்லாம வாழவும் முடியாது என்றதை நல்லாவே புரிஞ்சிட்டன். இதுக்கு நடுவில அந்தப் பழி உணர்ச்சி உன்னை வதைக்கிது.'' ''டேய் யோசிச்சுப் பார். ஒரு கொலைக்கு பல கொலை தண்டனையா? ஒரு தப்புக்கு தண்டனை பல தப்பா. சொல்லு'' என்றான்.

''ஓ.கே. தீபக். வா. இப்பிடியே கொஞ்சத் தூரம் நடந்திட்டு வரலாம்'' என்றான்.

இருவரும் சில்லென வீசிய மெல்லிய காற்றை இரசித்தபடி 'இராஉலா' சென்றனர்.

''அது சரி. நாங்க இங்க வந்து வண் மந்த் ஆகிறது. உன்னைப் பாக்காம சுசரி தவிச்சுப் போயிருப்பா. என்ன சொன்னா.''

''ஏதோ முக்கிய விசயமாத்தான் இங்க தங்கி நிக்கிறம் என்றதை புரிஞ்சிட்டா என்னைத் துருவித்துருவி கேட்டா நான் சொல்லலை தானே கண்டுபிடிக்கிறேன்னு கோபமா சொல்லிட்டா'' என்றான்.

அன்றைய காலைப்பொழுது அழகாகப் புலர்வதுபோல இருந்தது மதுவிழிக்கு. சோம்பல் முறித்தவாறே எழுந்துகொண்டவள், காலைக் கடன்களை முடித்துவிட்டு மாடிக்குச் சென்றாள். யோகா, தியானம் இவற்றில் சிறிது நேரம் கரைய அன்றைய அலுவல்களைத் திட்டமிட்டபடி மாடியில் இருந்து கீழே இறங்கினாள்.

பாடலொன்றை முணுமுணுத்தபடி குளியலறைக்குச் சென்றவள், சில்லென குளிர்ந்த நீர்த்திவலைகளின் கீழே நின்றாள். தென்றல் மெல்லத் தழுவுவதுபோல நீர்த்துளிகள் அவளது உடலை உரசியது. மிதமான அந்த குளியல் உடலையும், மனதையும் உல்லாசமாக்கியது. குளித்து முடித்து புத்தம் புது பூப்போல வெளியே வந்தாள் மதுவிழி.

காலைச் சமையலில் அவசரமாக ஈடுபட்டிருந்த ஸ்வேதா, 'மதுவிழி இன்னும் தேநீர் அருந்தவில்லை' என எண்ணியபடி தேநீரைக் கலந்துவிட்டு குரல் கொடுத்தார். அத்தையின் குரல் கேட்க, அவசரமாய் உடை மாற்றி ஓடி வந்த மதுவிழி பின்புறமாக வந்து அத்தையைக் கட்டியணைத்து முத்தமிட்டாள்.

''அத்தை, நானே வந்து காப்பி போட்டிருப்பனே. நீங்கள் எதுக்கு சிரமப்படுறீங்க?'' என்றாள்.

''இதில என்னம்மா சிரமம்? உன்னை இது வரைக்கும் நல்லபடி வளத்திட்டன். உனக்கேற்ற அழகான - அறிவான - நல்லவன் ஒருத்தன் கையில உன்னை ஒப்படைச்சிட்டா அதுவே எனக்குப் போதும். அதுக்குப் பிறகு ஏதோ ஒரு ஆச்சிரமத்தில என் வாழ்க்கை முடிஞ்சிடும்'' என்றார்.


''என்னத்தை இது? என்னை என்ன கல் நெஞ்சக்காரின்னு நினைச்சிட்டீங்களா? நீங்க நினைக்கிற மாதிரி எதுவுமே நடக்காது.

(தொடரும்...)


மாதம் ஒரு முறை
ஜூன் 1 - 30, 2015
நியூ விஷன் மீடியா சின்டிகேற் பிறைவேட் லிமிடட் - ஆசிரியர் குழுவால் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.
வடிவமைப்பு :
எஸ். கஜரூபன்,
எஸ். ஏ. றெனிபேட்
ஆசிரிய பீடம் :
தொலைபேசி: 011 5738855, 071 8628369

ஒளிஅரசி
இல்லத்தரசிகளின் தோழி
தொலைநகல்: 011 5517945
E-mail: oliarazi33@gmail.com, editoroliarazi@gmail.com
விளம்பரப் பிரிவு :
கொழும்பு : 078 8864730, 071 4114997
வட மாகாணம் : 021 5671111
விநியோகப் பிரிவு :
கொழும்பு : 011 5737592, 071 8628379

வட மாகாணம்:
021567222, 0776569617, 071 6182182
சந்தா விபரம் : உள்நாடு 1200/=, வெளிநாடு யூ.எஸ்.ஏ. 30 டொலர், யூ.கே. 20 ஸ்ரேலிங் பவுண்
கடித, போட்டித் தொடர்புகளுக்கு:
ஆசிரியர்,
'ஒளிஅரசி'
85, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு - 14.




ஒளி அரசியானது நல்ல கருத்துக் களை சமூகத்திற்கு சமர்ப்பிக்கும் கவிஞர்களை ஊக்கப்படுத்தி அவர் களை அறிமுகப்படுத்துவதற்காக இந்த சிறப்புப்பக்கத்தை ஆரம் பித்துள்ளது. அந்த வகையில் ஜூன் மாதத்திற்காக சாய்ந்தமருதுவைச் சேர்ந்த எம். ஐ. எம். அஷ்ரப் இப்பக்கத்தில் பாராட்டப்படு கின்றார்.


# தந்தையே எமது முதலெழுத்து

செய் நன்றியாய் அந்திமத்துள் ளானபிதாவை
சீயென்று சேய் நோக்கும் பொல்லாதகாலம்
உய்வுண்டு வாழவைத்தவர் வழி நடந்தால்
உயர்வுவரும் அது பொருட்டால் ஈருலகும்.

சீர் கல்வியோடு நாம் சிறப்புற்றோங்கிட
சோராது உழைத்து சிக்கனம் காணாதவர்
வார்த்தைக்கு வார்த்தை புத்திபல பகன்று
வழிகாட்டி நல் வாழ்வுதந்த பெருந்தகை.

தனித்துவமான எமது வரலாற்று ஆவணமவர்
தனித்து நாமில்லை குலகோத்திரம் அவரால்
மனிதராக்கி புவியில் முகவரிதந்த தந்தையே
முதலெழுத்து எமக்கு முழு நாமமுமவரே.

நாம் மண்வாழும் காலத்திலவர் வாழ்வது
நமக்கென்றும் பெருமையே தவிர வேறில்லை
நாமவரை கண்ணியமாய் நோகாது காத்து
நலனுக்காய் பிரார்த்திப்பதே பிரதியுபகாரமாகும்.






எம். ஐ. எம். அஷ்ரப்
சாய்ந்தமருது.
கவிதை புத்தகம் : 'இன்னும் உயிரோடு'
தொ : 077 9910393

**கவிஞர்களுக்கு ஒரு நற்செய்தி**

நீங்களும் இப்பகுதியில் சிறப்புக் கவிஞராக விரும்பினால் உங்களால் வெளியிடப்பட்ட ஒரு கவிதைப் புத்தகத் துடன் சமூகம் சார்ந்த இரண்டு கவிதைகள் எழுதி 'ஒளிஅரசி'க்கு அனுப்புங்கள்.

# பகிடி வதை

வாழக் கிடைத்த நேரங்களை
கண்விழித்துப் பசி மறந்து
தியாகம் செய்து கல்விக்கென
பெறுகின்றார் உயர்கல்வி வாய்ப்பை

பெற்றோர் ஓடியோடி உழைத்தபணம்
உண்ணாமல் மகிழாமல் சேர்த்தபணம்
அத்தனையும் முதலீடானது
மகனின் இந்நிலை காணத்தான்

யாவையும் கொட்டித்தீர்த்த பலன்
இந்நிலையில் உவகையுற்றது குடும்பம்
கற்பித்த பெருந்தகை பிறந்த ஊர்

பட்டம்பெற அத்தனை அவாவோடு
பல்கலைக்கழக வாசற்படியில்
அடியெடுத்துவைத்த முதல்நாள்
ஆக்கினை கண்டு சோர்ந்தது உள்ளம்
அள்ளியணைத்திட வேண்டியவர்களால்

ஏன் இங்கு வந்தோமென
தற்கொலைக்கும் புத்தி பேதலிப்பிற்கும்
ஆகுகின்றார் சொற்ப நாளைக்குள்
இதைத்தானா எதிர்பார்த்தது சமூகம்?
அதனால்
வேண்டும் பகிடி. வேண்டாம் வதை.




# பிரச்சினைகளையும் சவால்களையும் தகர்த்தெறியும் ஆற்றலை பெண்களே வளர்த்துக்கொள்ளவேண்டும்



இலங்கைத் திருநாட்டில் எடுத்துக்காட்டாக இருக்கும் பெண்களின் பெருமைகளை சமூகத்துடன் பகிரவே இப்பகுதி. அந்தவகையில் இம் மாத நட்சத்திர இல்லத்தரசியாக தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் இஸ்லாமிய கற்கைகள் அறபு மொழித்துறைப் பீடத்தில் சமூகவியல் பாட விரிவுரையாளர் மின்னதுல் சுஹிறா அவர்களுடனான அனுபவப்பகிர்வுகள்.

**உங்களைப் பற்றிய ஒரு சிறிய அறிமுகம்?**

நான் மின்னதுல் சுஹிறா. எனது குடும்பத்தில் 7 உறுப்பினர்கள். 4 பெண்பிள்ளைகளும் ஓர் ஆண் பிள்ளையும். நான்தான் குடும்பத்தில் முதற்பிள்ளை தற்போது நான் இரண்டு பிள்ளைகளின் தாய். எனது கணவர் சபீக் பிரதேசசபையில் FA ஆக கடமைபுரிகின்றார். நான் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய கற்கைகள் அறபு மொழித்துறைப் பீடத்தில் சமூகவியல் பாட விரிவுரையாளராகக் கடமைபுரிகின்றேன்.

எனது ஊரிலேயே ஆரம்பக் கல்வி கமு - அல் மதீனா வித்தியாலயத்திலும், உயர் கல்வியை அல் - மஸ்ஹர் பெண்கள் உயர்தரப் பாடசாலையிலும் பயின்றேன். கலைப் பிரிவில் பயின்றமையால் எனக்கு தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கற்கும் சந்தர்ப்பம் கிட்டியது. நான் சமூகவியலை விசேட துறையாகத் தெரிவுசெய்து முதல் வகுப்பில் சித்திபெற்றேன். அங்கு சுமார் ஒன்றரை வருடங்கள் சமூகவியல் துறையில் தற்காலிக விரிவுரையாளராகக் கடமைபுரிந்து பின் அரசதுறையில் பெண்கள், சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தராக ஆறு வருடங்கள் கடமைபுரிந்தேன். தற்போது தென்கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் தொழிலில் காலூன்றிவிட்டேன்.

**பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தராகப் பணிபுரிந்த நீங்கள் பல்கலைக் கழகத்தின் விரிவுரையாளர் என்ற இலக்கை எவ்வாறு அடைந்துகொண்டீர்கள்?**

விரிவுரையாளர் ஆகவேண்டும் என்ற எனது கனவுக்கு வயது பன்னிரெண்டு. பல்கலைக்கழகத்தில் எனக்கு அமைந்த நண்பர் குழுவின் தேடலுடனான சமூகப்பற்றும், பல்கலைக்கழக நூலகமும் தான் எனக்கு சமூகத்தின் மீதான அக்கறையைக் கொடுத்தது.

இந்தவகையில், ஒரு விரிவுரையாளராக வந்து நான் மக்களுக்கு சமூகம் பற்றிய தெளிவையும், எதிர்காலத்துக்குத் தேவையான சிறந்த ஆளுமையுள்ளோரையும் உருவாக்கவேண்டும். அதற்கான சிறந்த தளம் பல்கலைக்கழகம் என நான் கண்டுகொண்டேன்.

**உங்களுடைய இந்த சாதனைக்குப் பின்னால் உங்கள் குடும்பம் இருந்திருக்கும் அவர்களுடைய பங்களிப்பு பற்றி சிறிது கூறுங்களேன்?**

எனது இந்தச் சாதனைக்குப் பின்புலமான எனது குடும்பம் முதன்மை வகிக்கின்றது. எனது பெற்றோர் இருவரும் நன்றாகப் படித்தவர்கள். அவர்களது குடும்பச் சூழ்நிலைகள் தொழில்புரியவர்களாக அவர்களை உருவாக்கவில்லை. இருப்பினும் எவ்வளவு கஷ்டங்கள் வந்தாலும் தமது பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியை வழங்குவதில் கடும் முனைப்புடன் செயற்பட்டனர். எனது தாயின் சகோதர, சகோதரிகளின் வழிகாட்டல்கள், கல்விக்கான அவர்களின் பொருளாதார உதவிகள் எனப் பல விடயங்கள் இந்த வெற்றிக்குப் பின்னால் உள்ளன. எனது திருமணத்தின் பின்னர் எனது கணவரின் ஒத்துழைப்பு முக்கியமாக இருந்தது. நான் 3 நூல்களை எழுதி வெளியீடு செய்ததில் இவரின் பங்களிப்பு முக்கியமானது.

**பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் என்ற பணியையும், குடும்பப் பெண் என்ற**

**பணியையும் திறம்படச் செய்வது எப்படிச் சாத்தியமாகிறது?**

ஒரு பெண் என்ற வகையில் ஒரே நேரத்தில் பல கடமைகளைப் புரிவதென்பது மிகக் கடினமான விடயம்தான். இருப்பினும் ஒரு விடயத்தைச் செய்யமுடியுமான சாத்தியப்பாடுகளையும், வசதிகளையும் நாமே உருவாக்கிக்கொள்ள வேண்டும். நாம் செய்யும் காரியங்களால் பலருக்கு நன்மை கிடைக்குமென்றால், அதனைச் செய்யும் நம்பிக்கையும், உத்வேகமும் எமக்குள் இயல்பாகவே உருவாகும். இது எனது வாழ்க்கை அனுபவத்தில் நான் கற்றுக்கொண்டது.

**இன்று சமூகத்தில் இடம்பெற்றுவருகின்ற வன்முறைச் சம்பவங்களைப் பற்றி எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

இன்று சமூகத்தில் வன்முறைகள் பல வடிவங்களைப் பெற்றுள்ளது. முன்னைய காலங்களிலும் வன்முறைகள் இருந்துவந்தன. ஆனால், அக்காலத்தில் நிலவிய குடும்ப உறவுகளின் இறுக்கமான கண்காணிப்பும், கட்டுப்பாடுகளும் அவற்றைக் குறைப்பதில் அல்லது தவிர்த்துக் கொள்வதில் செல்வாக்குச் செலுத்தியது.

இன்று நாம் கற்றவர்களாக மாறியுள்ளோம், தெளிவு இருக்கின்றது. அந்தளவுக்கு வன்முறைகளும் அதிகரித்திருக்கின்றன. சட்டங்கள் இருக்கின்றன. அதனை அமுல்படுத்தும் மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஆனாலும் வன்முறைகள் குறையவில்லை. வன்முறைகளுக்கு உள்ளாகும் விகிதமும் அதிகரித்துள்ளது. பிரச்சினைகளைக் கண்டுகொள்ளாது சமூகத்தில் ஒதுங்கிப் போகின்றவர்களும் அதிகம்.

எமது சமூகப்புலத்தில் அதிக வன்முறைகள் வீட்டிலேயே இடம்பெறுகின்றன. இவற்றை வெளிப்படுத்தினால் குடும்ப கௌரவம் போய் விடும் எனக் கருதி அவ்வன்முறையை அப்படியே மூடிமறைக்கின்றனர். அல்லது தமது பிள்ளைகளின் எதிர்கால வாழ்வை எண்ணிப் பிள்ளைகளுக்காக சகித்து வாழ்கின்றனர். ஆனால், அது தற்காலிகமான தீர்வே தவிர, நிலைத்து நிற்கும் முடிவல்ல.

ஒரு குடும்பத்தில் இழைக்கப்படும் வன்முறையால் மனைவி மட்டும் பாதிக்கப்படுவதில்லை. வீட்டிலுள்ள ஒவ்வொரு பிள்ளையும் பாதிக்கப்படுகின்றது. அதன் சிந்தனைகள் முடக்கப்படுகின்றன. இவ்வாறு வன்முறையால் மொத்தக் குடும்பமுமே சிதைவுக்கு உள்ளாகின்றது.

**இன்று சமூகத்தில் இடம்பெற்று வருகின்ற வன்முறைச் சம்பவங்களிலிருந்து பெண்களைப் பாதுகாக்க உள்ள சட்டங்கள் போதுமானவை எனக் கருதுகிறீர்களா?**

நிச்சயமாக இல்லை. சட்டங்கள் இருக்கின்றன. ஆனால், அவை சரியான முறையில் அமுல்படுத்தப்படுகின்றனவா? அதற்கான போதுமான ஆளணிகள் இன்று உள்ளனவா? சட்டங்கள் தொடர்பான விழிப்புணர்வுகள் மக்களிடையே உள்ளனவா? - என்ற கேள்விகள் உள்ளன.

இந்த வன்முறைகள் தீவிரமடையும்போது மட்டுமே வெளியில் தெரியவருகின்றது. இவ்வாறு கூறுவதற்கான பின்னணியைப் பார்த்தால், குடும்ப கௌரவம், கணவனில் பெண் தங்கியிருத்தல் போன்ற விடயங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன. இத்தகைய சூழ்நிலைகள் நிலவும்போது சட்டம் இருந்தும் பயன்பாடு உடையதாக இல்லை.

**பெண்கள் எமது பாரம்பரிய பண்பாடுகளிலிருந்து அதிகம் விலகிச்செல்கின்ற நிலைதான் இவ்வாறான வன்முறைச் சம்பவங்களுக்கான காரணம் என வாதிடுவோரும் உள்ளனர். இதுபற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?**

காலாகாலமாக பெண்கள் பண்பாட்டின் குறியீடாகப் (Symbol of the culture) பார்க்கப்பட்டே வருகின்றனர். பண்பாடு என்பது என்ன? அது மனிதர்களால் சமூகத்தில் உருவாக்கப்பட்ட ஒன்று. எல்லா சமூகங்களும் தனக்கென்ற சமயத்தைக் கொண்டிருக்கின்றன. சமயங்கள் மனிதர்களை நேர்வழிப்படுத்தும் விடயங்களையே கொண்டுள்ளன. இருப்பினும், பண்பாடு என்பது முழுக்க முழுக்க சமயத்தின் கருத்துகளை உள்வாங்கியதல்ல. அது சமயம், பாரம்பரிய சிந்தனைகள், வழக்காறுகள், சடங்குநிலை விடயங்கள் எனப் பல கலவைகளால் ஆனது. ஒரு குறிப்பிட்ட காலத்தில் சமூகம் அங்கீகரிக்காத ஒரு பண்பாட்டின் விடயம், அடுத்த வருடத்திலோ அல்லது இன்னும் பத்து வருடங்களின் பின்போ அதே சமூகத்தால் அங்கீகரிக்கப்படுவதாக அமையும்.

**நிறைவாக இன்றைய சமூகத்தில் உயர் நிலையை அடைய விரும்புகின்ற ஒரு பெண்ணுக்கு நீங்கள் கூறவிரும்புவது என்ன?**

பெண்களைப் பொறுத்தமட்டில் சமூகத்தில் உயர்நிலையை அடைந்துகொள்ள அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். சாதாரணமாக ஓர் ஆணுக்குள்ள தடைகளை விட பல மடங்கு தடைகளையும் சவால்களையும் பெண் என்ற வகையில் எதிர்கொள்ளவேண்டிவரும். எனவே, அச்சந்தர்ப்பங்களில் அவற்றை உடைத்தெறியும் ஆற்றலைத் தனக்குள் வளர்த்துக்கொள்ள வேண்டும். பிரச்சினைகளுடன் வாழப்பழகும் திறனை வளர்த்துக்கொள்ள வேண்டும். எந்த விடயத்தை முன்னெடுக்க முனையும்போதும் அதனைப் பல கோணங்களில் ஆராய்ந்து திட்டமிட வேண்டும். இது எனது வாழ்க்கையில் நான் கடைப்பிடித்து வருகின்ற விடயங்கள் என்றார். ▲

**யாழ். பல்கலைக்கழகம் ஆங்கிலம் மொழியியல் - ஆங்கிலத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி வீரமங்கை ஸ்ராலினா யோகரத்தினம் அவர்கள் அடுத்த இதழின் இல்லத்தரசியாக அலங்கரிக்கவுள்ளார்.**



### ஆசிரியர்களுக்கான தொழில் முன்னேற்றக் கட்டுரை

# வாசிப்பே கல்விக்கான வழிகாட்டி

கருவறையிலிருந்து கல்லறைவரையும் கற்றல் நிகழ்கிறது என்பார்கள். அத்தகைய கற்றலின் வழி ஒவ்வொருவரிடமும் வெளிப் படுகின்ற அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றின் தேர்ச்சிநிலைகள் பரீட்சை களின் மூலம் மதிப்பீடுசெய்யப்படுகின்றன. பரீட்சை முடிவுகளின்படி கற்றவன், படித்த வன், பட்டம் பெற்றவன் என்று குறித்துச் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன.

ஒருவன் பரீட்சைக்குத் தோற்றாதவரை யில் அவனது கல்வித்தகைமையை மதிப்பீடு செய்தல் கடினமானதே. ஆனால், பாடசாலைக் குச் செல்லாத, பரீட்சைக்குத் தோற்றாத, பட்டம் பெறாத அறிவாளிகளும் படித்தவர் கள் என உலகம் மதிக்கும் பெரியார்களும் தமது நடத்தையால் வாழ்க்கைச் சிறப்பால் எம்மவர்களால் போற்றப்படுகிறார்கள் என்பதை எவருமே மறுப்பதற்கில்லை. பாடசாலைக் கல்வியில் ஒழுங்கமைக்கப் பட்ட பாடத்திட்டங்களோடு பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் கற்பித்தல் வளங்களோடு மாணவர்கள் வழிப்படுத்தப்படுகின்றனர். அவர்கள் கற்கின்றனர். அவர்கள் கற்றுக் கொண்டவற்றையும் ஆசிரியர்களால் கற்பிக் கப்பட்டவற்றையும் குறித்த வினாக்களுக் குச் சரியான விடைகளை எழுதுவதன் மூலம் மதிப்பீடு செய்தே மாணவர் சித்தியடைவதை உறுதி செய்கின்றனர். பலவேளைகளில் செயன்முறைப் பரீட்சைகளும் இடம்பெறுவ துண்டு. எவை, எப்படி நிகழினும் கல்வியின் அவசியமும் அதன் மகத்துவமும் உணர்ந்து கற்கத் துணியாத வரையில் பரீட்சைகளால் பெறப்படும் சான்றிதழ்கள் வெற்றுக் கடதாசி களே! கற்றதன்படி ஒழுகுதல் இங்கு எதிர் பார்க்கப்பட்டாலும் அதற்கான திறன்களும் நடத்தைகளும் பலவேளைகளில் மௌனமாகி அர்த்தமற்றவைகளாகியும் விடுகின்றன.

தரமான கல்வியைப் புகட்டுவதற்குத் தகுதியான ஆசிரியர்கள் அவசியம் என்பார் கள். கற்றலும் கற்பித்தலும் சிறப்பானதாகவும் பயன்மிக்கதாகவும் அமைவதற்கு ஆசிரியரின் மனப்பாங்கிலும் நடத்தையிலும் மாற்றம் தெரிதல்வேண்டும். அத்துடன் கற்றலையும் கற்பித்தலையும் தொடரும் ஒவ்வொருவரும் கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகிய மொழித் திறன்களின் வலிமையைப் பெற்றுக்கொள்வதும் அவசியமாகும். மொழியறிவின்றிக் கற்றலைத் தொடர்வதோ மேற்கொள்வதோ அரிதாகும். அவ்வாறே கற்பித்தலை மேற்கொள்வதிலும் சிறப்பான செயற்பாடுகள் தோன்றப்போவதில்லை.

தெளிவாகக் கேட்கும் திறன் உடையவர்கள் தெளிவாகப் பேசக் கற்றுக்கொள்ளுகிறார்கள். அவ்வாறே மொழியின் வழி பிறந்த எழுத்துக் களால் உருவாகும் சொற்களை ஒலிவடிவில் உச்சரித்து வாசிக்கும் திறனைப் பெற்றுக்கொள்ப வன் சிந்திக்கும் திறனையும் எழுதும் திறனை யும் வளர்த்துக்கொள்ளுகிறான். மொழியைப் பிழையின்றிப் பேச எழுத வேண்டுமானால் இலக்கணத்தைத் தெரிந்துகொள்வதும் மொழி வழி விரிந்த இலக்கியத்தை வாசித்து இரசிக் கவும் நயக்கவும் தெரிந்திருத்தல் வேண்டும்.

வாசிப்பு ஒவ்வொருவரிடத்திலும் கற்றல் நிகழ்வதற்கு ஒரு கருவியாகிப் புதிய இலக்கிய வடிவங்களை உருவாக்கும் திறனை வளர்த்துக் கொள்ளத் தூண்டுகிறது. வாசிப்பும் எழுத்தும் புதிய சிந்தனைகளுக்கு வலுவூட்டுகின்றன. கற்றவற்றை மீட்கவும் கற்றவற்றை உணர்ந்து தெளிந்து ஒழுகவும் வாசிப்பு வழிகாட்டுகிறது.

மொழியைப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் வாசிப்பு அவசியமானதாகும். கல்விச் செயற்பாடுகள் அனைத்திற்கும் வாசிப்பு அவசியமாகும். இன்றைய கம்பியூட்டர் யுகத்தில் வாசிப்பை நமது வாழ்க்கை பயணத்தின் பிரதானமான ஆதாரமாகக் கொள்வதே சிறப்பானதாகும்.


பாடசாலைகள் மாத்திரமல்ல ஊடகங்களும் நூலகங்களும் சனசமூக நிலையங்களும் பல்வேறு நோக்கங்களோடு இயங்கும் வேலைத் தளங்களும் எமக்குத் தினசரி பல்துறைசார்ந்த விடயங்களைக் கற்பிக்கின்றன. நாம் வாழும் இடங்களிலும் மேலான அறிவைத் தேக்கி வைத்திருப்பவை நூல்களே. கற்றதை மேலும் தொடர்வதற்கு ஊக்கம் தந்து தமிழ் மொழியின் இனிமையையும் வலிமையையும் எமக்கு உணர்த்துவதெல்லாம் நல்லோர், பெரியோர், அறிஞர், முன்னோர் எழுதிய நூல்களே. இன்று எமது வாசிப்பை மேம்படுத்துவதன் மூலமே எமது கற்றலை மேம்படுத்துதல் இயலுமானதாகும். அதன் வழியே எமது மொழியின் பண்பாடும் ஒழுக்கங்களும் பேணப்படும். எனவே, தமிழ் நூல்களின் மகிமையை உணர்வோம். அவற்றை வாசிப்பதன் மூலம் நிலைத்த எமது கல்வி, கலை, கலாசாரம் என்பவற்றைப் பாதுகாப்போம்.

வாசிப்பு ஒருவனைப் பூரணனாக்குகிறது. நூல்களையும் சஞ்சிகைகளையும் பத்திரிகைகளையும் வாசிப்போம். எமது தாய் மொழியாம் தமிழ்மொழியின் வழியே கல்வியை மேம்படுத்துவோம். வாசிக்கும் பழக்கம் மாணவரிடத்திலும் ஆசிரியர், பெற்றோர் யாவரிடத்திலும் நிலைக்க வழிகாட்டுவோம். ▲

# விளங்கினால் சிரிப்பு வரும்




ஓர் வளர்ச்சி அடைந்த நகரத்தில் உண்மை சொல்லும் இயந்திர நிலையம் ஒன்று இருந்தது. அங்கு 5 ரூபா நாணயம் ஒன்றை இந்த இயந்திரத்திற்குள் போட்டால் ஒவ்வொரு கேள்விக்கும் பதில் கிடைக்கும் என ஒரு வாசனம் இருந்தது. வம்புக்கு ஒரு சிறுவன் அங்கு சென்று 5/= நாணயத்தை இட்டு தனது அப்பா இப்பொழுது என்ன செய்து கொண்டு இருக்கின்றார்? என ரைப்செய்தான். உனது அப்பா இப்பொழுது ஒரு தேர்தல் மேடையில் பேசிக் கொண்டிருப்பதாக பதில் வந்தது. இல்லை. இல்லை. எனது அப்பா இறந்து 15 வருடங்கள் ஆகிவிட்டது. பொய். பொய் என மனதில் நினைத்துக் கொண்டு, இயந்திரத்தின் பொய் தன்மையை நிருபிப்பதற்காக நினைத்துக் கொண்டு இன்னொரு 5/= ஐ இட்டு மீண்டும் ஒரு கேள்வியை ரைப் செய்தான். எனது அம்மாவின் கணவர் இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறார்? அவர் இறந்து 15 வருடங்கள் ஆகி விட்டது என பதில் வந்தது. அச்சரியப்பட்டு திகைத்த சிறுவனுக்கு இன்னொடு பதிலும் வந்தது அது ''உனது அப்பாவின் பெயரை அறிய இன்னொரு 5/= இடவும்'' என இருந்தது. சிறுவன் தலை தெறிக்க அம்மாவிடம் ஓடினான்.



# கண்ணுக்கு விருந்தளித்த கூடலும் பிரிவும்



தலைவன் தலைவியைத் தனியாக சந்தித்தான். இருவரும் இணைந்த வேளையில் நான் உன்னைப் பிரியேன் என்று தலைவன் கூறுகிறான். ''வெண்ணிலவு நீ எனக்கு மேவு கடல் நான் உனக்கு'' என்று அவளுக்கு ஆதரவாக கூறி கலங்காதே என்று தேற்றுகிறான். ''பிரியமாட்டேன் என்று நீங்கள் சொல்வதால் பிரிவு கொடுமையானது'' என அறிகிறேன். என்று தலைவி கூறுகிறாள். மனம் வெதும்புகிறாள். இமை சுடுமளவுக்கு கண்ணீர் சிந்துகிறாள். அதைக்கண்ட தலைவன் துணுக்குற்றான். கையால் அவள் கண்ணீரைத் துடைத்து விட்டான்... இவ்வாறு ஒருயிரும் ஈருடலுமாக இருந்த தலைவன் தலைவியிடமிருந்து விடைபெற்றுக்கொள்கிறான். அப்பொழுது தலைவிக்கு ஆறுதலாக வெகுவிரைவில் திரும்பி வருவேன் என்று சொல்லிவிட்டு பிரிகிறான்.

தலைவி காத்திருக்கிறாள். எப்போது தலைவன் வருவான் என ஏங்கிக் கிடக்கிறாள். பிரிந்து சென்ற தலைவன். யாரும் எதிர்பார்க்காத வேளையில் மின்னலெனத் தலைவி முன் தோன்றினான். தலைவிக்கு பெருத்த மகிழ்ச்சி. தலைவன் முன்னைவிட இளமைத்துள்ளலுடன் இருந்தான். தலைவியைக் கண்ட தலைவனுக்கு உணர்ச்சி பெருக்கெடுக்கிறது. தலைவியிடம் கொஞ்சிக் குழைகிறான். தன் தலைவியை கானகம் செல்ல அழைக்கிறான். பூக்களோடு கூடிய கானகம் பருவம் கடந்த பின் அழகு குலைந்துவிடும். அந்த அழகு மறைவதற்கு முன் நுகர்ந்துவிட வேண்டும் என்பதே தலைவனின் அவா. இதனால் பேர் அமர்த்த கன்னியே! அதாவது, பெரிய அமர்த்த கண்ணையுடைய காதலியே! விரைந்து வருக என்று தலைவிக்கு அன்புக்கட்டளை இடுகிறான். அந்த அன்புக் கட்டளை இது

**காயா, கொன்றை, நெய்தல், முல்லை**
**போதவிழ் தளவமொடு பிடவு அவர்ந்து கவினிப்**
**பூ அணி கொண்டன்றான் புறவே**
**பேர் அமர்க்கன்னி ! ஆடுகம் விரைந்தே**

**- (பேயனார்)**

தலைவி தலைவனுடன் விரைகிறாள். மழை பெய்துகொண்டிருந்தது. காயா, கொன்றை, நெய்தல், முல்லை அரும்பி மலர்ந்த செம்முல்லை ஆகிய செடி, கொடி, மரங்களெல்லாம் மகிழ்ச்சியடைந்தன போல் தங்கள் தங்கள் மலர்களை மலரச்செய்து அழகை வெளிபடுத்தின. கானகம் பூந்தோட்டமாகி பூக்கள் அணிவகுத்து கண்ணைக் கவர்ந்தது. அந்தக் காட்சியைக் கண்டு இன்புற்ற தலைவன் தலைவியை இறுக அணைத்துக்கொள்கிறான். இருவரும் இயற்கையின் அழகில் மெய்மறந்து கொள்கின்றனர். அவர்கள் கண்ணுக்கு எல்லாமே அழகாய்த் தெரிகிறது.



# அதிர்ஷ்டம்!

ஒரு நகரை மன்னர் ஒருவர் ஆண்டு வந்தார். ஒருமுறை தன் நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் ஒழுங்காக வேலை செய்கிறார்களா, சோம்பேறிகளாக வாழ்கிறார்களா? என்று அறிய வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டது. எனவே, அதை அறிந்துகொள்ளும் பொருட்டு, திடீரென்று விருந்து ஒன்றுக்கு ஏற்பாடு செய்தார். எல்லா மக்களும் விருந்து, கேளிக்கைகளில் கலந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் அறிவிப்புச் செய்திருந்தார்.

விருந்துக்குக் கூட்டம் கூட்டமாக மக்கள் சென்ற வேளையில் மன்னர் மட்டும், மாறுவேடம் போட்டுக்கொண்டு நகரைச் சுற்றிவந்தார்.

அவர் ஒரு கிராமத்துக்குள் தம்முடைய குதிரையைச் செலுத்திகொண்டு வந்து பார்த்தபோது, அக்கிராமத்தில் ஒருவருமே இல்லை. எல்லாரும் மன்னரின் விருந்துக்காக அரண்மனைக்குச் சென்றிருந்தனர்.

ஆனால், ஓரிடத்தில் ஒரேயொரு பெண் மட்டும் கடுமையாக வேலை செய்துகொண்டிருந்தாள். இதைக் கண்டு ஆச்சர்யப்பட்ட மன்னர் அவளிடம் நெருங்கிச் சென்று, ''பெண்ணே, இந்தக் கிராமமே காலியாக இருக்கிறதே... இங்குள்ளவர்கள் என்னவானார்கள்?'' என்று கேட்டார்.

அவளோ தன் வேலையிலேயே மும்முரமாக மூழ்கி இருந்த காரணத்தினால், தன் பார்வையைத் திருப்பாமலேயே சொன்னாள்.

''உங்களுக்கு விஷயமே தெரியாதா? இன்று நம் மன்னரின் அரண்மனையில் திடீர் விருந்துக்கு ஏற்பாடாகி உள்ளது. அதில் மன்னர் பரிசு கொடுப்பார் என்றும் அறிவிப்பு செய்திருந்தனர். ஆகவே, விருந்து சாப்பிடும் பொருட்டும், தங்களுக்கு ஏதாவது அதிர்ஷ்டவசமாகப் பரிசு கிடைக்காதா... என்ற நப்பாசையாலும் மக்கள் அங்கே சென்றிருக்கின்றனர்!'' என்றாள்.

''இவ்வளவு விபரங்களைத் தெரிந்து வைத்திருக்கக்கூடிய நீ, விருந்துக்குப் போகவில்லையா? அதிர்ஷ்டமிருந்தால் உனக்கும் மன்னரின் பரிசு கிடைக்குமில்லையா?'' என்று கேட்டார்.

அந்தப் பெண் வேலையைச் செய்துகொண்டே சொன்னாள்.

''ஐயா, எனக்கு அதிர்ஷ்டத்தின் மேல் நம்பிக்கை இல்லை. ஆனால், நான் செய்யும் இந்த வேலைக்குத்தக்க கூலி கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. மேலும், நான் விருந்துக்குப் போய்விட்டால், இன்றைய தினத்தில் செய்யும் வேலையை இழந்துவிடுவேன். அதனால், கிடைக்கும் கூலியை இழந்துவிடுவேன். எனக்கு ஐந்து குழந்தைகள் இருக்கின்றனர். அவர்களைக் காப்பாற்றவேண்டிய கடமையும் எனக்குண்டு. ஆகவேதான், நான் போக விரும்பவில்லை!'' என்றாள்.


இதைக் கேட்ட மன்னர் மனமகிழ்ந்தார்.

''பெண்ணே, என்னை நிமிர்ந்து பார். உன் சக மக்களிடம் நீ கூறு. நீங்கள் அதிர்ஷ்டத்தை விரும்பி மன்னரைப் போய்ப் பார்க்கச் சென்றீர்கள். உங்களுக்கு அதிர்ஷ்டமில்லை. ஆனால், வேலையை விட மனதின்றிக் கடுமையான வேலை செய்துகொண்டிருந்தேன். என் உழைப்பு அதிர்ஷ்டமாக மாறி, மன்னரையே இங்கு அழைத்துக் கொண்டு வந்துவிட்டது. மன்னரே தேடி வந்து பரிசுகள் தந்தார் என்று கூறு'' எனக் கூறி, ஒரு பணமூட்டையை அவள் கையில் தந்துவிட்டு சென்றார்.

**கடுமையான உழைப்பு அதிர்ஷ்டத்தை அழைத்து வரும். அதிர்ஷ்டத்தைக் தேடிக் கொண்டு நாம் போகக் கூடாது. அதிர்ஷ்டம் நம்மைத் தேடிக் கொண்டு வர வேண்டும். அதுதான் உண்மையான அதிர்ஷ்டம்.**

# சிவகாமியின் சபதம்

## தொடர் - 02



இதுவரை அவ்வளவு பெரிய நகரத்தைப் பார்த்திராத பரஞ்சோதி பிரமித்துப்போய் நிற்க, கதவைத் திறந்த சந்நியாசி, ''மருதப்பா நகரில் ஏன் கலகலப்பு குறைவாக இருக்கிறது, அதற்குள் ஏன் கோட்டைக் கதவை அடைத்து விட்டீர்கள் ஏதாவது விசேஷம் உண்டா?'' என்றார்.

''சுவாமி நன்றாகத் தெரியவில்லை. ஆனாலும் இன்று காலையிலிருந்து நகரம் ஒரே கோலாகலமாய்த்தான் இருந்தது'' எனக்கூறி முடிக்கு முன், ''கோலாகலமா? ஏன்?'' என்றார்.

தங்களுக்குத் தெரியாதா? இன்று சிவகாமி அம்மையின் நடனம் சக்கரவர்த்தியின் சபையில் அரங்கேறுவதாக இருந்தது. அதனால்தான் ஜனங்களுக்கு அவ்வளவு கொண்டாட்டம்'' என்ற மருதப்பனிடம், ''எந்தச் சிவகாமி அம்மை?'' என்றார் பிக்கு.

''வேறு யார்? ஆயனரின் மகள் சிவகாமிதான்!'' இதுவரை பேச்சைக் கவனியாதிருந்த பரஞ்சோதி, ''யார்? ஆயனச் சிற்பியாரா?'' என்று கேட்டான்.

''ஆமாம்'' எனக்கூறிய மருதப்பனிடம்,

''சிவகாமி அம்மையின் நடனம் அரங்கேறுவதாக இருந்தது பிறகு.....?'' என்றார்.

''சபைகூடி அரங்கேற்றம் நடந்துகொண்டிருந்த வேளையில் அவசரச் செய்தி வந்திருப்பதாகத் தெரிந்ததாம். சக்கரவர்த்தி எழுந்து செல்ல குமார சக்கரவர்த்தியும் மண்டல மண்டலத் தாரும் கூடச் சென்றுவிட்டனராம். அவர்கள் திரும்பி சபைக்கு வராததால் நாட்டியம் நடுவில் நின்றுவிட்டதாம். அஸ்தமித்ததும் கோட்டைக் கதவுகளை அடைக்கும்படி எனக்கு கட்டளை வந்தது. என்னவாக இருக்கும் சுவாமி; யுத்தம் ஏதாவது வரக் கூடுமோ? கோட்டை மதிலைச் சேர்ந்தாற்போல சுமார் நூறு அடி அகலமுள்ள அகழி இருந்தது. குனிந்து பார்த்தால் கிடுகிடு பள்ளம். உள்ளே கருமை நிறங் கொண்ட தண்ணீர் இருந்தது.

பிரயாணிகள் வந்த பாதை இரண்டாகப் பிரிந்து வலப் புறமாகவும், இடப்புறமாகவும் கோட்டை மதிலைச் சுற்றி அகழிக் கரையோடு சென்றது. வீதியில் பயணம் செய்தவர்களும் இடப் புறமாகவும், வலப்புறமாகவும் மதிலைச் சுற்றிச் சென்றனர். அகழியின் மேலிருந்த குறுக லான மரப்பாலத்தில் பிக்குவும், பரஞ்சோதியும் நடந்துசென்றனர்.

இதென்ன இவ்வளவு சின்னப் பாலமாக இருக்கிறது. கோட் டைக்குள் வண்டிகளும், வாக னங்களும் எப்படிச் செல்லும்?'' என்றான் பரஞ்சோதி.

''இந்த வாசல் வழியாகப் போக முடியாது. வடக்கு வாசலிலும், கிழக்கு வாசலிலும் பெரிய பாலங் கள் இருக்கின்றன. அவற்றில் யானைகள் கூடப்போகலாம்'' என்றார் சந்நியாசி.

கோட்டை வாசலருகில் ஒரு பெரிய இரும்புத் தகடும் அரு கிலே கோலொன்றும் கிடந்தது. அக்கோலினால் தகட்டிலே தட்டினார் சந்நியாசி.

மேலிருந்து ''யார் அங்கே'' என்றொரு குரல் கேட்டது.

''மருதப்பா நான் தான்'' என்ற சந்நியாசிக்கு, ''தாங்களா? இதோ வந்துவிட்டேன் அடி களே'' என்று பதலளித்தபடி ஓடிவந்தான்.

சிறிது நேரத்தில் கோட்டைக் கதவின் தாழ்திறக்க ஒருவர் மட்டும் உள்ளே செல்லக்கூடியளவில் பாதை தோன்றியது.

முன்னால் சென்ற பிக்குவைத் தொடர்ந்து நடந்த பரஞ்சோதி நகரின் பக்கம் பார்வையைத் திருப்பியபோது எங்கு பார்த்தாலும் பிரகாசமான தீபங்களினால் நகரமே ஒளியமயமாகக் காணப்பட்டது. ஆயிரக்கணக்கான மனிதர்கள் பேசுவதுபோன்ற ஒருவித ஒலிநயம் கேட்டது.

''ஆனால், காஞ்சி சக்கரவர்த்தியுடன் யுத்தம் செய்யக்கூடிய அரசன் இந்தப் பூகோளத்திலேயே கிடையாதே. அப்படிச் சொல்லமுடியாது மருதப்பா. இன்று மணிமகுடம் தரித்து மன்னாதி மன்னர்களாயிருப்பவர்கள் நாளை...? அதைப்பற்றி ஏன் நாம் பேசுவான்?'' என்றபடி நடந்தார். கூடவே நடந்த பரஞ்சோதி, ''கோட்டைக் கதவைச் சாத்தும்படி கட்டளை பிறப்பித்திருக்கும்போது உங்களை மட்டும் எப்படி உள்ளே விட்டான்?''

''எல்லாம் இந்தக் காவித்துணியின் மகிமைதான்'' என்ற புத்த பிக்கு, நீ என்னுடன் புத்த விகாரைக்கு வருகிறாயா?'' என்றார்.

''இல்லை சுவாமி. நாவுக்கரசர் மடத்துக்கே போய் விடுகின்றேன். வேறு எங்கேயும் தங்க வேண்டாமென்று எனது தாயாரின் கட்டளை'' என்ற பரஞ்சோதியிடம்,

"சரிநாம் பிரியவேண்டியதுதான்" என்றபடி பிரிந்து நடந்தனர்.

ஆங்காங்கே ஜனங்கள் கூட்டமாக நின்ற இடங்களில் எல்லாம் சிவகாமி அம்மையின் நடன அரங்கேற்றம் நின்று போனதைப் பற்றியும், கோட்டைக் கதவுகளைச் சாத்தும்படி கட்டளை பிறப்பித்திருப்பதைப் பற்றியுமே பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டபடி நடந்தான். இப்படி அவன் வீதிவலம் வந்துகொண்டிருந்தபோது திடீரென்று ஓரிடத்தில் ஏகக் கூச்சலும், குழப்பமும் உண்டாவதைப் பார்த்தான்.

ஜனங்கள் நாலாபுறமும் சிதறி ஓடினார்கள்.

''யானைக்கு மதம் பிடித்துவிட்டது. ஓடுங்கள், ஓடுங்கள்'' என்ற கூக்குரலோடு சேர்ந்து குழந்தைகள் வீறிடும் சத்தம், பெண்கள் அலறும் சத்தம், வீட்டுக் கதவுகள் தடார்... தடார்... என மூடும் சத்தம் என எல்லாம் சேர்ந்து அவ்விடமே அல்லோல கல்லோலப்பட்டது.

எந்தப் பக்கம் ஓடுவது எனத் தெரியாது திகைத்து நின்ற பரஞ்சோதி, தனக்குச் சற்று முன்னால் சௌந்தர்ய தேவதை போன்ற ஒரு பெண்ணையும் அவளது தந்தை போன்ற தோற்றமுடைய பெரியாரையும் பல்லக்கில் சுமந்து சென்றவர்கள் அதனை அப்படியே வைத்துவிட்டு ஓடுவதைக் கண்டான். ஒரு கணம் என்ன செய்வது எனத் தெரியாது தயங்கி நின்ற பரஞ்சோதி, அடுத்த கணமே ஒரு தீர்மானத்திற்கு வந்தவனாய் கையிலிருந்த மூடையை அவிழ்த்து அதற்குள்ளிருந்த வேலை எடுத்து தடியிலே பொருத்தினான்.

பொருத்திய வேலை வலது கையிலே தூக்கிப் பிடிப்பதற்கும், யானை அருகில் வருவதற்கும் சரியாக இருந்தது. அவ்வளவுதான் பரஞ்சோதி தனது முழுப் பலத்தையும் கொண்டு வேலை வீசினான். அது யானையின் இடது கண்ணுக்கருகில் பாய்ந்தது. தடித்த தோலைப் பொத்துக் கொண்டு உள்ளே சென்றுவிட்டது. பயங்கரமாக ஒருமுறை பிளிறியபடி வேலைப் பிடுங்கி காலின் கீழே போட்டு மிதித்தது. மெல்ல வாலிபன் நின்ற பக்கம் திரும்பியது.


மதங்கொண்ட யானையின் மீது வேலை எறிந்தால் என்ன நடக்கும் என்பதை பரஞ்சோதி உணர்ந்தே இருந்தான். யானை தன்பக்கம் திரும்பியதைக் கண்டவன் பல்லக்கு இருந்த திசைக்கு எதிர்த்திசையில் ஓடத் தொடங்கினான். யானை தனது பெரிய தேகத்தைத் திருப்பியபடி தன்னை நோக்கி விரைந்து வருவதைக் கண்டவன் அருகிலிருந்த ஒரு சந்தியில் திரும்பி ஓடியபோதுதான் பெரிய விசாலமான ஒரு வீதியில் தான் மட்டும் சென்றுகொண்டிருப்பதை உணர்ந்தவன், மெல்லத் திரும்பியபோது மத யானையைக் கட்டுப்படுத்துவதற்கு வேறு யானைகள் கூட்டமாகச் செல்வதைக் கண்டு மெல்ல மெல்ல நடந்தான்.

அப்போதுதான் தான் செய்துவிட்ட செயலின் விபரீதம் பற்றி அவனுக்குப் புரிந்தது. சிவிகையில் இருந்த இளம் பெண்ணினதும், பெரியவரினதும் முகம் மனக்கண்ணில் வந்துபோனது. அவர்களைக் காப்பாற்றும் பொருட்டே வேலை எடுத்து வீசியதை எண்ணியபோது வியப்பாக இருந்தது. அந்தப் பெண் யாராக இருக்கும்? ஒருவேளை அரங்கேற்றம் தடைப்பட்டதாகக் கூறப்படும் சிவகாமி அம்மை இவர் தானோ? சிந்தித்த வண்ணமே அருகிலிருந்த மேடை மீது சாய்ந்தான். நித்திரா தேவி அவனை மிருதுவாக அணைத்துக் கொண்டாள்.

**(தொடரும்...)**

# “ஒளிஅரசி” குறுக்கெழுத்துப்போட்டி

## ‘ஒளிஅரசி’ குறுக்கெழுத்துப் போட்டி இல. 18



**போட்டி முடிவு திகதி 25.06.2015**

### இடமிருந்து வலம்

01. எமது நாடு
03. சிறைத்தண்டனை பெற்ற கைதி
04. திசை
05. இலக்கு
06. நேரம் (குழம்பியுள்ளது)
07. ஜீவனுள்ளது
11. ஒரு நாடு
12. சாவு
14. கால்கள் வழங்காதவன் (திரும்பியுள்ளது)
15. காற்றில் பறப்பது
16. இது ஐந்து உண்டு
17. ஒரு வைர மரம்
18. முடி (திரும்பியுள்ளது)
19. தாய்
20. சுவையான ஒரு பழம்
21. திசைகளில் ஒன்று
22. சேரி
23. உடை வகைகளில் ஒன்று
25. ஆணை

### மேலிருந்து கீழ்

01. இல்லத்தை ஆழ்பவள்
02. சிங்கள நாளிதழ்
04. இருமணங்கள் இணைவது
08. கப்பல் தரிக்குமிடம்
09. அதிக விலை என்பதன் எதிர்ப்பதம்
10. சிங்கள ஆதிநூல்
17. யானையின் இன்னொரு பெயர்
24. அதிகாலைப்பொழுது
26. அரைவாசி
27. இடம் ஒன்று (திரும்பியுள்ளது)

**இல16 இல் ரூ. 500/= பரிசு பெறும் அதிஷ்டசாலிகள்**

வே. சரஸ்வதி,
அம்பன், குடத்தனை.


திருமதி. சாந்தி கிருஷ்ணா,
கொக்கட்டிச்சோலை,
மட்டக்களப்பு.

ஏ. வீ. எப். வுஸ்லா,
209, கல்பொக்கை,
வெலிகாமம்.

**சரியான விடைகளை எழுதி பாராட்டு பெறுபவர்கள்**

கே. இராஜகோபால்,
வட்டுக்கோட்டை.
சி. யசோதா, குடத்தனை.
மு. ஹரினி, மன்னார்.
திருமதி. கு. கிறிஸ்ரியன்,
ஊர்காவற்துறை.
சு. குகாயினி, குடத்தனை.
ச. பரமேஸ்வரி, மட்டக்களப்பு.
பி. எஸ். ஏ. தாஹிர்,
காத்தான்குடி - 03.
எச். எம். எம். கமால்தீன்,
ஹொம்மாதகம.

‘ஒளி அரசி’ குறுக்கெழுத்துப் போட்டி இல. 17





அனுசரணை

**Be Es En Traders**

அச்சக பொருட்களின் மொத்த விற்பனையாளர்

Tel: +94 11 2348418

# ஆயுளை அதிகரிக்க ஒரேவழி யோகாசனமே



நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற முதுமொழி மனிதவாழ்வில் சந்தோசமாய் இருக்கவும், சுகதேகியாக வாழவும் கூறப்பட்டதாகும். குறைவற்ற செல்வம் இருந்தும் உடல் குறைகளுக்கு பல லட்சம் செலவழிக்கும் காலமாய் உள்ளது. பல லட்சம் செலவழித்து உடல் உறுப்புக்கள் மாற்றி 100 வருடம் வாழ்ந்துள்ளதாக விஞ்ஞானம் இன்றுவரை நிரூபித்திருக்கவில்லை. 100 வருடம் வாழ்வான் என்று எந்த சத்திரசிகிச்சை நிபுணரும் அத்தாட்சிப்பத்திரம் கொடுக்கமுடியாது. ஆயுளைநிர்ணயித்து கொடுப்பவன் இறைவன். அவனின்றி அணுவும் அசையாது. ஆண்பலம் ஆயுள் பலம், ஆசணம் பயின்றார் ஆயுள் பலம்; ஆறிலும் சாவு நூறிலும் சாவு இப்படி பல பொன் மொழிகளைக் கூறி சங்க காலத்தில் நோய் நொடி அற்று வாழ்ந்தார்கள்.

இயற்கை கொண்ட சகல வைத்தியங்களும் நடைபெற்றதுமாய் வாழ்ந்தார்கள். இந்து மதம், உறுப்பு மாற்றங்கள் எத்தனையோ யுகங்களுக்கு முன்பு மாற்றும் வரலாறு உள்ளது. உ+ம் - கண்ணப்பநாயனார், சிவனுக்கு கண்ணில் கோலாறு; அதற்கு அவர் ஊறுக்கு ஊல் என்று தனது கண்ணைத்தோண்டி இறைவனுக்கு வைத்தார். கலியுகத்தில் கண்மாற்றும் சிகிச்சை நடைபெறுகின்றது. அடுத்தது, பொற்கைப்பாண்டியன் தான் செய்தவறுக்காக தனது கையைவெட்டினான். பொற்கைப்பாண்டியன் ஊனமாய் இருக்கக்கூடாது என்று அவனுக்கு பொன்னிலாலன கை ஒன்று செய்து பொருத்தினார்கள். முதலாவது கை மாற்றும் சிகிச்சை தற்போது செயற்கை முறையில் கால், கை பொருத்துகின்றனர். விஞ்ஞான வளர்ச்சிக்கு இந்து மதம் தான் காரணம் என்றுதான் நான் கூறுவேன். லட்சக்கணக்கில் பணத்தைச் செலவழித்து நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் சத்திரசிகிச்சை செய்து அப்பணம் கரைந்து விடுகின்றது. செல்வம் உள்ளவர்கள் சத்திரசிகிச்சை செய்வார்கள் செல்வம் அற்றவர்கள் நோயுடன் மடிந்து விடுவார்கள். இதிலிருந்து விடுதலை பெற என்ன செய்யலாம்? யோகாசனம் மூலம் நாம் விடுதலை அடையலாம். பணத்தை செலவளித்து நோய் வேண்டுபவர்கள் இருக்கிறார்கள் அவர்கள் எப்படி நோயாளியாக மாறுகின்றார்கள்? அதற்கு என்ன காரணம்? தவறான நண்பர்கள் மூலம் ஆரம்பம் என்றுதான் கூற வேண்டும். கஞ்சா, அபின், மதுபானவகைகள், சிகரட், பீடி, மற்றும் போதைவஸ்துக்கள் இவற்றினை பாவிக்கும்போது நல்ல சுகமாய் இருக்கும் பாவிக்க ஆசை உண்டாகிக் கொண்டே இருக்கும் ஆனால் நல்ல இரத்தம் உடம்பில் இருக்காது இதனால் உடலின் உள் உறுப்புக்கள் பாதிப்பு படிப்படியாக ஆரம்பிக்கும் அப்பொழுதுதான் அவருக்குத்தெரியவரும். வைத்தியரிடம் உடல் பரிசோதனை செய்ய ஓடுவார். உமது ஈரல் பாதிப்படைந்து விட்டது என்று டாக்டர் கூறுவார். அப்பொழுது தான் தெரியும் தான் விட்ட தவறு தனக்கே உலையாகி விட்டதென்று. அதுபோல் இன்று பலர் நடமாடும் பிணமாய் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். இதற்கு என்ன செய்யலாம்? மனக்கட்டுப்பாட்டைத்தான் முதலில் கொண்டுவர வேண்டும்.

**(யோகசன படிமுறைகள் தொடரும்...)**

# கேள்விகளே சாவிகள்!

வாழ்க்கை என்பது ஒரு சூதாட்டம் என்றே பலர் கருது கிறார்கள். இதன் வெற்றி, தோல்விகள் அதிர்ஷ்டத்தின் மூலமாகவே நிர்ணயிக்கப்படுகின்றன என்றும் அநேகமானோர் நினைக்கிறார்கள். வாழ்க்கையின் வெற்றி, தோல்விகள் தேர்தல் முடிவுகள் போல் குழப்பமானவை அல்ல. தேர்வின் முடிவுபோல் தீர்க்கமானவை.

என்னிடத்தில் உதவிகள் கேட்டுச் சில இளைஞர்கள் வருவதுண்டு. அதில் அதிகமான பேர் வேலை வாங்கித் தரும்படித்தான் கேட்பார்கள். ''என்ன வேலை?'' என்றால், ''ஏதாவது வேலை'' என்பார்கள். வருத்தப்படாதீர்கள். இவர்கள் வெற்றி பெறுவது கடினம். என்ன வேலை என்கிற தெளிவு இல்லாமல் ஏதாவது ஒரு வேலை என்றால் நான் அவருக்கு எந்த வேலைக்கு முயற்சி செய்வது? என்னுடைய வேலையைத்தான் அவருக்குத் தரமுடியும்! இது மிக முக்கியமான விஷயம். எதை அடைய வேண்டும் என்கிற தெளிவு உங்களுக்கு இருந்தால்தான் அதை நீங்கள் அடைய முடியும். அடைய வேண்டியது எது என்கிற முடிவே இல்லை என்றால் எதை அடைய முடியும்? நமக்கு எது வேண்டும் என்கிற தெளிவு இருந்தால்தான் அது கிடைக்கும். கிடைத்தாலும் ருசிக்கும். இல்லையென்றால் கிடைக்காது. கிடைத்தாலும் ருசிக்காது. காரணம், கிடைத்ததே தெரியாது. ஹோட்டலில்கூட பல பேர் என்ன சாப்பிடுவது என்ற தெளிவே யின்றி மெனுகார்டை, பட்சணப் பட்டியலை வெறித்து வெறித் துப் பார்ப்பார்கள். எதையும் முடிவு செய்யமாட்டார்கள். இந்தக் குழப்பவாதிகள் முறையாக வெற்றிக்கனியைப் பறிப் பது கடினம். எனவே, வாழ்க்கையில் உங்களுக்கு என்ன வேண்டும் என்கிற தெளிவு கண்டிப்பாக இருக்க வேண்டும்.

இப்போது நாம் இருக்கும் நிலை என்ன? இனி அடைய வேண்டிய நிலை என்ன? அதற்கு நாம் செய்ய வேண்டிய முயற்சிகள் எவை? எவை என்கிற விழிப்பு நம்முள் தோன்றி விட்டால் நமக்கு வெற்றி நிச்சயம். எங்கே இருக்கின்றோம்? எங்கே போகவேண்டும்? எப்படிப் போகப் போகின்றோம் என்கிற தெளிவு பிறந்துவிட்டால் வெற்றி நிச்சயம்.

அமெரிக்க ஜனாதிபதியாகப் புகழுடன் விளங்கியவர் ஜோன் எஃப். கென்னடி. அவர் வெள்ளை மாளிகையில் தம்மைக் காண வந்திருக்கும் பார்வையாளர்களுடன் நாள்தோறும் சில நிமிடங்கள் செலவிடுவார். தம்மைப் பார்க்க வந்திருந்த இளைஞர்கள், பள்ளி மாணவர்களுடன் சிறிது நேரம் பேசுவார். பார்வையாளர்களில் பளிச்சென்று புன்னகையுடன் இருந்த மாணவன் கன்னத்தைத் தட்டி, ''உன் எதிர்கால லட்சியம் என்ன?'' என்றார் கென்னடி. பளீரென்று பதில் சொன்னான் அந்த மாணவன். ''இன்று நீங்கள் இருக்கும் இடத்தில் நாளை நான் இருக்கவேண்டும். இதுதான் என் இலட்சியம்'' என்றான். விழிகளை உயர்த்திவிட்டு, "குட்" என்று வாழ்த்திவிட்டு கென்னடி நகர்ந்தார். அமெரிக்க ஜனாதிபதியாக ஆவரதுதான் இலட்சியம் என் அந்தச் சிறுவன் பிற்காலத்தில் அப்படியே ஆனான். அவன் வேறு யாருமல்ல... புகழ் பெற்ற பில் கிளிண்டன். அவர் எண்ணம் வெறும் ஆசையோ, கற்பனையோ அல்ல. தீர்க்கமான தீர்மானம். அதனால் அது நடந்துவிட்டது. எல்லோருக்கும் இப்படி நடக்குமா? இப்படி நடக்கின்றதா என்று என்னை ஏளனமாகப் பார்க்கும் மூடர்களுக்கு ஒன்று சொல்கிறேன். நம்பிக்கைகள் நடக்காமல் போகும் பட்டியலில் நம் பெயர் ஏன் இருக்கவேண்டும்? பலித்தவர் பட்டியலில் நம் பெயர் இருக்கவேண்டும் என்று நினைக்கக் கூடாதா? மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. இந்த இளைஞனைப் பற்றிச் சொன்னேன். நான் சந்தித்த வேறு ஒரு இளைஞனைப் பற்றிச் சொல்லவா? செழிப்பாக விளைந்திருந்தான் அந்த இளைஞன். ஒரு கூட்டத்தில் என்னிடத் தில் சம்பந்தமில்லாமல் அபத்தமாகக் கேள்விகள் கேட்டான். பொறுமை யாக, ''தம்பி... என்ன பண்றீங்க?'' என்று நான் கேட்டேன். ''அப்பாவுக்கு உதவி ஒத்தாசையாக இருக்கின்றேன்'' என்றான். இந்த நூற்றாண்டில் இப்படி ஓர் இளைஞனா என் இன்ப அதிர்ச்சி யுடன், ''அப்பா என்ன பண்றார்?'' என்றான். ''சும்மா வீட்ல இருக்கார்'' என்று வெடிகுண்டு வீசினான் அந்த இளைஞன். தான் காலத்தை வீணாக்கு கின்றோம் என்ற குற்ற உணர்வே இல் லாத இவன் எப்படி முன்னேற முடியும்? இப்போது நாம் இருக்கும் நிலை என்ன? நம் குடும்பத்தின் நிலை என்ன? நாம் வளர, முன்னே என்ன செய்யலாம் என்கிற சின்னச் சின்னக் கேள்விகள் உங்களுக்குள் பிறந்துவிட்டால் கொஞ் சம் கொஞ்சமாக விடைகள் கிடைக்கத் தொடங்கும். ஒன்றை மறந்துவிடா தீர்கள். எவ்வளவு பெரிய கதவுக்கும் தாழ்ப்பாள் சின்னதுதான். பூட்டோ அதை விடச்சின்னது. சாவியோ... பூட்டை விடச் சின்னது. சின்னச் சாவியால் பூட் டைத் திறக்கலாம். பூட்டைத் திறந்தால் தாழ்ப்பாளைத் திறக்கலாம். தாழ்ப் பாளைத் திறந்தால் பெரிய பெரிய கதவு களையே சுலபமாகத் திக்கலாம். எனவே, சின்னச் சின்னக் கேள்விகள், பெரிய பெரிய கோட்டை வாயில்களைத் திறக்கப் போகும் சாவிகள். இதை நீங்கள் உணர்ந்தால் வெற்றி நிச்சயம்.

# பெண் சுயதொழில் முயற்சியில் ஓர் படிக்கல்
# 20,000/= - 70,000/= வரை வருமான வாய்ப்பு

ஆசிய நிறுவனத்தின் உதவியுடன் திருச்சி தேசிய தொழில்நுட்பக் கழகத்தின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் அரவணைப்பு மையத்துடன் தமிழ்நாடு தொழில் முனையும் மகளிர் சங்கம் மற்றும் இலங்கை யாழ். பல்கலைக்கழகம், இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் என்பன இணைந்து சுயதொழில் செய்யும் பெண்களுக்கான பயிற்சிப்பட்டறையை சென்ற மாதத்தில் சில நாட்கள் நடத்தியிருந்தன.

பெண்களுக்கான சுய தொழிலின் அவசியம், திறன் விருத்தி, இணைய வசதிகள், சந்தைப்படுத்தல் மேம்பாடு என்பன குறித்து ஆராயப்பட்டு விளக்கப்பட்டன. இந்திய, இலங்கைப் பெண்களுக்குள் சுமுகமான உறவை ஏற்படுத்தவும் பெண்களின் சுய தொழிலில் பல முன்னேற்றங்களை உண்டு பண்ணவும் இவர்களிடையேயான தகவல் பரிமாற்றத்திற்குத் துணைபுரியவும் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இப்பயிற்சிப் பட்டறையின்போது சுயதொழில் செய்யும் பெண்களுடனான கருத்துக்கணிப்பு ஒன்றை 'ஒளி அரசி' மேற்கொண்டது. அக்கருத்துக்கணிப்பின் முடிவுகள் கீழே தரப்படுகின்றன.

**வேலைக்குச் செல்லாத பெண்களுக்கு சுயதொழில் என்பது சரியானது -**

சரியானது - 84%, ஓரளவு சரியானது - 16%, தவறானது - 0%

**குடும்ப முகாமைத்துவத்துடன் சுய தொழிலையும் இணைத்துச் செய்யும் போது மன அழுத்தம் -**

அதிகரிக்கின்றது - 10%, மட்டுப்படுத்தப்படுகின்றது - 22%, குறைகின்றது - 68%

**சுயதொழில் செய்வது சமூக மேம்பாட்டிற்கு.**

உதவுகின்றது - 96%, ஓரளவு உதவுகின்றது - 4%, உதவவில்லை - 0%

**இலத்திரனியல் சாதனங்களில் நேரத்தை வீணாக்காது குடும்ப பொருளாதாரத்தை மேம்படுத்த சுயதொழில் உதவுகின்றது -**

சரி - 92%, ஓரளவு சரி - 8%, தவறு - 0%

**பெண்களின் சுயதொழிலுக்கு ஆண்கள் உதவுவது -**

அதிகமாக - 4%, ஓரளவாக - 76%, வழங்கவில்லை - 20%

**வாசிப்பு என்பது இல்லத்தரசிகளுக்குத் தேவையான ஒன்று -**

சரி - 60%, ஓரளவு சரி - 30%, தவறு - 10%

**சுயதொழிலினால் கிடைக்கும் வருமானம்.**

| | |
|---|---|
| 10,000 - 20,000 | - 50% |
| 20,000 - 40,000 | - 28% |
| 40,000 - 75,000 | - 22% |

உணவு, தேநீர் போன்ற அனைத்து வசதிகளுடனும் ஆறு நாட்கள் பயிற்சிப்பட்டறை நடத்தப்பட்டு சிறப்பான சுய தொழில் முயற்சியாளர்கள் தெரிவுசெய்யப்பட்டு இந்திய - இலங்கை நட்புறவு செயற்றிட்டத்தில் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர். இறுதி நாளில் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது.



# உலகின் முதலாவது பெண் மருத்துவரும் விரிவுரையாளருமான எலிஸபெத் பிளாக்வெல்

பெண் கல்விக்கு தடைகளும், எதிர்ப்புகளும் மேற்கொள்ளப்பட்ட காலகட்டத்தில் மருத்துவத்துறையில் தன்னம்பிக்கையுடன் காலடியெடுத்து வைத்தவர் எலிஸபெத் பிளாக்வெல். இவர், உலகிலேயே முதலாவது பெண் வைத்திய நிபுணராகவும், விரிவுரையாளராகவும் உயர்ந்து வழங்கிய சேவை போற்றுதற்கரியது.


எலிஸபெத் பிளாக்வெல் 1821ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 3ஆம் திகதி இங்கிலாந்தில் பிரிஸ்டெலுக்கு அருகாமையில் பிறந்தார். இவர் அவரது 11 ஆவது வயதில் அமெரிக்காவுக்குச் சென்று குடும்பத்துடன் குடியேறினார். 1838ஆம் ஆண்டு அவரது தந்தையின் மறைவின் பின்னர் தாயும் சகோதரியும் இணைந்து ஓர் ஆரம்பப் பாடசாலையை நிறுவினர். முக்கியமாக பெண்களின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணை புரியும் வகையில் இந்தப் பாடசாலை அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

ஆனால், மருத்துவத்துறையில் தேர்ச்சி பெறவேண்டும் என்ற நோக்கத்துடனே வாழ்ந்ததால் தனிமையாக சுதந்திரமாக ஒரு வைத்தியரின் துணையுடன் மருத்துவக் கல்வியை மேற்கொண்டார். ஆனால், மருத்துவக் கல்வியை கற்பதும் அத்துறையில் நுழைவதும் பெண்களுக்கு இலகுவாக இருக்கவில்லை. 1847ஆம் ஆண்டு நியூயோர்க்கில் ஜெனிவா மருத்துவக் கல்லூரியில் அனுமதி கிடைத்தது.

அங்கு கல்வி கற்பதற்கு அனுமதி கிடைத்தபோதிலும் பொதுமக்கள் மத்தியிலும், சக வைத்தியத்துறை அங்கத்தவர்கள் மத்தியிலும் கடும் எதிர்ப்பும் விமர்சனங்களும் சரமாரியாக தொடர்ந்தன. ஆனால், மனம் தளராது உறுதியாகவும், தன்னம்பிக்கையுடனும் இத்தகைய சவால்களை எதிர்கொண்டு படிப்படியாக வெற்றிப்பாதையில் வீறுநடை பயின்றார். 1849ஆம் ஆண்டு மருத்துவக்கல்வியை நிறைவுசெய்து வைத்திய நிபுணராக வெளியேறினார்.

வைத்திய நிபுணராகவும், விரிவுரையாளராகவும் பாரிஸ், லண்டன் ஆகிய நகரங்களில் தொழில்புரிந்து பின்னர் நியூயோர்க் நகரில் தனியார் மருத்துவமனையொன்றில் சேவைபுரிந்தார். 1853இல் நியூயோர்க் மருத்துவமனை என்ற பெயரில் ஏழைப்பெண்ணுக்கும், சிறார்களுக்குமென வைத்திய சிகிச்சை நிலையமொன்றை நிறுவினார். இந்தச் சேவைக்கு அவரது சகோதரி எமிலி பிளாக்வெல் பக்கபலமாக இருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். மருத்துவ சேவையில் புகழ்பெற்று விளங்கிய இவருக்கு 1857இல் பிரித்தானிய மருத்துவத்துறையில் சிறந்த முதற் பெண் வைத்தியராகவும் விரிவுரையாளராகவும் அங்கத்துவம் வகித்தார்.

1890ஆம் ஆண்டு நியூயோர்க்கில் பெண்களுக்கென தனியான மருத்துவக்கல்லூரி ஒன்றினை நிறுவினார். முக்கியமாக ஏழைப்பெண்களுக்கும், சிறார்களுக்கான சுகாதார கல்வியை வழங்கும் பயிற்சியும் வழங்கப்பட்டது. ஆரோக்கிய வாழ்விற்கு சுகாதார பழக்க வழக்கங்கள் முக்கியமானது என்பதை கருத்திற்கொண்டே பயிற்சிகளை வழங்கினார்.



பெண்களுக்கு மருத்துவக் கல்வி தடைசெய்யப்பட்டிருந்த காலத்தில் துணிச்சலுடன் மருத்துவக் கல்வி பயின்றவரே உலகின் முதலாவது பெண் வைத்திய நிபுணராகவும் விரிவுரையாளராகவும் திகழ்கிறார்.

அவரது வைத்தியக்கல்லூரியில் தேர்ச்சி பெற்ற முதலாவது வைத்திய நிபுணர் சோபீயா யெக்ஸ்'பிளாக் என்னும் பெண்மணி லண்டன் நகரில் முதலாவது பெண் வைத்தியர்களுக்கான மருத்துவக் கல்லூரி ஒன்றினை ஆரம்பித்தார். இதனைத் தொடர்ந்து எலிஸபெத் பிளாக்வெல் லண்டனுக்கு திரும்பிவந்து தனியார் மருத்துவமனையில் சேவைபுரிந்து பெண்களுக்கான மருத்துவக் கல்லூரிகளில் விரிவுரையாளராகவும் பணியாற்றி வந்தார். 1877ஆம் ஆண்டு தனது மருத்துவ சேவையிலிருந்து ஓய்வுபெற்றார். 1910ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் திகதி அவரது சொந்த இல்லத்தில் இறைபதமடைந்தார். சவால்களைத் தாங்கி வரலாறு படைத்துள்ள முதலாவது மருத்துவ பெண்மணி என்றும் நினைவுகூரப்படவேண்டியவராவார்.



# அத்தை

அவளை அத்தை என்று சொந்தத்தோடு அழைக்கக்கூடிய உறவுக்காரர்கள் எவரும் இப்போது அவளுடன் இல்லை; என்றாலும் அவள் அந்தத் தெருவுக்கே அத்தைதான். தெரு என்றா சொன்னேன்; அத்தைக்குச் சொந்தத்திலேயே ஒரு வீடு இருப்பது உண்மைதான். அதை முழுவதும் வாடகைக்கு விட்டுவிட்டு தெருப்புறம் உள்ள திண்ணையை அடைத்து ஓர் அறையாக்கிக் கொண்டு அவள் குடித்தனம் நடத்தினாலும் சதாநேரமும் அவளைத் தெருவிலேயே காணலாம். அவள் தெருவில் திரிவதைப் பார்த்தால், அந்த வீடு மட்டுமென்ன இந்தத் தெருவே எனக்கு சொந்தம் என்று அவள் ஆக்கிரமித்துக்கொண்டதுபோல இருக்கும். அத்தை வருகிறாள் என்றால் சதா காலமும் வாய் ஓயாமல் குரைத்துக் கொண்டிருக்கும் தெரு நாய்கூட 'கப்சிப்' என்று காலிடையே வாலொடுக்கி வழிவிட்டுச் செல்லும். அத்தைக்கு அப்படி ஒரு மகிமை!

அந்த மகிமைக்குக் காரணம்," அத்தையின் சரீரமா, சாரீரமா என்று தீர்மானிக்க ஒரு விசேட பட்டிமன்றமே நடத்தலாம்.

சரி. முதலில் அத்தையின் தோற்றப் பொலிவைக் காணலாம். அரக்குச் சிவப்பில் ஒரு புடவை. மேலே ரவிக்கை கிடையாது. வயதாகிவிட்டதால் வேண்டாமென்று முடிவுகட்டிவிட்டாளோ அல்லது இந்த உடம்பைச் சில மூட்டைகளாகக் கட்டி சுமப்பதைவிட உடம்பாகவே சுமந்துவிடலாம் என்ற நினைப்பில் ரவிக்கையை விட்டாளோ தெரியாது. எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து அத்தை ரவிக்கை அணிந்து நான் பார்த்தது கிடையாது. தலைமுடி நரையும் கருமையுமாக அடர்ந்து ஒரு முக்கால் அடி நீளம் இருக்கும். அவள் என்னவோ அதை அடிக்கடி அள்ளி அள்ளித்தான் செருகிக்கொள்வாள். ஆனால், அது அவிழ்ந்து சிங்கத்தின் பிடரி மாதிரி சிலுப்பிக்கொண்டு நிற்கும்.

அத்தை நிச்சயமாக ஏதோ வயதுக்குப் பிறகுதான் விதவையாகி இருக்கவேண்டும். ஆனால், அவள் முகத்தில் பிறவியிலேயே அப்படி ஒரு களை இருப்பதுபோலத் தோன்றும். ஆனால், அத்தைக்குத்தான் ஒரு விதவை என்கிற பிரக்ஞையே கிடையாது. நல்ல காரியமோ, கெட்ட காரியமோ, திருநாளோ, பெருநாளோ எதுவாயிருந்தாலும் 'நான் முந்தி' என்று ஏதாவது ஒரு நியாயத்தை நீட்டி முழக்கிக்கொண்டு வந்து முன்னால் நின்றுவிடும் அவரை 'வராதே' என்று தடுக்க எவருக்குத் தைரியம் உண்டு?

ஒரு தடவை ஏதோ காரியமாக வெளியே புறப்பட்ட சுப்பு சாஸ்திரிகள், அத்தையை எதிர்கொண்டு தரிசனம் செய்துவிட்டுத் திரும்பி உள்ளே போனதை அத்தை பார்த்துவிட்டாள். அவ்வளவுதான். அத்தை நடுத்தெருவில் வந்து நின்றுகொண்டு ஒரு போர் முழக்கமே செய்துவிட்டாள்.

''ஏண்டா சுப்பு? உன் பெண்டாட்டி கழுத்திலே மட்டும் இரும்பாலயா அடிச்சுப் போட்டிருக்கு? ஓஹோ!... இந்தக் காலத்திலே மத்தவா மாதிரி 'எனக்கென்ன போச்சு'ன்னு திருசூரணத்தை நெத்தியிலே இழுத்துண்டு வந்தா நன்னாத்தான் இருக்கும்'' என்று ஆரம்பித்து எப்போதோ இறந்துபோன கற்பனையில்கூட முகம்தெரியாத அந்தப் புருஷனை நினைத்துக்கொண்டு அழ ஆரம்பித்துவிட்டாள்.

ஒரு நாளைக்கு ஒரு தடவையாவது அத்தைக்கு அழுதுவிட வேண்டும். அவளுக்கு அழுகை தாராளமாக வரும். அதேமாதிரி ஒரு நாளைக்கு ஒரு தடவை

யாவது எவரையேனும் சபித்துவிட வேண்டும். அதுவும் அவளுக்குச் சரளமாக வரும். எவரும் வகையாகக் கிடைக்கவில்லை என்றால் தெருவில் வந்து நின்றுகொண்டு வெயிலைச் சபிப்பாள் பாருங்கள்.

''எழவெடுத்த வானம்! எப்படி எரிச்சுப் பொசுக்கறது!'' என்பாள். சரி. மழைதான் பெய்யட்டுமே விட்டுவிடுவாளா? ''அட சனியன் புடிச்ச வானமே என்ன கேடுகாலத்துக்கோ இப்படி பொத்துண்டு ஒழுகிறது. என்ன அழியற காலமோ?'' என்று புலம்புவாள். சரி. மழையுமில்லாமல், வெயிலுமில்லாமல் இருந்தால்பேசாமல் இருந்துவிடுவாள் என்று நினைக்கிறீர்களா? ம்ஹூம்!

''அட கட்டேலே போற வானமே பேயவும் பேயாம காயவுமே காயாமே இப்படி சூனியம் புடிச்சுட்டுதே'' என்று அங்கலாய்த்து ஆர்ப்பரிப்பாள்.

இவ்வளவு கொடிய வார்த்தைகளைச் சகட்டுமேனிக்கு அள்ளி வீசிக்கொண்டிருக்கும் அத்தையின் மனசு அவ்வளவு கடுமையானதல்லவென்று அந்தத் தெருவாசிகள் அத்தனை பேரும் புரிந்துவைத்திருந்ததனால் அவள் மீது ஒரு பரிதாபம் கொண்டிருந்தனர்.

அத்தைக்கு ரொம்பவும் பிடித்த விடயம் சாவு. சதாநேரமும் ஊரிலே எந்தப் பகுதியில் யார் வீட்டில் இழவு சம்பவிக்கிறது என்று கழுகு மாதிரி அலைந்துகொண்டிருப்பாள். அந்த விடயத்தில் மட்டும் அத்தை சாதி, மதம் என்ற பாகுபாட்டுக்கெல்லாம் இடம் வைப்பதே இல்லை. இழவு வீட்டில் இருப்பவர்களை விலக்கிக்கொண்டு பிலாக்கணப் பாடல்களை அட்சர சுத்தமாக உச்சரித்தவாறு மதயானை பிரவேசித்தது போல் அடித்துப் புரண்டு புகுந்து எல்லாவற்றையும் ஒரு கலக்குக் கலக்கிவிடுவாள். அவளது அந்தக் கோலத்தைப் பார்த்து அழவே கூடாது என்று வைராக்கியச் சித்தத்தோடு இருக்கும் ஆண்பிள்ளைகள் கூட அழுதுவிடுவார்கள். அவளை அடக்குவதற்குள் எல்லோருக்கும் போதும்போதுமென்றாகிவிடும். கடைசியில் தனது சக்தி அனைத்தையும் இழந்து கண்ணீர் வற்றி, தொண்டை வரண்டு கந்தல் துணி மாதிரி வந்து விழுவாள். அதன் பிறகு இரண்டு நாட்களுக்கு யார் கண்ணிலும் படாமல் தனது இருப்பிடத்தில் கிடந்து தூங்குவாள். அதில் அவளுக்கு அவ்வளவு சுகம் பிறக்கும்.

தெருவிலுள்ளவர்கள் அனைவருமே தங்கள் வீட்டில் எவருக்காவது உடம்பு சரியில்லை என்றால் அந்த விடயம் அத்தையின் காதுகளுக்குப் போகாமல் கட்டுப்பாட்டோடு பாதுகாப்பார்கள். அப்படித் தப்பித்தவறித் தெரிந்ததோ டாக்டர் வருவதற்கு முன்பாக அத்தை வந்துவிடுவாள்.

ஒரு தடவை வக்கீல் குமாஸ்தா தாணுவையர் நாலு நாட்கள் ஜுரத்தில் படுக்கையில் விழுந்துவிட்ட விடயம் அத்தையின் கவனத்துக்கு எப்படியோ கொண்டுவரப்பட்டுவிட்டது. அத்தைக்கு வீட்டில் இருப்புக்கொள்ளவில்லை.

தாணுவையர் வீட்டு வாசற்படியில் ஏறும்போதே ''ஏன்னடிம்மா, என்ன ஆச்சு? நன்னா இருந்தானே? நாலு நாளைக்கு முந்திக்கூடப் பார்த்தேன். ஆத்திலே குளிச்சிட்டு வந்துண்டிருந்தான். அதுக்குள்ள இப்படி ஆகுமோ'' என்று அங்கலாய்த்தவாறு வந்த அத்தையைத் தாணுவின் மனைவி, ''ஒண்ணும் இல்லே அத்தை. சாதாரண ஜுரம்தான். இப்போ பரவாயில்லை'' என்று சமாதானம் கூறி உள்ளே அழைத்துக்கொண்டு போனாள்.

''என்னடீ பொண்ணே. ஒண்ணுமில்லேங்கறே? என்னமோபோல பாக்கறானே... கால் கையெல்லாம் வீங்கி இருக்கே'' என்று அவள் சொல்லச் சொல்ல தாணுவின் மனைவிக்கு வயிறு கலங்க ஆரம்பித்துவிட்டது. அத்தையைக் கண்டதனாலோ என்னவோ தாணுவும் பேயறைந்தாற்போல் பேந்தப்பேந்த விழித்தார். திரும்பி வந்தபொழுது வாசலில் இருந்த எவரிடமோ இரகசியமென்று நினைத்துக்கொண்டு தாணுவின் சாவை அத்தை பிரகடனப்படுத்தினாள்.

''ஏண்டாப்பா நின்னுண்டிருக்கேள். ஆகவேண்டியதைப் பாருங்கோ. பிராப்தம் அவ்வளவுதான்'' என்று சொல்லிவிட்டுப்போன அரை மணி நேரத்துக்கெல்லாம் தாணுவையரும் போய்விட்டார்.

ஒரு குழந்தையைப் பார்த்தால் 'இதன் முடிவு எவ்வாறோ? எப்போதோ?' என்றுதான் அவளுக்குத் தோன்றும். ஒரு கலியாணத்தைப் பார்த்தால், 'அந்த மணப்பெண் மஞ்சளோடு போவாளா அல்லது மஞ்சளை அவனோடு அனுப்புவாளா?'

அதனை 'அத்தையின் வாக்கு, அத்தையின் நாக்கு' என்று ஊரார் சொல்லிக்கொண்டிருக் கிறார்கள். ஆனால், உண்மை அதுவல்ல. அத்தைக் குச் சாவு அவ்வளவு பரிச்சயமானது. அவளிடம் அது தப்பிக்கவே முடியாது. அப்படிக் கண்டு பிடிப்பாள். அதனுடன் அவளுக்கு அவ்வளவு பழக்கம். அவள் தனது வாழ்க்கை முழுவதும் சாவைத்தவிர வேறெதைக் கண்டாள்?

அவள் ஜென்மமெடுத்தபோதே அவளுக்குப் பிறவி தந்தவள் அந்த முயற்சியிலேயே செத் துப்போனாள். அத்தையைப் பொறுத்தவரை சாவு என்று அவள் பிறப்போடு சம்பந்தப்பட்ட விடயம். அதன்பிறகு தந்தை, மாற்றாந்தாய், உடன்பிறந்தோர், புருஷன், மாமனார், மாமியார் என்று வரிசையாக அவள் வாழ்க்கை முழுவதும் மரணமெனும் சோக நாடகத்துக்கு வெள்ளி விழாவே கொண்டாடியிருக்கிறாள்.

மரணத்தில்தான் எத்தனை வகைகளை அவள் கண்டிருக்கிறாள். ''தண்ணீர் கொண்டு வா'' என்று கேட்டுவிட்டுத் தண்ணீர் கொண்டு வருவதற்குள் மரணத்தைத் தாவி அணைத்துக் கொண்டவர்கள்; வயசான காலத்தில் இழுத் துப் பறித்துக்கொண்டு இதோ, அதோ என்று ஏச்சம் காட்டித் திடீரென வாழ்க்கைப் புதிருக்கு விடை கண்ட அமைதியில் உறங்குவதே போன்று மரணம் எய்தியவர்கள்; ஒரு தெருவின் ஒரு பக்கத் திலிருந்து மறுபக்கம் தாண்டுகின்ற இடை வெளியில் வாழ்க்கை என்ற நெடிய நதியை ஒரே தாண்டாகத் தாண்டி, குறுக்கே வந்த வண்டியின் சக்கரத்தடியில் சிக்குண்டு நைத்து எறியப்பட்டவர்கள்; பாலாடையில் பாலூற்றிக் கொண்டிருக்கையில் புரைக்கேறி மூச்சு நின்றுபோன மரணங்கள்; மல்லிகைப்பூப் பந்த லில் கொடியென்ற மயக்கத்தில் மரணத்தை வலிய இழுத்து மாண்டுபோனவர்கள்; புதுச் சேலை கட்டிக்கொண்ட பூரிப்பில் அடுப்பிலே பொங்கி வழிந்த பாலை இறக்கப் போய்ச் சேலை எரிந்து மாண்டு போனவர்கள். ஓ... மரணங் களில்தான் எத்தனை வகை. பிறவிக்கு ஒரு வழிதான் உண்டு. மரணத்துக்கு எத்தனை வழிகள்.

அவற்றையெல்லாம் பார்த்துப் பார்த்து அத் தைக்கு மரண பயம் போய்விட்டது மட்டுமல்ல, பழக்கத்தின் காரணமாக அதில் ஒரு லயிப்பே ஏற்பட்டுவிட்டது அவளுக்கு. அவள் சாவிலேயே வாழ்ந்தவளாதலால் வானசாஸ்திரி ஆகாயத்தை அண்ணாந்து பார்த்து காலத்தைக் கணிப்பது மாதிரி, வாழ்க்கையைக் குனிந்து பார்த்து அதில் மரணத்தையே தேடி அது வருமுன் அதன் குறிகளிலேயே அவள் தெரிந்துகொள் வாள். அவளைப் பொறுத்தவரை சாவில்லாத வாழ்க்கை அவளுக்குச் 'சப்'பென்றிருந்தது. அவள் அழுவதிலேயே சுகம் கண்டுவிட்ட வள். ஏனெனில், அவள் சுகம் சுகம்' என்று நாடிப்போனதெல்லாம் அவளை அழவே வைத்திருக்கின்றன. ஒரு குழந்தையைப் பார்த் தால், 'இதன் முடிவு எவ்வாறோ? எப்போதோ?' என்றுதான் அவளுக்குத் தோன்றும். ஒரு கலி யாணத்தைப் பார்த்தால், 'அந்த மணப்பெண் மஞ்சளோடு போவாளா அல்லது மஞ்சளை அவனோடு அனுப்புவாளா?' என்று அவள் மனம் தொடங்குகின்ற வாழ்க்கையின் முடிவுக ளையே கற்பனை செய்யும்.

விளையாட்டு வெறியில் குதூகலமாய்ச் சிரித்த வாறு வரும் குழந்தையை அவள் சட்டென்று தடுத்து ஓடி நிறுத்துவாள். ''ஏண்டா இப்படி ஓடறே? ஓடப்படாது. ஓடினா கீழே விழுவே. விழுந்தால் அடிபடும்; அடிபட்டால் ஆசுபத்திரிலே கொண்டு போடுவா; அப்புறம் நீ நொண்டி ஆயிடுவே. நொண்டி ஆயிட்டா அப்புறம் ரெண்டு பக்க மும் கட்டை வெச்சிண்டுதான் நடக்கணும்.''

இப்படியாகத்தான் அவளுக்குக் குழந்தை களுக்குக் கூட புத்தி சொல்ல முடியும்.

எல்லோருக்கும் இப்படி சாக்குருவி ஆருடம் சொல்லும் அத்தை, தனக்கு ஒருநாள் சாவு வரும் என்ற பிரக்ஞையே இல்லாமல் வாழ்கிறாள். அவள் சாவை எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாந்து தனக்கு அது இல்லவே இல்லை என்று முடிவு செய்துவிட்டாளோ? அவளைப் பொறுத்தவரை வாழ்க்கையைவிடச் சாவு ஒன்றும் அவ்வளவு துக்கிரித்தனமாக இல்லைபோலும்.

அந்த ஊர் மிகவும் சிறிய ஊரானதால் அத்தை யின் ஆசைக்கு ஏற்ப அடிக்கடி நிகழுவதில்லை. அப்போதெல்லாம் அத்தையின் மனத்துள் சோகம் கனத்துப்போகும். அதற்குப் போக் கிடமில்லாமல் அவள் தவியாய்த் தவிப்பாள். ஆத்திரமும், ஆங்காரமும் கொள்வாள். அந்த மரண தேவதையையே ஒரு யாக குண்டத்தி லிருந்து எழுப்புவதற்கு மந்திர உச்சாடனம் செய்வது மாதிரி எல்லாரையும் சபிப்பாள்.

கடைசியில் அந்த வீட்டின் திண்ணையின் மீதுள்ள தனது குடியிருப்பு அறையில் ஒரு குத்து விளக்கேற்றி வைத்துவிட்டுத் தரையைக் கண் ணீரால் மெழுகியவாறு சோகமும் கவித்துவமும் மிகுந்த ஒப்பாரிப் பாடலை ஊர் முழுதும் ஒலி பரப்பி அழுவாள். பல நாட்கள் நடுநிசி வரையி லும் சில நாட்களில் விடியும் வரையில்கூட அவள் பாடிப்பாடி அழுதுகொண்டே இருப்பாள்.

'வாழ்க்கை என்னும் நாணயத்தின் இன் னொரு பகுதி மரணம் என்ற உண்மையை மறந்துவிட்டு வாழ்ந்துகொண்டிருப்பவர்க ளுக்கு அதை நினைவுறுத்தும் பணிக்காகச் சபிக்கப்பட்டவளோ இவள்' என்று உணரும்படி இருக்கும் அவளது ஓலம்...

ஆனால், இந்த அத்தையும் ஒருநாள் சாவாள். அந்தத் தெருவும் ஒருநாள் அவளுக்காக அழும்! ▲



வன்முறைகளால்
மரணித்த
மாதர்களின்
கண்ணீர் கதைகள்

# இசைப்பிரியாவுடன் ஒருகணப் பொழுது

தமிழ் பெண்கள் காலம் காலமாக பல்வேறு துன்புறுத்தல்களுக்கு ஆளாக்கப் பட்டு வந்துள்ளனர் பள்ளி மாணவிகளான கிருசாந்தி தொடக்கம் வித்தியாவரையும் ஊடகப் போராளியான இசைப்பிரியா உட்பட பல குடும்பப் பெண்களும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்ட கொடூர நிகழ்வுகள் தமிழ் பெண்கள் வாழ்வில் ஜீரணித்துவிடமுடியாத ஒன்றாகும். அதே போன்று யாழ் பல்கலைக் கழக உடற் கூற்றியல் தலைவரும் மருத்துவருமான ராஜினி திரணாகம கொல்லப் பட்டமையும், பதுளை மாவட்டத்தின் பசறையில் சரஸ்வதி என்னும் ஆசிரியருக்கும் இத்தகைய கொடூர மரணமே சம்பவித்தது. இது போன்ற பல பெண்கள் கொல்லப் பட்டமையும் எவரும் மறந்துவிடமுடியாது. தமிழ் பெண்கள் சிட்டுக்குருவிகளாய் துள்ளிநடைபோடும் இளமைக்காலம் பொன்னானது. அந்தக் காலத்தை எவராலும் மறந்துவிட முடியாது. அந்த இளமைக் காலத்தில் மிகச் சிறந்த சாதனைப் பெண்களாக சரித்திரம் படைத்து எமது மண்ணில் வலம்;வந்து தமது உயிரையும் துறந்து விட்ட தமிழ் பெண்கள் வரிசையில் இசைப்பிரியாவுடன் ஒரு கணப்பொழுது...

1981ஆம் ஆண்டு மேமாதம் 2ஆம் திகதி தமிழ் அன்னையின் கரங்களில் அழகிய பெண் குழந்தையாக வந்துதித்தாள் சோபனா. சிறு வயதி லிருந்தே சுட்டித்தனமாக செயற்பட்ட அவள் பதினொரு வயதில் வேம்படி மகளிர் கல்லூரி மண்ணில் சிட்டுக்குருவியாய் காலடி பதித்தாள். வேம்படி மகளிர் கல்லூரி அன்னையவள் தன் அன்புக்கரங்களால் அவளை அரவணைத்தாள். அழகாலும் மென்மையாலும் தனது இரக்க சுபாவத்தாலும் எவரையும் கவர்ந்திழுத்து விடுவாள் சோபா. அழகில் மட்டுமல்ல அறிவிலும் சிறந்து விளங்கிய அவளுக்கு எப்போதும் நண்பர்கள் கூட்டம் அதிகம். எல்லோரையும் கலகலவென சிரிக்க வைத்துக் கொண்டே இருப்பாள். அன்பான குடும்பத்தில் நான்கு பெண்சகோதரிகளுடன் கூடிப்பிறந்த அவள் அந்த வீட்டின் செல்லப்பிள்ளை. மகிழ்ச்சியு டன் அவள் காலம் கழிந்தது. யாழ் மண்ணின் இடப்பெயர்வு அவளையும் தன் சொந்த மண்ணிலிருந்து இடம்பெயர வைத்தது. தனது பாடசாலை, தனது நண்பிகள் என்று அனைத்தை யும் விட்டுப்பிரிய மனமில்லாமல் விட்டுப் பிரிந்தாள் சோபா. அந்த இடப்பெயர்வு அவளுக்கு வலியைக் கொடுத்தது. இடம்பெயர்ந்து சென்ற அவள் குடும்பத்துக்கு வன்னிமண் அடைக்கலம் கொடுத்தது. மக்களின் இன்னல்களை நேரடி யாக கண்ணுற்ற அவள் மனம் வெதும்பினாள். எனினும்கல்வியின்தேவையுணர்ந்து மல்லாவியில்

அவள் தனது கல்வியைத் தொடர்ந்தாள். கல்வி கலைகளில் சிறந்து விளங்கிய அவள் நண்பி களுடன் தனது தமிழ் தேசிய உணர்வுகளை பகிர்ந்து கொள்ளத் தொடங்கினாள். தனது சொந்த மண்ணை விட்டு வந்த வலி அவளது உணர்வுகளை பாதித்ததை அடிக்கடி வெளிக் காட்டத் தொடங்கினாள். தமது சொந்த மண்ணை மீண்டும் சென்றடைந்து தனது பாடசாலை யாகிய வேம்படி மகளிர் கல்லூரியில் தனது கல்வியைத் தொடர வேண்டும் என்ற ஆவலை தன் நண்பிகளுக்கு கூறுவாள். அவளது விடு தலை உணர்வு மேலிட நண்பிகளுடன் சேர்ந்து தமது மண்ணின் விடுதலையை நோக்கிய பாதையில் புறப்பட்டாள்.

வீட்டில் செல்லமகளாக நடைபோட்டு தனது நண்பிகளுடன் சேர்ந்து உல்லாசமாக சுற்றி சிறகடித்துப் பறந்த அந்த சிட்டுக்குருவிக்கு தனது வாழ்க்கையில் கொள்கை ரீதியாக ஏற்படுத்திக் கொண்ட மாற்றம் ஆரம்பத்தில் கடினமாகவே இருந்தது. கொள்கை ரீதியான மிகத் துடிப்புடனான பற்று பல இன்னல்களையும் தாண்டி அவளை விடுதலைப்பாதையில் வீறு நடை போடவைத்தது. சோபனா விடுதலை நோக்கிய பயணத்தில் இசைப்பிரியாவாகினாள். மிகத் துடிப்பான ஓர் ஊடகப் போராளியாக வடி வம் எடுத்தாள். அவளது கலைநயமும் மக்களை நேசிக்கும் தன்மையும் ஊடகத்துறையில் அவளை மிளிர வைத்தது. அவள் இசை, நடன, நாடக துறைகளில் சிறந்து விளங்கினாள். தமிழ்தேசிய உணர்வுகளை மக்களிடையே கொண்டு செல்வதில் மிகச் சிறந்த பங்காற்றி னாள். தமிழ் மக்களிடையே கலை உணர்வுகளை வளர்த்தாள். அந்த நிலையில் அவளுக்குள்ளே ஒரு அழகான காதல் மலர்ந்தது. அந்தக் காதல் திருமணத்தில் முடிந்தது. அவளது கலை அறிவை யும் மக்களுக்கு அவள் ஆற்றிய சேவைகளையும் நேசித்த விடுதலைப் போராளி ஒருவரை நேசித்து அவரது கரம்பற்றினாள் இசைப்பிரியா. அவர்களது இல்லறம் இனிதே நடைபெற்றது. அவர்களது விடுதலைப் போராட்டத்துக்கான பணியும் தொடர்ந்தது. மக்களுக்கான சேவையை மகத்தாக ஆற்றிய அந்தத் தம்பதிகள் மகிழ்வு டனே வாழ்ந்தார்கள். அழகான பெண்குழந்தைக்கு தாயானாள் இசைப்பிரியா. அவளது சேவை தொடர்ந்தது. வன்னியில் போரின் உச்சக் கட்டம். போர் செய்த கொடுமைகளால் மக்களின் இன்னல்களைத் துடைத்தெறியப் புறப்பட்ட இசைப்பிரியா தனது குழந்தையின் நோய் தீர்க்க மருந்து வசதிகளின்றி தனது குழந்தையை பறிகொடுத்தாள். மழலையின் புன்சிரிப்பில் உலகையே மறந்திருந்தவளுக்கு திடீரென உலகமே இருண்டு போனது. எனினும் மனம் தளராது இலட்சியப்பற்றுடன் உறுதியுடன் செயற்பட்டு இறுதிவரை தனது கொள்கைக்காக போராடினாள். இறுதியில் ஒரு தமிழ்ப்பெண் ணாக தனது மானத்தை காக்கவும் போராடி 2009 மே 18 இந்த மண்ணில் விதையாகி விட்டாள். உலகத்தமிழினமே உறைந்துபோய் கண்ணீர் விட்ட நாள் அது. அந்த நாளில் அவள் இந்த உலகத்தை விட்டு சென்று விட்டாள். அவளின் அவலக்குரல் இன்றும் காதுகளில் ஒலித்துக்கொண்டி ருக்கிறது. தமிழ்ப்பெண்களின் மானத்தை சூறை யாடும் வெறிபிடித்த மிருகங்களிடம் அகப்பட்டு அவர்களால் கொல்லப்பட்டு விட்டாள். சாதனைப்பெண்ணாக சரித்திரம் படைத்தது மட்டுமல்ல. வேதனையைச் சுமந்து வரலாறும் படைத்துவிட்டாள். ஒரு வீராங்கனையாக ஒரு வீரனின் மனைவியாக தாயாக சகோதரியாக மக்களின் துயர் துடைக்கும் விடுதலைப்பெண் ணாக பல வடிவம் பெற்ற அவள் இறுதியில் கோழைகளின் பிடியில் அகப்பட்டு துடிக்க துடிக்க கற்பழிக்கப்பட்டு கொல்லப்பட்டுவிட் டாள். எனினும் அவள் தமிழ் மக்களிடமிருந்து பிரிக்க முடியாதவளாய் அணையாத தீபமாக அனைவரினதும் மனங்களிலே வாழ்கிறாள்.

இசைப்பிரியா தமிழ்ப்பெண்களின் துயர் துடைக்க புறப்பட்டாள். ஆனால் அவளது இறுதி நிமிடங்களையும் அவை அவளுக்கு கொடுத்த வலியையும் எவராலும் எழுத்தில் வடித்துவிட முடியாது. என்றோ ஒருநாள் இசைப்பிரியா தமிழ்ப் பெண்களிற்கு விடுதலை தேடிக்கொடுத்த நெருப்பாக மாறுவாள். தமிழ்பெண்கள் அனை வரும் தலைநிமிர்ந்து சுதந்திரப் பெண்களாக வலம் வரும் நாள் வெகு தூரத்தில் இல்லை. கிருசாந்தியுடன் அடுத்த இதழில் வலம் வருவோம்.

(நிஜங்கள் தொடரும்...)

**வாசகர் கருத்து :** 'ஒளி அரசி'யின் ஒவ் வொரு இதழும் மிகத் தரமானதாக உள்ளது. ஒவ்வொரு 'ஒளி அரசி'யையும் வாசித்து முடித்ததும் அடுத்த 'ஒளி அரசி' எப்போது வரும் என்ற ஆவலையும் எதிர்பார்ப்பை யும் தூண்டுகிறது. அனைத்துப் பெண்களுக் கும் 'ஒளி அரசி' ஒரு வரப்பிரசாதம் என்பதில் ஐயமில்லை.

**மு. வேணுஹா, தொண்டைமானாறு.**

# பொது அறிவுப் போட்டித் தொடர் - 05

அறிவுத் தேடலில் ஆர்வமுடைய வாசகர்களது அறிவுப்பசியை தீர்க்கும் ஒரு களமாக ஒளிஅரசி **சைப்பீ ரெடிங் கம்பனியினது** அனுசரணையுடன் பொது அறிவுப் போட்டித் தொடரினை அறிமுகப்படுத்தியுள்ளது. இங்கு தரப்படுகின்ற பொது அறிவு சம்பந்தமான கேள்விகளுக்கு சரியாக விடை எழுதி அனுப்பும் வாசகர்களில் முதல் மூன்று அதிஷ்டசாலிகள் தெரிவுசெய்யப்பட்டு முறையே ரூபா 750, ரூபா 500 மற்றும் ரூபா 250 பெறுமதியான பணப்பரிசில்கள் வழங்கப்படும்.

## வினாக்கள் :

01. உலகிலேயே மருத்துவ நிபுணர்கள் அதிகமாகவுள்ள நாடு எது?
02. அதிகமாக நோபல் பரிசைப் பெற்றுள்ள நாடு எது?
03. உலகில் அதிகமாக விற்பனையாகும் குளிர்பானம் எது?
04. இலங்கையின் தேசிய கீதத்தை தமிழில் மொழி பெயர்த்தவர் யார்?
05. உலகில் மக்கள் தொகை குறைந்த நாடு எது?
06. ஆங்கில அகராதியை தொகுத்தவர் யார்?
07. உலகில் வயது குறைந்த முதலாவது எழுத்தாளர் யார்?
08. முதன் முதலில் நீர்ல் மூழ்கி, சுழியோடி நீச்சலில் சாதனை படைத்த பெண்மணி யார்?
09. நீண்ட தூரம் ஓட்டப்பந்தயம் எப்போது, எங்கு நடைபெற்றது?
10. உலகில் மிக உயரமான - பெரிய மெழுகுவர்த்தி எங்கே, எப்போது தயாரிக்கப்பட்டது?

அனுசரணை

**SAIFI TRADING COMPANY**

IMPORTERS OF PAPER & BOARD

No. 96, New Moor Street, Colombo - 12.

உங்களது விடைகளை ''ஆசிரியர் ஒளிஅரசி, இல. 85, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு - 14'' என்ற முகவரிக்கு 20.06.2015 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

**பொது அறிவுத் தொடர் - 05**

முழுப்பெயர் : ..............................
..............................
முகவரி : ..............................
..............................
..............................
தொலைபேசி இல.: ..............................
ஒப்பம் : ..............................

**பொது அறிவுத் தொடர் - 03 இல் வெற்றியீட்டியவர்களும் அவற்றிற்கான விடைகளும்**

01 ஆம் பரிசு
க. இராஜகோபால்,
வட்டுக்கோட்டை.

02 ஆம் பரிசு
செ. திருஞானலோசனி,
கொழும்பு - 06.

03 ஆம் பரிசு
சி. தியாகேஸ்வரி, கோப்பாய்.

01) மிக்சல் ஸ்டார்க்
02) 1864 ஆம் ஆண்டு
03) லீ குவான் யூ, சிங்கப்பூர்
04) ஜெனரல் சரத் பொன்சேக்கா
05) மொகமட் நஷீட்
06) சீனா
07) B C G
08) சுவாமி விபுலானந்தர்
09) ரியாத்
10) பல்லவி அனுபல்லவி

# குடும்பத்தின் முழுமையான அங்கீகாரமே பெண்களை ஆளுமைமிக்கவர்களாக மாற்றும்



தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் என்றுமே தோற்றதாகச் சரித்திரமில்லை. இவ்விரண்டையும் பற்றிப்பிடித்து வெற்றி மங்கையாய் திகழ்பவர்களில் ஒருவர்தான் திருமதி. சுகந்தி கிஷோர். வவுனியா பிரதேச சபை செயலாளரான இவரை எமது 'ஒளிஅரசி'யின் இம்மாத மங்கையாகத் தெரிவுசெய்து அவருடன் பகிர்ந்துகொண்டவை எமது வாசகர்களுக்காக.

இவர், வவுனியா இரம்பைக்குளம் பகுதியில் நவரட்னம் அருந்ததி தம்பதிகளின் மூன்றாவது மகளாகப் பிறந்தார். இவரது தந்தையார் கிராம சேவகராக இருந்தவர். சிறுவயது முதல் தகப்பனாரின் வேலைகளில் தானும் பங்கெடுத்துக் கொள்வதில் வழக்கமாகக் கொண்டிருந்தார். மிகுந்த வறுமையில் உழன்று கொண்டிருந்த வேளைகளின்போதெல்லாம் 'தன்னைத்தானே தட்டிக்கொடுத்து வறுமையோடு போராடி அதனை வெல்லவேண்டும்' எனும் எண்ணத்தை மனதிலே பதித்துக்கொள்வார். 22 கிராமங்களை ஒன்றிணைத்து கிராம அலுவலராக பணியாற்றிய தந்தையுடன் தானும் சைக்கிளில் பயணித்து சேவையாற்றுவதை விருப்புடன் மிகத் துணிச்சலாகச் செய்துள்ளார்.

இன்றைய சமூகம் வாசிப்பதில் ஆர்வம் கொள்வதை மிகமிகக் குறைந்தளவிலேயே பின்பற்றுகின்றது. தொலைக்காட்சி போன்ற இலத்திரனியல் சாதனங்கள் இவர்களின் நேரத்தைத் தின்றுவிட்டதால், வாசிப்பு அருகிவருகின்றது எனவும் இச்செயல் பல நல்ல விடயங்களை அறியமுடியாது செய்துவிடுவதாகவும் கூறியுள்ள இவர், பெண்களுக்குத் துணிச்சலும், தன்னம்பிக்கையும், விடயமுயற்சியும் எப்போதும் வேண்டுமென்றார். அத்துடன் குடும்பத்தின் முழுமையான அங்கீகாரமே பெண்களை ஆளுமைமிக்கவர்களாக மாற்றுகின்றது எனவும் கூறியுள்ளார்.

சமூக சேவைகளில் அதிக ஈடுபாடுகொண்ட தனது கணவரே தனது வளர்ச்சியின் மற்றுமொரு வழிகாட்டி எனவும், கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் புரிந்து நடத்தலே இனிய இல்லறத்தை உருவாக்கும் எனவும், பெண்கள் திருமணமானதும் ஏனோதானோ என சுவாரசியமின்றி வாழ முற்படுவதே பல பிரச்சினைகளுக்குக் காரணம் எனவும் கூறியுள்ளார்.

பெண்கள் எப்போதுமே தனது உடல், உள ஆரோக்கியத்தைப் பேணவேண்டும். கிராம மட்டப் பெண்கள் சமூக அமைப்புகள் மூலம் தமது ஆளுமைகளை வெளிப்படுத்த வேண்டுமெனவும், பெண்பிள்ளைகள் என்பதற்காய் அதீத கட்டுப்பாடுகள் விதிப்பது, பாகுபாடு காட்டுவது இவை தவிர்க்கப்பட வேண்டுமெனவும், "பெண்களைப் பெண்களே விமர்சிப்பதை நிறுத்தினால் பெண்களுக்கான அங்கீகாரம் சரியான முறையில் கிடைக்கும்'' எனவும் கூறியுள்ளாார்.

*இவர், செஞ்சிலுவைச் சங்க உப தலைவராகவும், அகில இலங்கை சமாதான நீதவானாகவும், வவுனியா மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத் தலைவியாகவும், இலங்கைப் பெண் சாரணியர் சங்க வவுனியா மாவட்ட கிளைச் செயலாளராகவும், செவிப்புலனற்றோர் சங்க போஷகராகவும், அழகுக்கலை நிருபராகவும் உள்ளார்.*

*பல நாடுகள் கலந்துகொண்ட சாரணியர் பாசறையின் திறமையான வழிகாட்டி (Best guide) ஆகத் தெரிவுசெய்யப்பட்டார்.*

அழகுக்கலை பற்றி இவர் கூறும்போது, "அழகுபடுத்துவது பெண்களிடம் தன்னம்பிக்கையை அதிகரிக்கின்றது எனவும், மன அழுத்தத்தைக் குறைக்கின்றது எனவும், நல்லதோர் குடும்ப உறவை வளர்க்கிறது'' எனவும் கூறியுள்ளார்.

அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தின் வலைப்பந்தாட்ட பெண்கள் அணியினர் தேசியமட்டத்தில் தமது சாதனையைப் பதிவு செய்யப் போராடி வருகின்றனர்.

1921 ஆம் ஆண்டு இங்கிலாந்து இனத்தவரான திருமதி ஜெனி கிறீன் என்பவரால் இலங்கையில் கண்டி மகளிர் உயர்தரப் பாட சாலையில் இவ்விளையாட்டு அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் பின்னர் கொழும்பு நகரப் பகுதியிலும், யாழ்ப்பாணப் பகுதியிலும் இவ் விளையாட்டு விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

# தேசிய மட்டத்தில் சாதிக்கத்துடிக்கும் யாழ்.



பாடசாலை அதிபர் கே. பாலமுருகன், உடற்கல்வி ஆசிரியர் ஆர். சிறிரமணன்
ஜெயந்தி கருனதாஸ் ஆகியோருட

தற்போது ஆசிய வலைப்பந்தாட்டப் போட்டியில் இலங்கை அணி ஒரு கவசமாக விளங்குதுதோடு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வீராங் கனைகளும் அதில் இடம்பிடித்தமை பெருமைக்குரிய விடயமாகும்.

அராலி சரஸ்வதி வித்தியாலய மாணவிகளும் பாடசாலை மட்டத் தில் நடாத்தப்படும் அகில இலங்கை பாடசாலைகள் வலைப்பந் தாட்டப் போட்டியில் கடந்த மூன்று வருடங்களாக கலந்துகொண்டு தமது சாதனைகனை பதிவுசெய்வதற்காக போராடி வருகின்றனர்.

வடமாகாண போட்டிகளில் தமக்கென முத்திரை பதித்துக்கொண்ட அராலி சரஸ்வதி அணியினர் 2012 ஆம் ஆண்டு மாகாண மட்டத்தில் 15 வயதுப் பிரிவினர் சம்பியன் கிண்ணத்தையும் 17 வயதுப் பிரிவினர் 2 ஆம் இடத்தையும் பெற்றனர். 2013 ஆம் ஆண்டு 17 வயதுப் பிரிவினர் சம்பியன் கிண்ணத்தையும் சுவீகரித்துள்ளனர்.

2014 ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாணமட்டத்தில் 17 வயதுப் பிரிவினர் சம்பியன் கிண்ணத்தையும், 15 வயதுப் பிரிவினர் 2 ஆம் இடத்தையும் பெற்றதோடு அகில இலங்கைப் பாடசாலைகளிற்

இடையிலான போட்டியில் காலி
குறிப்பிடத்தக்கவிடயமாகும். இ
மாவட்ட மட்ட போட்டியில் 15
கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளனர்
மாகாணமட்டப் போட்டிகளிலும்
சாதிப்பதற்காக தமது பயிற்சியை

அராலி சரஸ்வதி மகா வித்தியாலய
இங்கு மாணவர்களின் பெற்
பொருளாதரமாகக் கொண்டுள்ள

''கிராமப்புறம், கு
உயரம் குறைந்த பெண்க
இவற்றுக்கு மத்தியில் மா
வாகை சூடிய மாணவி
அதிபர், ஆசிரியர் உட்பட்ட
யும் ஒளிஅரசி உளமார வ

விளையாட்டுத்துறைக்கு பூர
அதிபர், ஆசிரியர்கள் தமது பிறந்
பங்குபற்றும் மாணவர்களிற்கு பா
பழக்கத்தைக் கொண்டுள்ளனர். இ
கூடிய ஒரு விடயமாகும். இத
''வள்ளுவர் இல்ல'' சமூக ஆர்வல
அராலி கிழக்கு கிராமசேவகர் சி.
நலன்மிக்க அரசியல்வாதிகளும் உ

காலிறுதிவரை முன்னேறியுள்ளமையும்
். இதேபோல் இவ்வாண்டு நடைபெற்ற
ில் 15, 19 வயதுப் பிரிவினர் சம்பியன்
ளனர். இவர்கள் நடைபெறவிருக்கும்
ளிலும், தேசிய மட்ட போட்டிகளிலும்
சியை மேற்கொண்டு வருகின்றனர்.

யாலயமானது ஒரு கிராமப்புறப் பாடசாலை,
பெற்றோர்கள் கூலித்தொழிலையே
ள்ளனர்.

வடமாகாணத்தில் ஜொலித்தபோதும் தேசிய மட்டத்தில் மிளிர்வதற்கு தடையாக அமைவதில் முக்கியமாக அமைவது தேசிய மட்ட அணிகளோடு சிநேகபூர்வமான போட்டிகளில் பங்குபற்றாமையாகும்.

'மைலோ' கிண்ணப் போட்டிகள் நடாத்தப்பட்டு அதில் வெற்றி பெற்றபோதும் தேசியமட்டத்தில் கலந்துகொள்வதற்கு பொருளாதார நிலை இடம்கொடுக்கவில்லை. கொழும்பிற்கு சென்று போட்டிகளில் கலந்துகொள்வதற்கு சுமார் 50 ஆயிரம் ரூபா செலவாகிறது. இதனால் இவர்கள் பாடசாலைகளில் நடாத்தும் போட்டியில்

# ழ். அராலி சரஸ்வதி வலைப்பந்து அணியினர்






ணன், பொறுப்பாசிரியர்களான செல்வி எஸ். தனுசா, செல்வி எஸ். கவிதா, திருமதி
ாருடன் வலைப்பந்து வீராங்கனைகள்.

***குறைந்த பொருளாதார வசதி,
ண்கள், குறைவான போஷாக்கு
மாகாண மட்டம் வரை வெற்றி
ாவிகளையும் வழிநடத்திய
பட்ட பாடசாலை சமூகத்தை
ர வாழ்த்துகின்றது.''***

பூரண ஒத்துழைப்பைக் கொடுக்கும்
பிறந்த நாளின்போது விளையாட்டில்
த பாதணிகளை அன்பளிப்புச் செய்யும்
். இது பாராட்டத்தக்கதோடு வாழ்த்தக்
இதனைவிட வட்டுக்கோட்டையில்
வலர் சிவச்சந்திரன் வசந்தா அவர்களும்
் சி.சிவரூபன் அவர்களும் சில சமூக
ும் உதவிகளை வழங்கியுள்ளனர்.

மட்டுமே கலந்துகொள்கின்றனர். இதனால் தேசியமட்டத்தில் நுட்பங்களை பயன்படுத்துவதில் சிரமம் ஏற்படுகிறது.

அத்தோடு இக்கிராமத்தைச் சேர்ந்த பெண்கள் பொதுவாக உயரம் குறைந்தவர்கள். வலைப்பந்தாட்டத்திற்கு உயரமும் செல்வாக்குச் செலுத்தும். இருந்தபோதும் உயரம் குறைந்த மாணவர்களைக் கொண்டு சாதிப்பது பெருமைப்படக்கூடிய விடயம். எனவே, வடமாகாண கல்வித்திணைக்களம், விளையாட்டு ஆர்வமுடையோர், அரசியல் வாதிகள், ஏனைய போட்டிகளை நடாத்துவோர் இவர்களிற்கான தேசிய மட்டத்திலான சினேகபூர்வ போட்டிகளை ஏற்படுத்தி வாய்ப்புகளை வழங்கினால் அவர்கள் தேசிய மட்டத்தில் சாதனை படைப்பதில் ஐயமில்லை. இவர்களின் சாதனைப் பயணம் தொடர 'ஒளிஅரசி'யின் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

தேசிய மட்ட அணிகளுடன் சினேகபூர்வமான போட்டிகள் கிடைக்குமானால் தேசியமட்டத்தில் சாதனை படைப்போம் என உறுதிபட தெரிவிக்கும் மாணவிகளை ஊக்கப்படுத்த சமூக ஆர்வலர்கள் முன்வரவேண்டும்.

அருள்மதி

# 21 ஆவது ஆண்டில் வவுனியா CANARA முன்பள்ளி

வளர்ந்து வரும் சிறார்களுக்கு பயிற்சியுடன் கூடிய கல்வியறிவை மேம்படுத்த முன்பள்ளிகள் வழிவகுத்து வருகின்றன. அத்தகைய முன்பள்ளிகளின் வரிசையில் வவுனியா மன்னார் வீதியின் வேப்பங்குளத்தில் அமைந்துள்ள 'கனறா' முன்பள்ளி அப்பகுதியில் முக்கியத்துவம் வாய்ந்து விளங்குகின்றது. இந்த முன்பள்ளி நிறுவப்பட்டு மே மாதம் 8ஆம் திகதி 20ஆவது ஆண்டை நிறைவு செய்தது மகிழ்ச்சிக்குரியதாகும்.

மன்னார் மறைமாவட்டத்தில் முதன்முறையாக திருச்சிலுவை கன்னியர் சபை அருட்சகோதரிகள் பணிபுரிய வேப்பங்குளம் புனித சூசையப்பர் பங்கில் கால்பதித்தனர். மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி. இராயப்பு யோசப்பு ஆண்டகையின் வேண்டுகோளுக்கிணங்க 1995ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் திகதி அருச்சகோதரிகளிகன் சேவை இப்பங்கில் ஆரம்பமாயிற்று.

எனவேதான் திருச்சிலுவை கன்னியர் சபை அருட்சகோதரிகளும் முதன்முதலாக மன்னார் மறைமாவட்டத்தில் பணிபுரிய வந்தபோது, புனித யோசப் வாஸ் முனிவரின் குருத்துவ வாழ்வின் பணித்தளமான 'கனறா' என்ற இடத்தின் பெயரையே தமது பணித்தளத்திற்கும் சூட்டினார்கள். CANARA என்ற ஆங்கில சொற்பதத்திற்கேற்ப (கனறா) தமது பணிகளை ஆற்றிவருகின்றனர்.

| | |
|---|---|
| C - CATECHISIS | - சமய வாழ்வுப் பணி. |
| A - ANIMATION | - உள ஆன்மிக வலுவூட்டல். |
| N - NURTHRING CHILDREN | - பாலர் பூரண வளர்ச்சி. |
| A - ARUL HEALTH CARE | - சுக நலப்பணி. |
| R - RELIEF REHABILITATION | - நிவாரண உதவி. |
| A - AGRICULTURE | - இயற்கைவள மேன்பாடு. |

இக்காலகட்டத்தில் வடபகுதி மக்கள் குறிப்பாக யாழ்ப்பாண மக்கள் வவுனியாவின் பல பகுதிகளில் நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து இக்கட்டான சூழ்நிலையில் அவர்கள் மத்தியில் தங்கள் ஆன்மிக பங்கு பணி, சமூகப்பணியெனத் தொடங்கினார்கள். இக்கிராமத்தில் பெற்றோரின் விருப்பத்திற்கிணங்க 1995ஆம் ஆண்டு மே மாதம் 8ஆம் திகதி கனறா முன்பள்ளி, 8 குழந்தைகளுடனும் ஒரு ஆசிரியருடனும் அருட்சகோதரி விக்றறின் ஜேம்ஸ் என்பவரின் தலைமையில் ஆரம்பமாயிற்று. அதே வருடத்திற்குள் மாணவர் தொகை 15ஆக அதிகரித்து, இன்று படிப்படியாக 300சிறார்கள் வரையில் அதிகரித்துள்ளது. இந்த எண்ணிக்கையின் அதிகரிப்பிற்குக் காரணம், வடபகுதி மக்களின் இடப்பெயர்வும், அருட்சகோதரிகளின் தலைமைத்துவமும், பாடசாலை நிர்வாகவுமே ஆகும்.

மேலும், நெலுக்குளம், வேப்பங்குளம், பூந்தோட்டம் ஆகிய நலன்புரி நிலையங்களில் வாழ்ந்த இளம்பெண்களை முன்பள்ளி ஆசிரியர்களாக பயிற்சிகொடுத்து அவர்கள் மூலமாக அங்கிருந்து சிறுவர்களுக்கு கல்வியும் சத்துணவும் வழங்கப்பட்டது குறிப்படத்தக்கதாகும்.

இவ்வருடம் 20 ஆண்டுகளை நிறைவுசெய்த கனறா முன்பள்ளி தன் அகத்தில் 180 மாணவச் செல்வங்களையும், 10 ஆசிரியர்களையும் கொண்டு அருட்சகோதரிகளின் தலைமைத்துவத்தில் நடைபெற்று வருகின்றது. வவுனியா மாவட்டத்தில் இயங்கிவரும் சிறந்த முன்பள்ளியாக வெற்றிநடை போடுகிறது 'கனறா' என்றால் அது மிகையாகாது.


கனறா முன்பள்ளி மாணவர்கள் எங்கு சென்றாலும் படிப்பிலும், விளையாட்டிலும், ஆளுமையிலும் சிறந்தவர்களாக பாடசாலைகளிலும், பெருமை சேர்த்துள்ளனர். எம் நாட்டில் மட்டுமல்ல வெளிநாட்டிலும் மிளிரச் செய்துள்ளனர். சாதி, சமய வேறுபாடின்றி அனைத்துச் சிறார்களும் ஒழுக்கத்திலும் ஞானத்திலும் சிறந்த மாணவச் செல்வங்களை உருவாக்கும் 'கனறா' முன்பள்ளிக்கு 'ஒளி அரசி'யின் மனமார்ந்த வாழ்த்துக்கள்.







# வலியில்லா பிரசவம் சாத்தியமாகின்றது "எபிடியூரல் டெலிவரி"



## தொழில்நுட்ப மருத்துவ விஞ்ஞானத்தின் இன்னொரு வெற்றி

மருத்துவம் எவ்வளவோ முன்னேறி இருந்தாலும், பிரசவ வேதனை என்பது தவிர்க்கமுடியாத வலியாக இருந்துவந்தது. அந்த நிலைமை மெல்ல மாறிவருகிறது. வலியே இல்லாமல் குழந்தை பெற்றுக்கொள்ளும் வசதி அமெரிக்கா போன்ற மேலைநாடுகளைத் தொடர்ந்து இன்று இந்தியாவிலும் சாத்யமாகி உள்ளது. எப்போது இலங்கைக்கு அறிமுகமாகும் என்பதே எதிர்பார்ப்பு.

பிரசவ நேரத்தில், கர்ப்பப்பை சுருங்கும் போது, அந்த மாற்றம் பற்றிய தகவல் தண்டு வடத்தில் உள்ள நரம்புகள் வழியாக பயணம் செய்து, மூளையை எட்டும்போது நாம் அந்த வலியை உணர்கிறோம். இந்த வேதனை எல்லாப் பெண்களுக்கும் ஒரே மாதிரி இருப்பதில்லை.

1. குழந்தையின் எடை
2. கருவறையில் குழந்தையின் நிலை
3. இடுப்பு எலும்பின் தன்மைகள்
4. சுருங்கும் தன்மையின் வலிமை
5. முன் அனுபவம் மற்றும் எதிர்பார்ப்பு

என்ற ஐந்து காரணங்களின் அடிப்படையில் வலியின் அளவு மாறுபடும். எவ்வளவு வலி இருக்கும் என்பதை முன்பே அறிந்து கூறமுடியாது. சிலர் பொறுத்துக்கொள்ளக்கூடிய அளவில் வலியை உணர்கிறார்கள். சிலர் தியானம், மூச்சுப் பயிற்சி, வெந்நீர் குளியல், மசாஜ், நர்ஸ் கவனிப்பு, நிற்பது, நடப்பது, அமர்வது போன்ற நிலை மாற்றம் என்று மருத்துவ முறை அல்லாத செயற்பாடுகள் மூலம் வலியை குறைக்க முயல்கின்றனர். பலர், எந்த முறையையும் பின்பற்ற முடியாத அளவுக்கு வலியால் திணறுகிறார்கள்.

இப்படி சொல்லி விளங்க வைக்க முடியாத வலியை, மாயமாக மறைய வைத்து, குழந்தை பிறப்பதை அனுபவித்து மகிழ வைக்கும் ஒரு உபாயம்தான் 'எபிடியூரல் டெலிவரி' என்பது! இதில் அமெரிக்காவில் பிரபலமான டாக்டர் பேக்ரே இந்த முறை பற்றி விளக்கியுள்ளார்.

'எபிடியூரல் டெலிவரி' என்பது, தண்டு வடத்தில் ஊசி மூலம் ஒரு மருந்தை உட்செலுத்தி பிரசவ வலியை முற்றிலுமாக அகற்றி, குழந்தை பிறப்பை சுகமான அனுபவமாக மாற்றக்கூடிய ஒரு மருத்துவ முறையாகும்.

நன்கு பயிற்சி பெற்ற மயக்க மருந்து நிபுணரால் சம்பந்தப்பட்ட பெண்ணுக்கு அதைப் பற்றி தெளிவாக விளக்கப்படும். ஒப்புதல் அளித்தால் மட்டுமே எபிடியூரல் கொடுக்கப்படுகிறது. ஒழுங்கான பிரசவத்துக்குரிய அறிகுறிகள் தென்பட்டாலன்றி இது கொடுக்கப்படுவது இல்லை. வலியும் தொடங்கியிருக்க வேண்டும்.

எபிடியூரல் கொடுக்கும்போது, பக்க விளைவாக இரத்த அழுத்தம் குறையும் வாய்ப்பு உள்ளதால், இரத்தக்குழாய் வழியாக திரவங்கள் செலுத்தப்படும். 5 நிமிடத்துக்கு ஒருமுறை டாக்டரின் நேரடி கண்காணிப்பு அவசியமாகிறது. குழந்தையின் இதயத்துடிப்பும் திரையில் கண்காணிக்கப்படும்.

எபிடியூரல் மருந்து ஏற்றியபின்பு எழுந்து நடமாட முடியாது. கால்கள் கனம் தெரியாத அளவுக்கு மரத்துப்போகும். திரும்பி படுக்கலாம். செயற்கை முறையில் சிறுநீர் வெளியேற்ற வழி செய்யப்படும். எளிதான பிரசவத்துக்கு இது மேலும் துணைபுரிகிறது. எபிடியூரல் வேலை செய்ய ஆரம்பித்தவுடன் ஒவ்வொரு முறை கருவறை சுருங்கி, விரிந்து, குழந்தை இறங்கி வருவதை உணரும்போது வலியே தெரியாது!

அமெரிக்காவில் பெரும்பாலான பெண்கள் எபிடியூரல் டெலிவரியை வரவேற்கிறார்கள். முதல் பிரசவத்தில் எபிடியூரல் பற்றி உணர்ந்தவர்கள் இரண்டாவது பிரசவத்துக்கு இயற்கை முறை பற்றி யோசிப்பதுகூட இல்லை!

எபிடியூரல் டெலிவரியை பொருத்த வரை நன்கு பயிற்சி பெற்ற டாக்டர், மயக்க மருந்து நிபுணர் ஆகியோரைக் கொண்டு செயல்படுத்தினால் கண்டிப்பாக முழு பயனையும் அடையலாம்.

# விவாத மேடை 03 இன் முடிவுகள்

## "இன்றைய சூழலில் நவீன தொலைத்தொடர்பு சாதனங்கள் சுமையானதா? சுகமானதா?"

**சுமையானது என வாதிட்டு பரிசைப் பெறுகின்றார் பெரிய நீலாவணையைச் சேர்ந்த அப்துல் காதர் பாத்திமா பஸ்றின்.**

தொழில்நுட்பத்தின் உச்சத்தை எட்ட பல்வேறு வழிகளிலும், பல முயற்சிகளிலும் முன்னேற்றம் கண்டுவரும் இவ்வுலகில் நவீன தொலைத்தொடர்பு சாதனங்களே துரிதமாக வளர்ச்சி அடைந்துவருகின்றது. அதிலும் பேஸ்புக், டுவிட்டர், வட்ஸ்அப், வைபர் போன்ற சமூக வலைத்தளங்கள் ஒவ்வொரு மனிதர்களினதும் இன்றிய மையாத தேவைகளாகவும் மாறிவிட்டன. நன்மை ஒன்றிருந்தால் நிச்சயமாக தீமை ஒன்றும் இருந்தே ஆகும். அதுவே உலக நியதியும்கூட. அது தொலைத்தொடர்பு சாதனங்களில் மட்டும் விதிவிலக்கானதல்ல.

தொழில்சார் விடயங்கள், கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள், நண்பர்கள், உறவினர் சமூகங்களுக்கிடையிலான தொடர்பாடல் ஏன் நாட்டின் முன்னேற்றம் தொடர்பான விடயங்களிலெனப் பல நன்மையான முன்னேற்றகரமான செயற்பாடுகளில் நவீன தொலைத்தொடர்பு சாதனங்களே முதன்மை வகிக்கின்றன. இருந்தபோதும் இன்றைய சூழ்நிலையில் மனிதர்களுக்கு பிரயோசனம் அளிக்கும் அதே தொலைத்தொடர்பு சாதனங்களே மனிதர்களின் ஒழுக்க மாளிகையை துண்டு துண்டாக தகர்த்து வருகின்றன. அவை பொழுதுபோக்கு தனத்தை சந்தைப்படுத்தும் சாதனங்களாக மாறியுள்ளன. ஒரு தனிமனிதனதும் ஒரு குடும்பத்தினதும், ஒரு சமூக நிறுவனத்தினதும் மானத்தில் கைவைப்பதன் மூலம் அவர்களை காயப்படுத்தி ஏனையவர்களின் அபிமானத்தையும், பாராட்டையும் பெறுகின்றன. மோசமான ஆபாச கருத்துகளை வெளிப்படுத்தும் செய்திகள், காட்சிகள் மூலம் மனிதர்களின் உணர்வுகைளத் தூண்டி ஒழுக்கமற்ற சமூக கட்டமைப்புக்கு வித்திடுகின்றன.

இப்போதெல்லாம் பெற்றோர் பிள்ளைகளுக்குப் பயிற்சிப்புத்தகங்களை வாங்கிக் கொடுக்கிறார்கள் என்னவோ ஆனால், கட்டாயம் ஒவ்வொரு உயர்தர தொலைபேசிகளை வாங்கிக்கொடுக்கிறார்கள். அது அவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு துணைபுரியும் என நம்புகிறார்கள். ஆனால், அவர்களின் நம்பிக்கை வீணானதே. அப்படி இல்லையாயின் அவர்களும் தம் பிள்ளைகளுடனிருந்து கற்றல் விடயங்களில் கவனம்கொள்ள வேண்டும். ஆனால், அது இன்றைய சூழலில் சாத்தியமற்றதே. ஏனெனில், பெற்றோர்களின் வாழ்க்கையும் தொலைத்தொடர்பு சாதனங்களுடன் பொழுதைக் கழிப்பதிலேயே பின்னிப்பிணைந்துள்ளது.

எனவே, இதுபோன்று ஒரு கட்டுப்பாடின்றி எதைப் பார்க்கவேண்டும்? எதைப் பார்க்கக்கூடாது? எதைச் செய்யவேண்டும்? செய்யக் கூடாதவை எவை? எது நல்லது? எது கெட்டது? எனத் தெரியாமல் சிறுவர் தொடக்கம் பெரியோர் வரை நவீன தொலைத்தொடர்பு சாதனங்களில் அதிக நாட்டம் கொண்டு அதனுடன் பொழுதைக் கழிப்பதையே வாழ்க்கையாக மாற்றிவிட்டனர். இதனால் குடும்ப, சமூக கட்டமைப்பே சீர்குலைந்துவிடும். அறிவையும், ஆற்றலையும், ஆளுமையையும் வளர்த்துவிடவேண்டிய இந்நவீன தொலைத்தொடர்பு சாதனங்களை அற்பமான விடயங்களுக்குப் பயன்படுத்துவதன்மூலம் மனிதர்களின் பண்பாடு, பாரம்பரியம், பழக்கவழக்கங்கள் என்பன இனங்காண முடியாதவாறு தரைமட்டமாக்கப்படுகின்றன. இவ்வாறான செயல்களில் ஈடுபடுவோர் தங்களதும், தங்களது பிள்ளைகளினதும் எதிர்கால வாழ்க்கை கட்ட

டங்களுக்கு சுகம் என நினைத்து சுமை களையே அடிக்கல்லாக நடுகின்றனர்.

**சுகமானது என வாதிட்டு பரிசைப் பெறுகின்றார் கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த நிஷாந்தினி.**

இன்றைய உலகில் நவீன தொலைத் தொடர்பு சாதனங்கள் பாரியளவில் சுகமான அனுபவங்களைப் பெற்றுக்கொண்டு வாழ வழிவகுத்துள்ளன எனலாம். கணப்பொழுதி லேயே உலக தொடர்புகளை அறிந்துகொள்ள வும், நேரில் காண்பதுபோல் பார்த்து இரசிக் கவும் முடிகின்றது. பெரியோர் முதல் சிறியோர் வரையிலும் செல்வந்தர்கள் மட்டுமல்ல, வசதியில்லாதவர்கள்கூட இத்தகைய சாதனங் களைப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டனர்.

வானொலி, தொலைக்காட்சி, கணினி, நவீன கையடக்கத் தொலைபேசி, இன்டர் நெட் வசதியுடன், ஸ்கைப் என்றெல்லாம் அடுக்கிக்கொண்டே போகலாம். முன்பெல் லாம் கடிதத் தொடர்புகள், தொலைபேசி அழைப்புகளை மட்டுமே நம்பி வாழ்ந்த நாம் இன்றைய சூழலில் உள்ளங்கைகளிலேயே உலகத் தொடர்புகளை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்பை நமக்கு அளித்துள்ள நவீன தொழில்நுட்பம் என்றுமே போற்றுதற்குரியதே.

குடும்பத்தில் அங்கத்துவம் வகிக்கும் சகலருக்கும் தொலைத்தொடர்பு சாதனங்கள் அத்தியாசவியமாகிறது. கணவன், மனைவி, பிள்ளைகள் என யாவரும் தொழிலுக்கும், கல்லூ ரிக்கும் செல்வதால் ஒருவரை ஒருவர் தொடர்பு கொள்ள கையடக்கத் தொலைபேசி அவசிய மாகிறது. கணப்பொழுதில் யார், யார் எங்கு இருக் கின்றார்கள் எனவும் அறிந்துகொள்ளலாம்.

எங்கும் எதிலும் கட்டுப்பாடும், நேர்மை யும் முக்கியமாகும். ஆனால், குடும்ப அங்கத்த வர்கள், சிறார்கள் தங்களுக்கு வழங்கப் பட்டுள்ள சுதந்திரத்தை துஷ்பிரயோகம் செய்யும்போதுதான் நிலைமைகள் மோச மடைகின்றன. நமது கலாசாரத்தை மறந்து செயற்படும்போது சில விடயங்கள் கவலைக் கிடமாக மாறுகின்றன.

விஞ்ஞானிகளின் கடினமான உழைப்பு, ஆராய்ச்சியின் பின்னர் கண்டுபிடிக்கப்படும் அரிய சாதனங்கள் நல்ல விடயங்களுக்குப் பயன்படுவதே மகிழ்ச்சிகரமான செயலாகும். படிப்படியாக உலக முன்னேற்றத்திற்குத் தேவையான கண்டுபிடிப்புகள் நிமிடத்துக்கு நிமிடம் அறிமுகமாவதை செய்திகள், பத்திரிகைகள் மூலம் அறியமுடிகின்றது. மனிதர்கள் செய்யவேண்டிய தொழிற்பாடு களை ரோபோக்கள் செய்கின்றன. விண்வெளி யிலிருந்து ரோபோக்கள் அனுப்பிவைத்த செய்திகள் ஆராய்ச்சிக்கு வழிவகுத்துள்ளன.

நாளுக்குநாள் கையடக்கத் தொலைபேசி களின் நவீன படைப்புகள் ஏராளமாக வெளி வந்துகொண்டிருக்கின்றன. இவையாவும் வியக்கத்தகு சாதனைகளே.

எனவே, இன்றைய சூழலில் தொலைத் தொடர்பு சாதனங்கள் சுகமான அனுபவங்க ளையே தந்துகொண்டிருக்கின்றன. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும். குடும்ப நலன், சமூக நலன் கருதி இறைவனின் அரு ளாலும் நவீன படைப்புகளாலும் நமக்கும் நமது குடும்பத்துக்கும் கிடைத்துள்ள வரப் பிரசாதங்களை சமூக மட்டத்தில் சுகமான அனுபவங்களாகப் பயன்படுத்துவதே சாலச் சிறந்ததாகும்.

**விவாத மேடை 05 இற்கான தலைப்பு**

**"நவீன உலகில் பாட்டி வைத்தியம் பயனுள்ளதா? பயனற்றதா?"**

**உங்கள் விவாதங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 25.06.2015**

**விவாத மேடை - 05**

முழுப்பெயர் : ..............................

..............................

முகவரி : ..............................

..............................


..............................

தொலைபேசி இல.: ..............................

ஒப்பம் : ..............................

அம்மா அப்பா இப்படி
பாப்பா எப்படி

புதிய உளவியல் தொடர் — அபர்ணா



# பெற்றோர் - பிள்ளைகளின் உறவை மேம்படுத்த வழிவகைகள் என்ன?

ஒரு நாட்டின் அத்திவாரம் ஒவ்வொரு வீட்டிலும் இருந்துதான் உருவாக்கப்படுகின்றது. அதாவது, வீட்டில் வளரும் குழந்தைகளின் மூலமே ஆரம்பிக்கப்படுகின்றது. வீடு என்பது உடலுக்கும் உள்ளத்திற்கும் அமைதி தரும் இடமாக அமையவேண்டும். வன்முறைகள், தர்க்கங்கள், வேற்றுமைகள் வீட்டிற்குள் நிகழ்வதையும் அனுமதிக்காத பெற்றோர்கள் வாழும் வீட்டில்தான் ஆளுமையான குழந்தைகள் உருவாகின்றனர். இதுவே ஒரு குழந்தையின் தேவையும்கூட. 'குழந்தை வளர்ப்பு என்பது ஒரு கலை' எனக் கூறப்படுகின்றது.

சரியான முறையில் குழந்தையை வளர்க்கவேண்டும்; பராமரிக்க வேண்டும் என்றுதான் பெற்றோர்கள் நினைக்கின்றார்கள். எனினும், குழந்தை வளர்ப்பில் பெற்றோர் மேற்கொள்ளும் வழிமுறைகள் ஒருவருக்கொருவர் வேறுபடுவதை நாம் பார்க்கின்றோம். ஒரு குழந்தையின் வளர்ப்பில் பெற்றோரின் பங்கு வலியது. ஒரு குழந்தை வீட்டில் வளரும் விதம் அல்லது வளர்க்கப்படும் விதமே அதன் எதிர்காலத்தை அழகும், அர்த்தமும் உள்ளதாக மாற்றுகின்றது.

'பிள்ளைகளைப் பேணி வளர்ப்பதென்பது ஓர் உணவைச் சுவைபடச் சமைப்பதுபோல' உணவில் உப்பு, காரம், புளிப்பு, உவர்ப்பு எல்லாம் சரியான அளவில் இருக்கும்போது தான் அதனைச் சுவைத்து உண்ணமுடியும். அதுபோலவே தான் குழந்தையின் வளர்ப்பும் சுவையானது. இது உளவியல் ரீதியானதாகவே அமைகின்றது. முதலில் ஒவ்வொரு பெற்றோரும் இதனை உணர்ந்துகொள்ள வேண்டும்.

ஒரு குழந்தை சமூகத்தில் காணும் முதல் ஆண் தந்தையாகவும், முதல் பெண் தாயாகவுமே உள்ளனர். இவர்கள் பெற்றோர்கள் அல்லது வீட்டில் இருப்பவர்களைப் பார்த்தே சமுதாயப் போக்கை உணர்ந்துகொள்கின்றார்கள். தற்போதைய காலத்தில் சுதந்திரமான - சிநேகபூர்வமான குழந்தை வளர்ப்பையே பிள்ளைகள் விரும்புகின்றனர். கண்டிப்பு, வேற்றுமை, விட்டுக்கொடுப்பற்ற விதிமுறைகளுக்குட்பட்ட வளர்ப்பு முறையில் குழந்தைகளின் சுதந்திரம் மறுக்கப்படுகிறது.

''நான் சொன்னதைச் செய்'', ''நான் சொல்வதுபோல இரு'' என்பது போன்ற கட்டளைகளை விதிக்கும்போது குழந்தைகள் மகிழ்வு காணாத - பயந்த சுபாவமுள்ள மிகக் கவலையான மன நிலை உடையவர்களாக மாறுகின்றனர். இதுவே பிற்காலத்தில் இவர்கள் வன்முறையில் ஈடுபடவும் வழிவகுக்கின்றது.

சுதந்திரமாகக் குழந்தைகளை வளர்ப்பதென்பது கண்டிப்பு குறைந்த, கனிவு நலம் மிகுந்த, இனிய பாங்குடைய திட்டவட்டமான குழந்தை வளர்ப்பேயாகும். இதன்போது பெற்றோர், குழந்தைகளுடன் ஒத்துழைக்க மறுக்கின்றனர். பிள்ளைகள் பாடசாலையைவிட்டு வந்ததும் அல்லது வெளியே சென்று வந்ததும் அங்கு நடந்தவற்றைப் பெற்றோரிடம் பகிர்ந்துகொள்ளவே விரும்புவர். வேலைக்குச் செல்லும் பெற்றோர் வேலையிலிருந்து வந்ததும், களைப்பு மிகுதியால் குழந்தை சொல்ல எத்தனிக்கும் போதே எரிச்சலுடன் வார்த்தைகளைக் கொட்டிவிடுகின்றனர். இது பெற்றோர் - பிள்ளைகளிடையே இடைவெளியை அதிகரிக்கின்றது.

ஒரு பிள்ளையின் மீது 5 வயது வரை பாசத்தையும், 10 வயது வரை கண்டிப்பையும், 10 வயதின் பின்னர் நட்பையும் காட்டி வளர்க்க

வேண்டும். பெரும்பாலான பிள்ளைகள் தமது பெற்றோர் அன்புமிக்கவர்களாகவும், கண்டிப்பு குறைந்தவர்களாகவும் இருக்கவேண்டும் என்றே விரும்புகின்றனர். குழந்தை வளர்ப்பில் மிக முக்கியமானது என்னவென்றால், அவர்கள் செய்யும் செயல்களுக்கு அவர்களையே பொறுப்பேற்கச் செய்தல்.

உதாரணமாக, ஒரு கண்ணாடிப் பாத்திரத்தை குழந்தை உடைத்துவிட்டால், ''எதற்காக உடைத்தாய்'' எனக் கேட்டு தண்டிப்பதைவிட அருகே அழைத்து இவ்வாறான பொருட்களை எவ்வாறு கையாளவேண்டும் என்பதையும் உடைந்த பின்னர் அதனால் ஏற்படும் தீங்கையும் பக்குவமாக எடுத்துரைத்து, இனிமேல் இவ்வாறு நடந்துகொள்ளக்கூடாது என விவரமாகக் கூறவேண்டும். ஒரு செயலில் குழந்தையை ஈடுபடுத்தும்போது அதன் குறைநிறைகளைத் தெளிவாக விளக்கவேண்டும். அச்செயல் பற்றிய தெளிவே அச்செயலின் நன்மை, தீமையைப் பற்றி பிள்ளைகள் அறிய உதவும்.

குழந்தைகள் சொல்ல முற்படுவதை நாம் கேட்டு அவர்களின் சிந்தனையைச் செம்மைப் படுத்தி அங்கீகரித்து அன்பு பாராட்டி உற்சாகமூட்டவேண்டும். அவ்வேளையில்தான் குழந்தைகளின் பிஞ்சு மனதில் பெற்றோரை முழுமனதுடன் ஏற்கும் மனநிலை உண்டாகும். இந்நிலையே பிற்காலத்தில் அவர்களின் வாழ்க்கையைத் தீர்மானிக்க உதவுகின்றது. சிறுவயதில் பிள்ளைகளின் மனதில் பதிபவை தான் பெற்றோர்களை தம்முடையவர்களாக ஏற்றுக்கொள்ள வைக்கின்றது. அவ்வாறு ஏற்றுக்கொண்டுவிட்டால் தாங்கள் நினைப்பதை எல்லாம் பெற்றோரிடம் பகிர்ந்து கொள்ளத் தொடங்குவர்.

ஒரு விடயத்தை குழந்தைகளின் மனதில் ஆழமாகப் பதியச்செய்யவேண்டுமெனின், அதனை ஒரு சம்பவமாக - கதையாகக் கூறவேண்டும். இதனாலேயே குழந்தைகளைக் கதைசொல்லி தூங்கவைப்பதுண்டு. தூங்கும்போது குழந்தை அக்கதையை நன்றாக மூளையில் உள்வாங்கும். அதனால்தான் பிள்ளைகளுக்கு நீதிக்கதைகளை பெரியவர்கள் அதிகம் கூறுவதுண்டு.

ஒரு பிள்ளைக்கு பத்து வயது கடந்ததும் சில விடயங்களை கண்டிப்புடன் சொல்லத் தொடங்கலாம். இந்த விடயம் எனக்குப் பிடிக்காது. இதைச் செய்யாதே எனக் கூறுவதை விட அதனை ஏன் தவிர்க்கவேண்டும் என்பதை அன்பாகவும் உணர்ந்துகொள்ளும் படியும் கூறவேண்டும். அச்செயல் அவர்களுக்கு சமூகத்தில் எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தும் என்பதையும் கூறவேண்டும். இவைதான் பருவ வயதை அடையும்போது பெற்றோர் - பிள்ளைகள் உறவை மேம்படுத்த உதவும்.

(பருவம் தொடரும்)

## ஒளி அரசி நடாத்தும் மாணவர்களுக்கான ஓவியப் போட்டி : 02

# (சித்திரம் பேசுதடி கண்ணம்மா)

**மாணவர்கள் மத்தியில் ஓவியம் வரைதலை ஊக்கப்படுத்துவதற்காக ஒளி அரசியின் தேசிய மட்ட சான்றிதழுக்காக இப் போட்டி அனைத்து வகுப்பு மாணவர்களும் பங்குபற்றக்கூடியவாறு நடாத்தப்படுகின்றது. இதன்படி குறிப்பிட்ட தலைப்புக்கான ஓவியத்தை மாணவர்கள் சுயமாக வரைந்து அதனை ஓவியப் போட்டி, என கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் எழுதி எமது தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்புதல் வேண்டும்.**

### ❋போட்டிக்கான நிபந்தனைகள்❋

* **மாணவர்கள் ஓவியத்தை A4 அளவிலான வெள்ளைத்தாளில் வரைந்து வர்ணமிட்டு ஒவ்வொரு மாதமும் 20ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைத்தல் வேண்டும்.**
* **பரிசுக்குரிய சான்றிதழ்கள் வகுப்பு ரீதியாக முதல் மூவருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும்.**

**ஓவியப்போட்டிக்கான கூப்பன் 02**


பெயர் : ..............................
வகுப்பு : ..............................
பாடசாலை : ..............................
தனிப்பட்ட முகவரி : ..................
..............................
தொலைபேசி : ..............................

போட்டோ பிரதிகள் எடுக்கப்பட்ட கூப்பன் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது

### ஜூன் மாத ஓவியப் போட்டிக்கான தலைப்பு

பாலர் தொடக்கம் தரம் 1 வரையான மாணவர்களுக்கு - அழகான குடை
தரம் 2 தொடக்கம் 5 வரையான மாணவர்களுக்கு - வீதி விபத்து
தரம் 6 தொடக்கம் உயர்தரம் வரையான மாணவர்களுக்கு - தந்தையின் சிறப்பு

மேலதிக தொடர்புகளுக்கு : 011 573 8855



# நமது குழந்தைகள் நல்லமுறையில் கற்கவேண்டும்; அதற்கு என்னதான்வழி!

(சென்ற மாத தொடர்ச்சி)

ஆதலால் அது கற்றலின் நடத்தை வழங்கும். அனுபவித்து படிப்பதை தடைசெய்து கவலையை கொடுக்கும். மேலும் ஒரு விடயத்தை அனுபவித்துப் படிக்கின்றபோது இயல்பாகவே அவ்விடயத்தின் பெரும்பாலான பகுதி நினைவில் பதிந்துவிடும். எனவேதான் மனப்பாடம் என்கிற ஒரு செயல்பாட்டை குழந்தையிடம் திணிக்கக்கூடாது. அது பிள்ளையின் இயல்பான கற்றலுக்கு மறுதலையாக அமைந்துவிடும். உதாரணமாக, நாம் இன்று தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்காக தயாராகின்ற மாணவர்களில் அதிகமான பிள்ளைகள் ஆசிரியர்களினால் மனப்பாடமிடப்படுகின்ற சந்தர்ப்பங்களே அதிகம். பரீட்சை எழுதி முடிந்தவுடன் அனைத்துமே மறந்துவிடுவதையும் நாம் பார்க்கிறோம். பிள்ளையின் ஒரு ஆரம்பப்படியாக தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையை ஒவ்வொரு பெற்றோரும் உணர்ந்துகொள்வோமாக இருந்தால் அக்குழந்தை ஏனைய பரீட்சைகளில் அதிகூடிய அடைவினை காண்பிப்பான் என்பது நிதர்சனமான உண்மையாகும்.

**2. சுதந்திரமான மனோநிலை காணப்படுதல்.**

குழந்தைகள் அவர்களது கற்றலில் சுதந்திரமான தன்மைக்கு வழிவிடுதல் வேண்டும். அதாவது, சிந்திக்கும் ஆற்றலை வளர்த்துக்கொள்ள நாம் எவ்வகையில் உதவியாக இருக்கின்றோமோ அந்தவகையில் அவனது கற்றல் தொடர்பில் சுதந்திரமான போக்குக்கு நாம் விட்டுவிடுதல் நலமாய் அமையும். உதாரணமாக, கலங்கிய நீரை தொடர்ந்து கலக்கிக்கொண்டே இருந்தால் அது எப்போதுமே தெளியாது. ஆனால், அதை அப்படியே தொந்தரவு செய்யாமல் விட்டுவிட்டால் படிப்படியாக தெளிந்துவிடும் என்பது புகழ்பெற்ற தாவோயிச தத்துவம். அதுபோல்தான் நமது மனமும். அதற்கு தொந்தரவும் நெருக்கடியும் தராதவரை அது சிறப்பாக செயல்படும். எனவே, உங்கள் குழந்தையை தொந்தரவு செய்யாமல் எந்த செயலையும் சுதந்திரமாக செய்யவிடுங்கள்.

மேலும் உங்களது பிள்ளையிடம் ஒருவிடயத்தை படித்து முடித்தபிறகு அதனை மீண்டும் ஒருமுறை கேட்டுப்பாருங்கள். அப்போது தான் படித்த விடயங்களையும் அதனுடன் தொடர்புடைய பல்வேறு அம்சங்களுடன் இணைத்துக் கூறுவர். அவ்வாறு கூறுகின்ற திறனை உங்கள் குழந்தைப் பெறுவதற்கு இந்த சுதந்திரமான கற்றல் செயற்பாடுகள் உதவியாகின்றன. உதாரணமாக, ஒரு கதையைப் படித்திருந்தால் அதனோடு தொடர்புடைய கதாப்பாத்திரங்கள் மற்றும் பிற கருத்தாக்கங்களுடன் இணைத்துக் கூறுவார். இதன் மூலம் அந்த கதையானது குழந்தையின் நினைவில் நீண்டகாலம் மறக்காமல் பசுமையாக நிலைத்திருக்கும்.

**3. எமது இலக்கு அதிக புள்ளிகள் பெறுவது என்பதை நினைவிற்கொள்ளல்.**


மூளையின் இயல்பான செயல்பாட்டின் அடிப்படையில் ஒரு விடயத்தை கற்கின்றபோது அது நிறைவான மகிழ்ச்சியைத் தருகின்றது. அந்த செயல்பாட்டின் அடிப்படையிலேயே நாம் நமது பிள்ளைக்கு பயிற்சியளிக்க வேண்டும். இதன்மூலம் வெறும் பாடசாலைப் பாடப்புத்தகத்தோடு மாத்திரம் முடங்கிவிடக்டாது. அதிக புள்ளிகள் பெறவேண்டும் என்பதற்காக நமது குழந்தைகளின் ஒட்டுமொத்த வாழ்க்கையையும் அழித்துவிடக்கூடாது. சரி அப்படி அதிக புள்ளிகள் எடுத்துத்தான் சாதித்தவைகள்தான் என்ன? தரம் ஐந்தில் அதிகூடிய புள்ளிகள் பெற்ற பல மாணவர்கள் க.பொ.சாதாரண தரத்துடன் கணிசமானோரும் உயர்தரப்பரீட்சையில் பலவீதமானோரும் கல்வியை முடித்துக்கொள்வதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதற்குக் காரணம், இந்த புள்ளிகளைப் பெறுவதிலேயே கருத்தாக இருந்தமையாகும்.

எனவே, அறிவின் உண்மையான ஆழத்தைத் தேடி படிப்பதற்கு பழக்கப்படுத்தப்பட்ட குழந்தைகள் எதிர்காலத்தில் அவர்கள் அதிகமதிகம் சாதிப்பார்கள். இதுபோன்ற பயிற்சிகளால் ஒரு குழந்தை அதிகபட்ச மதிப்பெண்களைப் பெறாமலும் போகலாம். ஆனால், அவர்கள் வாழ்க்கையில் வெற்றியடைவார்கள் என்பதை நினைவிற்கொள்ளல் வேண்டும். எமது நாட்டின் புதிய தேர்ச்சிமையக் கலைத்திட்டமானது மாணவர்களை நாட்டிற்கு உகந்த நற்பிரஜையாக்குவதற்கான கல்வியாகவும், அவனே தேடலுள்ள ஒருவனாக மாற்றம் காண்பதற்குரிய வகையிலேயே கல்வி சீர்திருத்தம் கொண்டுள்ளது என்பதையும் நாம் நினைவிற்கொள்ளவேண்டும். அறிவு திறன் மனப்பாங்கு நமது ஒவ்வொரு குழந்தைகளிடமும் குடியேறவேண்டும். அது இயல்பான மற்றும் ஆர்வத்துடன் கூடிய கற்றலுக்கான மழலை ஏற்படுத்துவன் காரணமாக குழந்தையின் அறிவு வளர்ச்சிக்கு ஆகாரமாக அமையும் என்பதை உணர்ந்துகொள்ளல் அவசியமாகும்.


# வண்ணக்கோலங்கள் அழகு 02

அனேக வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்கவும் பாடசாலைச் சிறார்களின் கோலப் போட்டியை மனதில் கொண்டும் மாதாந்தம் கோலாகலமாக கோலங்களை வழங்கி மகிழ்கின்றாள் ஒளி அரசி. பார்த்துப் பழகி பாடசாலை மட்டப் போட்டிகளில் பரிசில் பெறுவீர்களாக...


**நேர்ப்புள்ளி - 15 புள்ளி 8 இல் முடிவடையும்**




படிநிலை 1



படிநிலை 2





படிநிலை 3




படிநிலை 4

**நேர்ப்புள்ளி - 11 புள்ளி 1 இல் நிறுத்தவும்**







# சகலகலா வல்லி ஆதித்தியா



*தனது மந்திரக்குரலால் அனைவரையும் கவர்ந்திழுத்த யாழ் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த இசையரசி ஆதித்யாவுடனும் இசையுலகிற்கு கொடையாக தமது மகளை ஈந்தளித்த அருணகிரிநாதன், சத்தியகலா தம்பதியினருடனும் தந்தையர் தினத்தை சிறப்பிக்கும் வகையில் ஒளியரசி சிறப்பு நேர்காணல் ஒன்றை நடத்தியது. இதன்போது கலந்துரையாடப்பட்ட பயன்மிக்க விடயங்கள் பகிரப்படுகின்றன...*

வேம்படி மகளிர் கல்லூரி தரம் 10 ஐச் சேர்ந்த ஆதித்யா தனது வெற்றியின் இரகசியங்களையும், குடும்பத்தைப் பற்றியும், எதிர்கால இலக்குப் பற்றியும் பகிர்ந்துகொண்டபொழுது,

★ இசை என்னுடனே கூடப்பிறந்தது. இசையை நான் மிகவும் நேசிக்கிறேன். இசைத்துறையில் தமிழ்த்தினப் போட்டிகளில் தேசியமட்டத்திலும் அகில இலங்கை சைவ பரிபாலன சபை பண்ணிசைப்போட்டிகளிலும், விவேகானந்த சபை பண்ணிசைப்போட்டிகளிலும் முதலிடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தை பெற்றுக்கொண்டுள்ளேன். 10 வயதிலிருந்தே நான் இசைத்துறையில் சாதனைகளை புரியத்தொடங்கிவிட்டேன். சக்தி தொலைக்காட்சியின் சிறந்த இளம் நட்சத்திர பாடகர்களுக்கான போட்டியில் 2ஆம் இடத்தைப் பெற்றேன். பராரமேஸ் அவர்களின் உருவாக்கத்தில் உருவான சிறுவர்பாடல்களை பாடியுள்ளேன். அவை இறுவட்டுக்களாக வெளிவந்துள்ளன.

★ என் அம்மாதான் என் குரு. என் அப்பாவின் வழிகாட்டலும், தம்பி ஆருத்ரனின் ஒத்துழைப்பும் எனக்கு மிகவும் உதவியது. அப்பாவின் நண்பர் பெனோ ரமேஸ் எமக்கு பல்வேறு வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளார். மேலும், சிறுவயதிலிருந்தே எனது இசைத்துறை மீதான ஆர்வத்தை வளர்த்த யாழ் இந்து ஆரம்ப பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் யாழ் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையின் அதிபர் ஆசிரியர்கள் என்று பலரும் எனக்கு வழிகாட்டியிருந்தார்கள்.

★ புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்ததுள்ளேன். தொடர்ந்தும் கல்வியில் சிறந்த பெறுபேற்றை பெற்றுவருகிறேன். மேலும் சதுரங்கப்போட்டி, கணித விஞ்ஞான வினா-விடைப்போட்டிகள் ஒலிம்பியாட் போட்டி, புத்தாக்கப் போட்டி, பிரித்தானியா சபை நடத்திய ஆங்கில சிறுகதைப்போட்டி எனப் பல்வேறு போட்டிகளிலும் பங்குபற்றியுள்ளேன். அவற்றில் மாவட்ட ரீதியாக வெற்றியும் ஈட்டியுள்ளேன். என்னை படிக்கும்படி எனது பெற்றோர் வற்புறுத்தியது இல்லை. நேர அட்டவணையை நானே தயார் செய்து படிப்பேன். பொழுது போக்காகவே இசையை நான் கற்கிறேன்.

**பிள்ளைகளுக்கு பரந்துபட்ட தேடல் அறிவை ஊக்குவிக்க வேண்டும்.**
**- தந்தை -**



# ...குடும்பத்துடன் ஒரு பொழுது

> எனது அப்பாவே எனது குரு.
> - மகன் ஆருத்ரன் -

★ வைத்தியராக வரவேண்டும் என்பதுடன் ...மக்களுக்கு இலவச சேவை செய்யவேண்டும் ...ன்பதே எனது விருப்பமாகும்.

> ...த நூல்களை வாசிக்க வேண்டும் அதுவே ...னையை வளர்க்க வழிகாட்டும்.
> - மகள் ஆதித்யா -

...னியே கல்வியோடு மட்டும் நின்றுவிடாமல் அனைத்து துறைகளிலும் சிறந்து விளங்கவேண்டும். அனைவரும் சிறந்த நூல்களை வாசிக்கவேண் ...டும். அதுவே எமது சிந்தனையை வளர்க்க வழி காட்டும்.

ஆதித்யாவின் வெற்றிக்கும் தனது குடும்பத் ...தின் முன்னேற்றத்திற்கும் தன்னையே அர்ப் ...பணித்த தந்தையாகிய யாழ் பல்கலைக்கழக ஆங்கிலத்துறை போதனாசிரியர் அருணகிரிநாதன் ...தனது கருத்துக்களை பகிர்ந்துகொண்டபோது...

★ முதலாவதாக என் மகளிற்கு பரந்துபட்ட தேடல் அறிவை வளர்த்தேன். எனது மகளின் சிந்தனைகள் எல்லைப்படுத்தப்பட்டு இருப்பதை நான் விரும்பியதில்லை. மகள் தானாகவே எதனையும் ஆராய்ந்து செயற்படக்கூடியவாறு வளர்த்தேன். இதுவே அவள் கல்வியில் மட்டுமல்லாது ஏனைய துறைகளிலும் சிறந்து விளங்கச்செய்தது. எனது மகளுக்காக எனது முன்னேற்றங்களைக்கூட தியாகம் செய்து முழு மையான ஒத்துழைப்பு வழங்கினேன். அதுவே அவளை வெற்றிநடைபோடச் செய்தது.

★ நான் கல்வித் திணைக்களத்தில் 8 வருடங் களாக சிறுவர் உளநலம் தொடர்பான துறையி லேயே எனது சேவையை ஆரம்பித்தேன். ஆரம்ப பிள்ளைப்பருவ விருத்தி நுட்பங்கள் தொடர்பாக பல ஆய்வுகளை மேற்கொண்டேன். அதற்கேற்ற வாறே எனது குழந்தை வளர்ப்புமுறை இருந்தது. அத்துடன் நான் சிறுவயதிலிருந்தே சதுரங்க விளையாட்டை நேசித்தேன். சதுரங்கத்தில் ஈர்க்கப்பட்ட எனக்கு முன்மாதிரியாக ஹங் கேரியைச் சேர்ந்த சதுரங்க வீரரான லெஸ்லோ பொல்கார் விளங்கினார். லெஸ்லோ பொல்கார் தனது மனைவியைத் தேர்ந்தெடுக் கும்போது தனக்கு வரப்போகும் மனைவி சாதனை படைக்கக்கூடிய குழந்தைகளை உருவாக்கி அவர்களை வழிநடத்த வேண்டும் என்ற நிபந்தனையை விதித்தார். பின்னர் அவ் வாறான மனைவியையே கரம்பற்றி தனது குழந் தைகள் மூவரையும் சாதனை படைக்க வைத்தார். அவருடைய வாரிசுதான் உலக சாதனை படைத்த யூடித் பொல்கார். அவருடைய வாழ்க்கை யைபோலவே நான் எனது வாழ்க்கையிலும் பின்பற்றினேன். எனது மகளை இசைத்துறை யில் சாதனை படைக்க வைத்தது போன்று மகனை சதுரங்கத்தில் சாதனைபுரிய வைத்துள்ளேன். அவர்களது சாதனைகள் தொடர தொடர்ந்தும் வழிகாட்டுகிறேன். ஒரு தந்தையாகிய எனக்கு லெஸ்லோ பொல்காரின் வரலாறு வழிகாட்டி யதைப்போல ஒவ்வொரு தந்தையரும் குழந்தை வளர்ப்பு என்கின்ற கலையை அறிந்து அதன்படி குழந்தைகளை வழிநடத்தி னால் அனைவருக்கும் வெற்றி நிச்சயம்.

> குடும்பத்தின் வெற்றிக்கு கணவருடனான புரிந் துணர்வான வாழ்க்கையே முதல் காரணமாகும்.
> - தாய் -

ஆதித்யாவின் தாயாரான யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை ஆசிரியை சத்தியகலா கருத்துத் தெரிவிக்கையில்...

எனது மகளை எதற்காகவும் வற்புறுத்திய தில்லை. குழந்தையாக இருக்கும்போதே வெவ்வேறு இசை வடிவங்களை கேட்கும் வாய்ப்பை ஆதித்யாவிற்கு ஏற்படுத்திக் கொடுத்தோம். எனது மகளின் வெற்றிக்கு எனது கணவருடனான புரிந்துணர்வான வாழ்க்கையே முதற்காரணமாகும்.

யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை தரம் 4 ஐச் சேர்ந்த சதுரங்க சாதனையாளனான ஆதித்யாவின் சகோதரன் ஆருத்ரன் கருத்துத் தெரிவிக்கும் பொழுது...

எனது வெற்றிக்கு பல்வேறு ஒத்துழைப்புக் களையும் அம்மாவும் அப்பாவும் அக்காவும் வழங்கி வருகின்றார்கள். எனது அப்பாவே எனது குரு.

வெற்றிகரமான இக்குடும்பத்திற்கு ஒளி அரசி தனது வாழ்த்துக்களைத் தெரிவித்து நேர்காணலை நிறைவுசெய்தது.

# புத்திசாலிகள் முன்வைக்கும் தீர்வுகள்

வித்தியா படுகொலையை எதிர்த்து தமிழ் சமூகம் மிகப் பெரும் அளவில் கொந்தளித்தெழுந்தமை வித்தியா காவியமானதை காட்டி நிற்கிறது. சட்டமும், அரசும், கல்வியாளர்களும் எதிர்காலத்தில் இவ்வாறான பெண்கள் மீதான துன்புறுத்தல்களை எவ்வாறு தடை செய்வது என மூளையை குடையும் இச்சந்தர்ப்பத்தில் சமூகத்தின் முன்னோடிகளான புத்திஜீவிகளுடன் இதற்கான தீர்வுகள் தொடர்பில் ஒளியரசி ஆராய்ந்தாள்.

**சட்டத்தரணி, கே. வி. தவராசா :** எனது சட்டத்துறை வாழ்க்கையில் வித்தியா படுகொலை போல மனதை உலுக்கிய சம்பவம் வேறெதுவுமில்லை. உலக வரலாற்றிலே ஒரு பெண் 9 பேரால் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டமை முக்கியமான நிகழ்வாகும். 2009 ஆம் ஆண்டு யுத்தத்தின் பின் எமது பண்பாடு கலாச்சாரத்தின் சீரழிவுகளையே இந்தப்படுகொலை எடுத்துக்காட்டி நிற்கிறது. நான் பிறந்த மண்ணிலே இப்படியான நிகழ்வு இடம்பெற்றிருப்பது வேதனைக்குரியது. இதில் ஈடுபட்ட குற்றவாளிகளுக்கு உச்சத்தண்டனை வழங்கப்பட வேண்டும். பொதுவாக சட்டத்தின்படி பாலியல் வன்புணர்வு செய்த குற்றவாளிகளுக்கு 15-20 வருடங்கள் வரையான சிறைத்தண்டனையும் கொலையாளிக்கு மரணதண்டனையும் வழங்கப்படலாம்.

**நாடாளுமன்ற உறுப்பினர், ஈ. சரவணபவன் :** புள்ளிவிவரங்களின்படி இவ்வாறான படுகொலை சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் உயர்தரம் கற்காத தம் வாழ்வை செம்மைப்படுத்தாத குடிகார கூட்டங்களாகும். இவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தில் தாம் செய்யும் பாதக செயல்கள் வெளியே தெரியவராது என்ற சிந்தனையுடனேயே செய்கிறார்கள். ஆனால், வரலாற்றை புரட்டிப்பார்த்தால் ஏதோ ஒருநாள் அது வெளியில் வந்த உண்மை புரியும். எனவே, இதுவரை இடம்பெற்ற பாலியல், ஒழுக்கக்கேடு, வன்முறை தொடர்பான நிகழ்வுகளையும் அதற்கு சட்டம் வழங்கிய திர்ப்புகளையும் உள்ளடக்கி பாடத்திட்டம் உருவாக்கப்பட்டு சாதாரண தரத்தில் (9 - 11) ஒழுக்க சட்டகல்வி, எனும் புதிய பாடமொன்றை பெண்களுக்கும், ஆண்களுக்கும் தனியாக உருவாக்கி அவர்களை செம்மைப்படுத்தி வழிப்படுத்த வேண்டும். இது நீண்டகாலத்தில் இவ்வாறான வன்முறைகளைத் தடுக்கும். இது தொடர்பாக கல்வி அமைச்சருக்கும் கடிதம் அனுப்பியுள்ளேன். அத்துடன், இச்சம்பவம் அரசியல், காரணங்களுக்காக திட்டமிட்டு நடத்தப்பட்டதோ? எனவும் எண்ணத் தோன்றுகிறது. எது எப்படியிருப்பினும் சட்டம் தகுந்த தீர்வு வழங்க அரசுக்கு நானும் அதிக அழுத்தம் கொடுப்பேன்.

**வைத்தியர், சிவருபன் :** நமது மண்ணுக்காக மடிந்துவிட்ட புனிதர்கள் வாழ்ந்த தமிழ்மண்ணில் யுத்தம் நிறைவடைந்த பின்னர் சட்ட வைத்திய அதிகாரியாக கடமையாற்றியிருந்த 4 வருட காலப்பகுதியில் 4வ[...] சிறுமி முதல் வயது முதிர்ந்த ஒருவர்வரை ப[...] பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட கொ[...] செய்யப்பட்ட பல கொடூரமான நிகழ்வுகளைக் கண்டி[...]கிறேன். ஆனால் சந்தேக நபர்கள் பலர் இன்று வெளி[...] நடமாடும் சூழலே காணப்படுகிறது. இந்தச் சூ[...] மாறி வித்தியாவுக்கு நடந்தது போன்ற சம்பவம் இ[...] மேலும் நடைபெறாதிருக்க நீதித்துறை முதல் பல்[...] துறைகளும் மீள்சீர்செய்யப்பட வேண்டும். சுயாட்சி அதிகா[...] தமிழர் கைகளில் வரும்போது தான் அனைத்தையும் மீ[...] செய்து நல்லதொரு சமுதாயத்தை கட்டியெழுப்ப முடியு[...] அவ்வாறான மாற்றம் உருவாகாதுவிடின் மறக்கப்ப[...] வர்கள் வரிசையில் வித்தியாவும் மறக்கப்பட்டுவிடுவா[...]

**அருட்தந்தை, ஜெயக்குமார் :** வித்தியா படுகொ[...] என்பது ஆணாதிக்க சமூகத்தின் அடக்குமுறை[...] எடுத்துக்காட்டுகிறது என்பதே ஆழமான உண்மையாகு[...] சிறுவயதிலிருந்தே பாலியல் தொடர்பாக பெண்களுக்[...] விழிப்புணர்வையும் ஆண்களுக்கு அறிவூட்டலை[...] வளர்க்க வேண்டும். தமிழ் மண்ணில் இது போன்ற துர்ப[...]கிய விடயம் இனிமேல் நடக்கக்கூடாது. நமது சமூகம் நா[...]மான பாதுகாப்பான சமூகமாக இருக்கிறதா? ந[...] தொடர்ந்தும் தெற்கே பழிசுமத்துவதிலே நிற்கிறோ[...]யொழிய எம்மைப்பற்றிய சுயவிமர்சனம் செய்து கொ[...]வில்லை. இது ஒரு வக்கிர கலாசாரத்தை எடுத்துக்காட்[...]கிறது. இப்படுகொலை பலதரப்பட்டவர்களுக்கும் உள[...]யல் ரீதியாக பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

**ஆசிரியர் சங்கச் செயலாளர், யோசப் ஸ்ராலின்** வித்தியா படுகொலையை ஆசிரியர் சங்கம் வன்மைய[...] கண்டிக்கிறது. முன்பு சிறுமி ஒருவர் கடற்படையினரா[...] பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்ட சம்[...]வம் போன்று பாலியல் ரீதியான குற்றச்செயல்கள் இன்[...] அதிகரித்து வருகின்றன. இவ்வாறான கடந்தகாலத்தி[...] நடந்தவை தொடர்பான தீர்வுகளையும் வித்தியாவி[...] கொலைக்கான தீர்வையும் விரைவாக பெற்றுக்கொடுக்[...] வடமாகாண சபை நடவடிக்கை எடுக்க வேண்டு[...] மேலும் வடமாகாணத்தில் போதைப்பொருள் பாவனை[...] அதிகரித்துச்செல்கிறது. அதனை முற்றாக இல்ல[...]தொழிக்க சட்டம் இறுக்கப்பட வேண்டும்.

**உளவியல்துறை பேராசிரியர், தயா சோமசுந்தரம்** போர்ச்சூழலுக்கு பின் வித்தியா படுகொலை போன்[...] பல சமூக சீரழிவு நிகழ்வுகள் அதிகரித்து காணப்ப[...]கின்றன. தற்போதைய நமது சமூகத்தின் பிழையா[...] சமூக கட்டமைப்பும் இளைஞர்களின் போதைப்பொரு[...] பாவனையும் குடிப்பழக்கமும் உணர்வு ரீதியான உந்[...]தல்களும் இதற்கு காரணமாக அமைகின்றன. ஒழு[...]கான தலைமைத்துவ வழிகாட்டல் இன்மையு[...] வாழ்க்கையைப்பற்றிய எதிர்கால நம்பிக்கையின்மையு[...]






● மாணவர் வரவீனத்தில் ஆசிரியரின் விழிப்புணர்வு அவசியம். சர்வதேச பாடசாலையைப் போன்று அறிவிப்பின்றி சமுகம் தராத மாணவர் வீட்டுக்கு உடன் தொலைபேசி அழைப்பு விடுக்கவேண்டும்.



# ...ள்காவியமாகிய வித்தியா



...க சீரழிவானவர்களை உருவாக்குகிறது. பெண்கள் மீதான வன்முறைகள் அதிகரித்த வண்ணமே ...ள்ளன. பெண்கள் உளவியல் ரீதியாகவும் சமூகத்தில் மிகவும் பாதிக்கப்பட்டு வருகிறார்கள்.

...**னித உரிமை இல்ல நிறைவேற்று அதிகாரி, செரின் சேவியர் :** வித்தியா படுகொலை ...ழ்ந்பது பாரதூரமான மன்னிக்க முடியாத குற்றமாகும். இது பெண்களுக்கு எதிரான வன்முறை ...ன் வடிவமேயாகும். பெண்களுக்கு எதிரான வன்முறை என்பது காலம் காலமாக ...டைபெற்றுக்கொண்டே வருகிறது. பெண்கள் பாதுகாக்கப்படவேண்டியவர்கள் என்ற ...ழிப்புணர்வு தொடர்ந்தும் அனைவரிடத்திலும் உருவாக வேண்டும். இதற்காக ...பண்கள் மீதான சிறு வன்முறைகளையும் ஆரம்பத்திலிருந்தே கண்டிக்க வேண்டும். ...க்களின் எழுச்சி என்பது வரவேற்கத்தக்க விடயமாகும். குற்றவாளிகள் மிகக் கடுமை ...ாக தண்டிக்கப்பட வேண்டும். ஆனால் சட்டத்தை மக்கள் தமது கைகளில் எடுக்க ...டியாது. வன்முறைக்கு வன்முறை என்பதிலிருந்து ஒருபோதும் தீர்வு உருவாகாது.

**மாகண சபை உறுப்பினர், அனந்தி சசிகரன் :** சவுதி போன்ற நாடுகளைப்போல ...டுமையான கட்டுக்கோப்பை உருவாக்குவதுடன் பாடசாலைகளில்கூட பெண்களுக் ...ான தற்காப்பு கலையை பயிற்றுவிப்பதன் மூலமுமே இதுபோன்ற கொடுமைகளைத் ...டுத்து பெண்களைக் காப்பாற்றமுடியும். மதப்பற்று குறைவடைந்துவிட்டதும் எமது ...லாசார பண்பாடுகள் சிதைவடைந்துவிட்டதும் இதற்கான முக்கிய காரணங்களாகும். ...வர்களுக்கு உயர்ந்தபட்சத் தண்டனை வழங்கப்பட்டு, இவ்விடயத்தில் சமூக அமைப்பு ...ள் கவனமெடுத்து இனியொரு கொடூரம் நடக்காதிருக்க வழிசெய்ய வேண்டும்.

**கோட்டக்கல்வி அலுவலர், சி. நற்குணலிங்கம் :** இணைய வளர்ச்சி, பயமற்ற தன்மை, ...னிதத்திலிருந்து தூரவிலகிச் செல்லல், வேரற்ற கலாசார மோகம், போதைப்பொருள் ...வனை, வாள்வெட்டுக் கலாசாரம் இவை காரணமாக மனிதன் வக்கிரமனதுடன் பெண்களுக்கு ...திராக பாலியல் துன்புறுத்தல்களில் ஈடுபடுகின்றான். இதன் வளர்ச்சிப்படியாக புங்குடு ...வு மகா வித்தியாலய மாணவி. இத்தகைய செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகக் ...டுமையான நடவடிக்கை காலம் தாழ்த்தாது உடனும் எடுக்கப்படவேண்டும்.

...**திபர், ச. பூலோகராஜா :** புங்குடுதீவு செயல் ஒரு கொடூரமான - மிருகத்தனமான ...சயலாகும். தனிமனித பலவீனத்தைத் தாண்டி கூட்டு வன்முறை கொடுஞ்செயல். ...ரணதண்டனையே தீர்வாக அமையும். இவர்களுக்காக வாதாட சட்டத்தரணிகள் ...ஜராகக்கூடாது.

**இல்லத்தரசி, பா. நேசமலர் :** ஆணாதிக்க வெறித்தனத்தின் மிக உச்சமான ...ச்செயல் மன்னிக்கவே முடியாதது. மனிதாபிமானமற்ற முறையில் அனைவருக்கும் ...ரக்குத்தண்டனை வழங்கவேண்டும்.

**வர்த்தகர், ஜமுனா ஸ்ரோஸ்,. பொதுமகன், மு.காந்திறோய் :** ...துப்பாவனையைக் கட்டுப்படுத்தினால் அநேக குற்றங்களை ஒழிக்கலாம். இந்தச் ...செயல் குடும்ப பிணக்கு சம்பந்தமானதாக இருப்பினும், இவ்வாறான செயல் கடும் ...கொடுமையானது. இந்தக் குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை ...கொடுக்கப்பட்டு தண்டிக்கப்படவேண்டும்.

**மாதர் சங்கத் தலைவிகள், சு. சுபதர்ஷினி, சசிபரன் சங்கீதா, இந்திரா காந்தி :** வித்தியாவின் கொடூரக் கொலையை ஜீரணிக்கவே முடியவில்லை. எத்தனை ஆர்ப்பாட்டங்கள் செய்தபோதும் இத்தகைய பிரச்சினைகள் தொடர்ந்தவண்ணமே உள்ளன. இக்குற்றவாளிகளை மன்னிக்கக்கூடாது. இளைஞர்கள் மத்தியில் கலாசாரத்தின் ஆழத்தன்மையை சமூகங்கள் உணர்த்தவேண்டும். இதனை சட்டப்படி தீர்ப்பதனால் காலதாமதம் ஏற்படும். இதற்கு உடனடியாக ஒரு குழுவை அமைத்து அதி உச்ச தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கவேண்டும். ▲



● போதைப்பொருள் கடத்துபவருக்கு மரண தண்டனை அவசியம்.



● சாதாரண தரத்தில் ஒழுக்கக் கல்வி எனும் பாடம் ஆண்களுக்குத் தனியாக, பெண்களுக்கு தனியாக தேவை.



● மாணவிகளை தனியே கற்க அனுப்புவதை பெற்றோர் இயன்றவரை தவிர்க்க வேண்டும்.



● பொலிஸ் நிலையத்தில் ஒய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர் கடமை புரியவேண்டும். இதன்மூலம் முறைப்பாடுகளுக்கு பொலிஸ் உடன் நடவடிக்கை எடுக்க முடியும்.



...ண்களுக்கு தற்பாது ...கலைப் பயிற்சி ...ம். ● மதுபானத்தை ...ம் சட்டம் தேவை.



● சட்டத்தை மக்கள் கையிலெடுக்கும் அளவுக்கு ஆட்சி மௌனிக்கக்கூடாது. ● மரண தண்டனை வேண்டும்.





# பெண்கள் மீதான வன்முறைகளை களைந்தெறியுங்கள்

இன்றைய நவீன உலகில் பெண்களின் சாதனைகள் தொடர்ந்தவண்ணமே உள்ளன. நாட்டின் ஜனாதிபதியாக, உலக வரலாற்றின் சாதனைப் பெண்களாக, வீராங்கனைகளாக கவிஞர்களாக, கலைஞர்களாக, எழுத்தாளர்களாக பல உயர்ந்த நிலைகளை இன்றைய பெண்கள் அடைந்திருக்கிறார்கள். சகல துறைகளிலும் முன்னிலையில் பெண்கள் இருந்தாலும் அவர்கள் ஆண்களுக்குச் சமமாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. காலாகாலமாக நிலவிவந்த பெண்களின் அடிமைத்தனம் குறைந்ததேயொழிய பெண்ணினத்துக்கு முழுமையான சுதந்திரம் கிடைக்கவில்லை என்றே சொல்லவேண்டும். இந்த அடிமை நிலையை நீக்க எத்தனையோ பெண்ணியவாதிகளும், சமூகவியலாளர்களும், அரசியல் தலைவர்களும் பல காலம் போராடி வருகின்றனர். ஆனால், பெண்களை அடிமைகளாக நடத்தும் நிலை இன்றும் இருக்கின்றது. இதற்குப் பெண்கள் தொடர்பான தவறான புரிதல்கள், மூட நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், பாரம்பரியம், பண்பாடுகள் என்பனவே காரணமாயிருக்கின்றன. எமது நாட்டிலும் சரி, உலக நாடுகளிலும் சரி பல பெண்கள் அவலம் நிறைந்த வாழ்க்கையையே வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். நமது நாட்டில் வாழும் பெண்கள் பலரின் உள்ளங்களில் ஆற்றமுடியாத காயங்கள் உள்ளன. பெண்கள் மீது பிரயோகிக்கப்படும் அநேகமான வன்முறைகள் வெளியே தெரிவதில்லை. அதாவது, பெண்கள் பல பிரச்சினைகளை வெளியே சொல்லப் பயப்படுவார்கள். வெளியே சொல்வதனால் பிரச்சினைகள் இன்னும் அதிகரித்துவிடும் என்ற பயம். அல்லது பிறருக்குத் தெரிவித்தால் அவமானம் ஏற்படும் என்ற பயத்தாலும் சமுதாயத்தால் ஒதுக்கப்படுவோமோ என்ற உணர்வாலும் பல பிரச்சினைகளை பெண்கள் தங்களுக்குள்ளேயே வைத்துக்கொள்கிறார்கள். இன்றைய காலத்தில், பெண்கள் உரிமை மற்றும் அவர்களின் பாதுகாப்பு எனப் பலரால் கூறப்பட்டாலும் பெண்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் அடக்கப்படுவதும் ஆபாச பொருளாக பார்க்கப்படுவதும், பலர் வீடுகளிலும் பலர் பொது இடங்களிலும் வேலைத்தளங்களிலும் அவமானப்படுத்துவதும் நடந்தவண்ணமே இருக்கிறது. ஒரு பெண் எவ்வளவு தைரியமானவள் என்றாலும் ஏதாவது ஒரு காரணத்தால் அவள் பின் தள்ளப்பட்டுக்கொண்டே இருக்கின்றாள். பெண்கள் பெரும்பாலும் அலுவலகங்களிலும் வீடுகளிலும் ஆண்களால் மட்டுமின்றி பெண்களாலும் துன்புறுத்தப்படுகிறார்கள். இதன் காரணமாக மனமுடைந்து தனது தைரியத்தையும் இழக்கும் பெண்கள் பலர் தற்கொலை செய்யும் அபாய நிலைக்கு சென்றுவிடுகிறார்கள். இங்கேதான் பெண்களுக்கு மனத்துணிவு அவசியமாகும். எப்பொழுது நமது நாட்டில் தைரியமாகவும் நடுநிசியிலும் பெண்கள் உலாவக்கூடிய காலம் வருகின்றதோ அப்போதுதான் எமது நாட்டினதும் பெண்களினதும் சுதந்திரம் உறுதிப்படுத்தப்படும்.

பெண்களை அடக்கி ஒடுக்குவதும் அவர்களை பல்வேறு துன்பங்களுக்கு உள்ளாக்குவதும் தவிர்க்கப்பட வேண்டிய விடயங்களாகும். பெண்களும் தம்மைபோன்ற மனிதர்கள்

தான் என்று ஆண்கள் சிந்திக்கவேண்டும். அவர்களின் உணர்வுகளுக்கும் மதிப்பளித்து அவர்களுக்கும் உரிமைகள் உண்டு என்பதை உணர்ந்து உரிமைகளை வழங்க முன்வர வேண்டும். அத்துடன் பெண்களை மதிக்க தெரிந்திருக்க வேண்டும். பெண்களுக்கும் உயிர் உண்டு என்பதை ஆண்கள் உணர வேண்டும். சில பெண்கள் வாழ்க்கைப் போராட்டத்தை தினமும் எதிர்கொண்டவர்களாகவே வாழ்கின்றனர். இவர்களின் வாழ்வு வளம் பெற வேண்டுமாயின், மனித மனங்களில் மாற்றங்களை ஏற்படுத்திக்கொள்வதோடு எதிர்கால சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய வகையில் அவர்கள் தம்மை தயார்படுத்திக் கொள்ள வேண்டியதும் காலத்தின் தேவையாக உள்ளது.

இவ்வாறு பெண்கள் இன்று பல்வேறு கொடுமைகளுக்கு ஆளாகிவருகின்றனர். பெண்கள் மீதான கொலை, கொள்ளை, பாலியல் ரீதியான துன்புறுத்தல்கள் தொடந்த வண்ணமே இருக்கின்றன. எமது நாட்டில் பெண்களுக்கான பாதுகாப்பு அறவே இல்லை. நாளுக்கு நாள் அதிகரித்து வரும் இப்பிரச்சினைகளுக்கு பெண்கள் சம்பந்தமான அமைப்புக்கள் சரியான முடிவுகளை எடுக்கவேண்டும். பெண்விடுதலை என்று சொல்லிக்கொண்டு பல பெண்கள் சார்ந்த அமைப்புக்கள் செயற்படுகின்றமையும் விழிப்புணர்வு நிகழ்வுகள் பல நடைபெறுவதையும் காணக்கூடியதாக இருக்கிறதேயொழிய பெண்கள் முழுமையாக சுதந்திரம் பெறவில்லை; விடுதலை பெறவில்லை என்றே சொல்ல வேண்டும். எனவே, பெண்கள் மீதான குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு தகுந்த தண்டனை வழங்கப்பட வேண்டும். மறைமுகமாக பெண்கள் மீது மேற்கொள்ளப்படும் வன்முறைகளை கண்டறிந்து அதற்குரியவர்களுக்கு கடுமையாகத் தண்டனை வழங்கப்பட வேண்டும். அப்போதுதான் பெண்கள் மீதான குற்றச்செயல்கள் குறைந்துசெல்லும். ஒவ்வொரு பெண்ணும் தலைநிமிர்ந்து வாழும் காலம் உருவாகும் என்பதை அனைவரும் புரிந்துகொண்டு செயற்பட வேண்டும்.

# உலகில் மிகவும் முதுமையான முதல் நூற்றாண்டு வயோதிபர்!



உலகிலேயே மிகவும் பழைமையான நூற்றாண்டு வயோதிபர் ஜப்பானில் டோக்கினோஷிமா தீவில் ஏசோமோன் என்னுமிடத்தில் வாழ்ந்தவர். இவர் 1980ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29ஆம் திகதி தனது 115ஆவது பிறந்த தினத்தை முதன் முதலாக கொண்டாடியதாக கின்னஸ் புத்தக அறிக்கை தெரிவிக்கின்றது.

ஹீச்சியே சூமீ என்னும் இந்த வயோதிபர் 1865ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29ஆம் திகதி பிறந்தார். 1871ஆம் ஆண்டு ஜப்பானில் முதன் முறையாக நடைபெற்ற குடிசனமதிப்பீட்டின் போது இவருக்கு வயது 6.

தினமும் இரவு 8 மணிக்கு படுக்கைக்குச் சென்று காலை 7 மணிக்கு எழுந்துவிடுவார். நாயுடன் நடைபயிற்சிக்குச் சென்றுவிடுவார்.

தன்னுடைய நீண்ட ஆயுளுக்குக் காரணம், கவலையற்ற வாழ்வாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இம்மாத தந்தையர் தின சிறப்பிதழில் இந்த வயோதிபரை நினைவுகூருவது சாலச் சிறந்ததாகும்.




# ஜூன் மாத இராசிபலன்

## 01.06.2015 தொடக்கம் 30.06.2015 வரை



**மேடம்**

அதிகார சித்தி, வாக்குக்கலகம், பித்தரோகம் மனப்பயம், வங்கி நிலை மாற்றம்.



**இடபம்**

எண்ணியவை தாமதம், உடல் நலத்தில் குந்தகம், தன நஷ்டம், சத்துரு வெற்றி, வீண்வாதாம், தர்க்கம், காரியக்கேடு.



**மிதுனம்**

மாணவர்களுக்கு மந்தக்குணம், ஆர்வக்குறைவு, சகோதர இனப் பகை, தொழில் சமநிலை இலாபம், நிதானம் குறைவு, முற்கோபம்.



**கடகம்**

பல வழிச் செலவுகள், வியாபாரம் மந்தமும் நட்டமும், வாகனம் அவதானம், புதிய விடயங்களைத் தவிர்க்கவும்.



**சிம்மம்**

பலவித துன்பம், வயிறு, நெஞ்சு, உடல் ரோகம், தேவையற்ற சிந்தனைகள், நித்திரைக் குறைவு, வெளியிட உதவி ஏமாற்றம்



**கன்னி**

பொருட்சேதம், கொடுக்கல் வாங்கல் அவதானம், இனசனக் கொண்டாட்டம், தொழில் கவலை, நண்பர்கள் தொல்லை.



**துலாம்**

எதிலும் வெறுப்பு, வீண்குறைகள் வரும், குடும்ப மணஸ்தாபம், எதிர்பாரா செலவுகள், மனப்பயம்.



**விருச்சகம்**

பொருட்சேதம், கோபம் அதிகம்; அதனால் குடும்பத்தில் பிரச்சினைகள், வேலையாட்கள் எதிர்ப்பு, தொழில் மந்தம்.



**தனு**

மனக்கவலை விகுதி, கல்வியில் நாட்டம் குறைவு, எதிர்வாதம் குறைவு, அவசரக்கோபம் விருதி.



**மகரம்**

உடல் ரோகம், உணவில் விருப்பம் குறைவு, தொழில் யோசனை, வாகனத்தால் சேதம், வைத்தியச் செலவு.




**கும்பம்**

குடும்பக்கவலை, ஞாபகமறதிக்குணம், பெரியோர் மதியாமை, கெட்டமனிதரின் நட்பால் வீண்பிரச்சினை.



**மீனம்**

காரியசித்தி, பொருள் நட்டம், கொடுக்கல் வாங்கல் ஏமாற்றம், உடல் சோம்பல், நிதானமாய்க் கதைக்கவும்.



வடமாகாணத்தின் பிரபல ஜனரஞ்சக சோதிடரும் யோகாசன வித்துவானுமாகிய ஜோதிட கலாநிதி **சிவஸ்ரீ. க. கந்தசாமி குருக்கள்,** ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் குடியிருப்பு, வவுனியா.




**சாந்தி, மஸ்கெலியா.**

**கேள்வி : குடும்பத்தில் வரும் துன்பங்களுக்குக் காரணம் என்ன?**

**பதில் :** மறக்க வேண்டியதை மறக்காது நினைத்திருப்பதும், மறக்க வேண்டாதவற்றை மறந்துவிடுவதும்தான் இதற்குக் காரணம்.

**நிதர்ஷா, மாந்தை.**


**கேள்வி : காதல் சைவமா? அசைவமா?**

**பதில் :** தொடங்கும்போது சைவம், தொடரும்போது அசைவம். ஆமா நீங்க சைவமா? அசைவமா?

# அம்மா – மனைவி வேறுபாடு?

**கயல்விழி, வரணி.**

**கேள்வி : காற்றிலிருந்து மின்சாரம் தயாரிக்க முடியுமா?**



**பதில் :** முடியும். இதற்காக SLEEK 20 K.W. WING 7 PROTOTYPE என்ற காற்றாலை ஒன்றை தயார் செய்துள்ளார்கள். இது விமானத்தைப் போல் காற்றில் பறக்கும் சக்திகொண்டது. விண்ணில் காற்று எங்கே வேகமாவும், தொடர்ச்சியாகவும் உள்ளதோ அந்த இடத்திற்கு அது செல்லுமாம். மணிக்கு 22 மைல் வேகத்தில் வீசும் காற்றிலிருந்து 20 k.w மின்சாரத்தை இது உருவாக்கும்.


**கவிதா, புங்குடுதீவு.**

**கேள்வி : அம்மு, பெண்கள் மீதான பாலியல் வல்லுறவைத் தடுக்க சிறந்த வழி ஒன்று கூறுங்களேன்?**

**பதில் :** குறுங்காலத்தில் சட்டமூலம் நிறுத்துவதாயின் குற்றவாளிகளுக்கு மரணதண்டனைதான் விதிக்கவேண்டும். விழிப்புணர்வு மூலம் நீண்டகாலத்தில் நிறுத்துவதாயின், பல ஆண்கள் தாம் செய்யும் வல்லுறவுகள் வெளியில் தெரிந்துவிடும் என்ற பயத்திலேயே கொலைகளைச் செய்கின்றனர். சிறுவயதில் வீட்டில் பொய் சொல்லிய பழக்கத்தில் இருந்துதான் இது தொடங்குகின்றது. இதனால் இதைத்தடுக்க ஆரோக்கியமான வழியாதெனில், 'ஒழுக்க கல்வி' என்ற பாடத்தை சாதாரண தரத்திலிருந்து உருவாக்கி அதில் இவ்வாறான ஒழுக்கக்கேடான சம்பவங்களின் தன்மைகளையும் அதற்கு வழங்கப்பட்ட பழைய தீர்ப்புகளையும், விளைவுகளையும் தெளிவுபடுத்தி பாலியல் வன்முறை தவறு என்றாவது ஒருநாள் பிடிபடும் என்பதை ஆண்களுக்கு உணர்த்தவேண்டும். இதற்கேற்றவாறு பாடத்திட்டத்தை வடிவமைக்கவேண்டும்.

**சத்தியா, பலாங்கொடை.**

**கேள்வி : அம்மா – மனைவி வேறுபாடு என்ன?**



**பதில் :** வீட்டில் சாப்பாடு செய்து பரிமாறும் விடயத்தை கவனித்தீர்களா? மகன் தட்டை தூக்கிக்கொண்டு மறுதோசைக்காக சமையல் அறைக்கு வந்தால் அவனது மனைவி தோசை சுடுகிறாள் என்று தெரிந்துகொள்ளலாம். அதுவே மகன் இருக்கும் இடத்திற்கே தோசையும் சட்னியும் போனால் தோசை சுடுவதும் எடுத்து வருவதும் அம்மா என்று தெரிந்து கொள்ளலாம். அந்த பாசம்தான் வேறுபாடு.

ஸஹீட். எம். சப்ரீன், மருதமுனை.

# பிள்ளைகளைப் பற்றியும் சிந்தியுங்கள்



விடிகின்ற பொழுதுகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்திலே புதிய விடயங்களுடன் விடியவேண்டும். வழமை போன்று இனிய பொழுதாய் அமைந்த ஒருநாள். காரியாலயத்தை வந்தடைந்ததும் காரியாலயத்திற்கு முன்பாக பாடசாலை சீருடையுடன் ஒரு மகளும், தாயும் எனக்காக காத்திருந்தனர். காலை வணக்கத்தை கூறிவிட்டு காரியாலயத்தை திறந்து உள்ளே அழைத்து அமரச் சொன்னேன். தலையைக் குனிந்தபடியே அமர்ந்திருந்தாள் அந்த மாணவி. விடயங்களைக் கூறச் சொன்னதும் அழுதபடி ஆரம்பித்தார் அந்தத் தாய்.

எங்களுக்கு ஒரே ஒரு குழந்தைதான். இவள்தான் அந்தக் குழந்தை. நாங்கள் இருவரும் ஆசிரியர்கள். எங்களால் முடிந்தளவிற்கு எந்தொரு குறையும் இல்லாமல் இவளை வளர்த்தோம். இந்த நிமிடம் வரைக்கும் அவ்வாறுதான் வளர்க்கின்றோம். எந்தொரு விடயத்திலும் குறை வைத்தது கிடையாது. வேண்டிய உணவுகள், விரும்பிய ஆடைகள், புத்தகங்கள் என்று எல்லாம் குறைவில்லாமல் செய்கின்றோம். படிப்பிலே மிகவும் சிறந்து திறமையாக இருந்த இவள் சில மாதங்களாக படிப்பிலே மிக மோசமாக இருக்கிறாள். காரணம் என்னவென்று தெரியவில்லை. நாங்கள் எது பேசினாலும் ஒழுங்காக பதில் கூறுவதில்லை. யாருடனும் ஒழுங்காக பேசுவதில்லை. இந்நிலை நீடித்தால் என்னவாகுமோ என்று பயமாக இருக்கின்றது. அதனால் தான் இங்கு வந்தோம் என்றார். அந்தத் தாயினுடைய பேச்சை அப்படியே உள்வாங்கியவனாக தலையைக் குனிந்த மாணவியிடம் பேச ஆரம்பித்தேன். பல தடவைகள் பெயரைக் கேட்டும் எந்தொரு பதிலும் வரவில்லை. இறுதியாக தாயிடம் சற்று வெளியே இருக்குமாறு கூறிவிட்டு மீண்டும் மாணவியிடம் பயப்படாமல் பேசுங்கள் உங்கள் மாற்றத்திற்கான காரணம் என்ன எனக் கேட்டேன். குனிந்த தலை சற்று அசைந்தது. அழுதபடியே பேசத் தொடங்கினாள் அந்த மாணவி.

எனது தாய் கூறியது போலவே அவர்களுக்கு ஒரு செல்லப் பிள்ளை நான். எனக்கு அவர்கள் எந்தக் குறையுமே வைத்தது கிடையாது. மிகவும் சந்தோசமாக என்னை வளர்த்தார்கள். நாங்கள் மூவரும் சந்தோசமான மூன்று நண்பர்களாக வாழ்ந்தோம். தரம் ஒன்றிலிருந்து இன்று வரை நான்தான் வகுப்பில் முதலாம் பிள்ளை. ஆனால் சில மாதங்களாக எனது தாய்க்கும் தந்தைக்குமிடையில் சரியான உறவு இல்லை. என்ன காரணமென்று தெரியவில்லை. அவர்கள் இருவரும் பேசுவதில்லை. ஆனால், ஒரே வீட்டில் தான் இருக்கின்றோம். ஒரே அறையில்தான் உறங்குகின்றார்கள். அப்பாவுடன்தான் அம்மா பாடசாலைக்கு செல்கின்றார். வரும்போதும் அப்பாதான் அம்மாவை ஏற்றி வருகின்றார். ஆனால், வீட்டுக்கு வந்ததும் இருவரும் வெவ்வேறு நபர்கள் போல் இருக்கின்றார்கள்.

சந்தோசமாக வாழ்ந்த எங்களுக்குள் இப்படி ஒரு இடைவெளி வந்தது என்னால் தாங்க முடியவில்லை. ஒரு சில நாட்களில் சரியாகி விடும் என எதிர்பார்த்தேன். இன்று வரை அது முடியவில்லை. இந்த விடயத்தை மனதில் வைத்துக்கொண்டு என்னால் யாருடனும் ஒழுங்காக பேச முடியவில்லை. படிக்கவும் விருப்பமில்லை. பாடசாலைக்கு போகக்கூட மனமில்லை. தன் மனக் குமுறல்களை யாரிடம் கூறலாம் எனக் காத்திருந்ததைப் போல் எல்லாவற்றையும் கொட்டித் தீர்த்தாள் அந்த மாணவி. இந்த நிமிடமே இந்தப் பிரச்சினையை தீர்த்துத் தருகின்றேன். இனி நீங்கள் ஒழுங்காகப் படிக்க வேண்டும். முன்பு போன்று சிறந்த பிள்ளையாய் இருக்கவேண்டும் என்று உறுதிமொழி கூறி வாங்கிக் கொண்டு தாயை அழைத்து அந்தத் தந்தையின் தொலைபேசி இலக்கத்தை வாங்கி அவரிடம் உடனடியாக காரியாலயத்திற்கு வரமுடியுமா எனக் கேட்டபோது அவரும் மறுப்புத் தெரிவிக்காமல் உடனடியாக வருவதாகக் கூறி 15 நிமிடங்களில் வந்து சேர்ந்தார்.

பிள்ளையை சற்று வெளியில் அமரும்படி கூறிவிட்டு இருவரிடமும் விடயங்களை கூறினேன். அவர்களும் பிழையை உணர்ந்துகொண்டார்கள். தனது பிள்ளையின் பிறந்த தின விழாவிலே நடந்த சிறிய குறைபாட்டினால் இருவரும் முரண்பட்டு சுமார் ஆறு மாதங்கள் பேசாமல் இருந்தோம். இது எங்களுடைய பிள்ளையை இந்தளவு பாதிக்கும் என நாங்கள் ஒரு போதும் நினைத்திருக்கவில்லை. இனி எந்தொரு காரணத்திற்காகவும் எங்களது பிள்ளையை பாதிக்கும் விடயங்களை நாங்கள் செய்யமாட்டோம் என்றும் ஓர் உறுதிமொழியை அவ்விருவரும் கூறும்போது குழந்தையையும் உள்ளே அழைத்தோம். மூவரும் கட்டி அணைத்தபடி அழுதார்கள். என்னை அறியாமலேயே எனக்குள்ளும் ஓர் ஆனந்தக் கண்ணீர். அந்தக் குடும்பம் சேர்த்ததில் ஓர் ஆத்மதிருப்தி. சந்தோசமாக பேசிவிட்டு நன்றியுடன் மூவரும் விடைபெற்றனர். நான் இழந்த வாழ்க்கையை மீண்டும் ஒருமுறை நினைவூட்டியது அந்தக் குடும்பம்.

உண்மையிலே பிள்ளையை வளர்க்கின்றபோது நாம் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். அதிலும் ஒரு பிள்ளை மட்டும் உள்ளவர்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். வீட்டிலே கவலைகளை சந்தோசங்களை பகிர்ந்துகொள்ள அவர்களுக்கு உடன்பிறப்புகள் இல்லை. எனவே தமக்குள்ளேயே அதனைப் பூட்டி வைத்தால் அதன் பிரதிபலன் மிகவும் மோசமாகவும் முடியலாம். எம்மிடையே சிறிய விடயங்களால் ஏற்படுகின்ற முரண்பாடு எமது பிள்ளைகளைப் பாதிக்கக் கூடாது. இந்த விடயத்தில் முடியுமான வரை தாய்மார் கவனமாக இருக்கவேண்டும்.

கைவீசம்மா... கைவீசு...



பிரபாகரன் தரண்சிகா,
கிளி / கனகராயன்குளம் மகா வித்தியாலயம்.

# இடம்பெயர்வுகளும் துயரங்களும் தொடர்ந்தபோதிலும் மனம் தளராது சாதனை

வறுமை, கொடுமை, இயலாமை இவை எவ்வளவுதான் தடுத்தாலும் இவற்றோடு போராடி கல்வியில் வென்று சாதிக்கத் துடிக்கும் பெண்களை 'கைவீசம்மா கைவீசு' என்னும் பகுதியினூடாக இணைத்துக்கொள்கின்றாள் 'ஒளி அரசி'

அந்த வகையில் இம்மாத 'ஒளி அரசி'யின் கைவீசம்மா கைவீசு பகுதிக்காக நாம் இணைத்துக் கொள்பவர் கனகராயன்குளம் மகாவித்தியாலய மாணவியான பிரபாகரன் தரண்சிகா. இவர் ஆரம்பக் கல்வியை கோயில் குஞ்சுக்குளம் அ.த.க. பாடசாலையில் கற்றார். அதன் பின்னர் இடப்பெயர்வின்போது வலயம் 4 பாடசாலையில் கற்று வவுனியா நெலுக்குளம் பாடசாலையில் சில மாதங்கள் பயின்று அதன் பின்னரே கனகராயன்குளம் மகாவித்தியாலயத்தில் கற்கத் தொடங்கினார்.

பிரபாகரன் - ஜெயமதி தம்பதிகளின் மகளான இவர், தனது இலட்சியம் ஒரு வைத்தியராகி தனது ஊராகிய கனகராயன் குளத்திலுள்ள மக்களுக்கு வைத்தியசேவை செய்வதுடன் வறுமையினால் கல்வி கற்க முடியாதுள்ள பல மாணவர்களை ஒன்றிணைத்து கல்வி கற்பிக்க வழிவகைகளை ஏற்படுத்தவேண்டும் என்பதுமாகும் என்றார்.

இடப்பெயர்வுகளும், துயரங்களும் தொடர்ந்து வருத்தியபோதும் தளராது கல்வி கற்று சாதாரண தரத்தில் 6ஏ, 2பி, சி என்னும் சிறந்த பெறுபேறு பெற்று சாதனை படைத்துள்ளார்.

போரின் கொடூரம் இவரது தந்தையையும் பழிவாங்கிவிட்டதால் தந்தையாகவும், தாயாகவும் இருந்து தாயாரே தன்னைக் கவனித்துக்கொண்டார் எனக்கூறிய இவர்,

தனது இந்த வெற்றிப்பயணத்தின் பின்னால் சிறுவயது முதல் தனக்கு வழிகாட்டி வளர்த்த அம்மம்மா, அப்பப்பா, கனகராயன் குளம் அதிபர், ஆசிரியர்கள், பாடசாலைச் சமூகம், குறிப்பாக, தமிழ் ஆசிரியரான வசந்தரூபன் ஆகிய அனைவருமே உள்ளனர் எனக் கூறியுள்ளார்.

படிப்பில் மட்டுமன்றி, விளையாட்டிலும் பல சாதனைகளைப் படைத்துள்ளார் பிரபாகரன் தரண்சிகா. இவரது சாதனைப் பட்டியல் தொடரவும் வெற்றிமாலைகள் பல குவியவும் வாழ்த்துகின்றாள் 'ஒளிஅரசி'.

**வாசகர் கருத்து :** எனது வயது 12. நான் ஒளி அரசியை 2014 டிசம்பர் மாதத்திலிருந்து வாசித்து வருகின்றேன். இது எனக்கு பயன் உள்ளதாக இருக்கின்றது. 'ஒளி அரசி'க்கு எனது வாழ்த்துகள்.

செல்வி. சுவேதா ஸ்ரீதரன்,
யாழ்ப்பாணம்.

# "இறைவனை நம்பியோர் கைவிடப்படார்"

— உண்மைச் சம்பவம் —

கடந்த 2013ஆம் ஆண்டு மே மாதம் 22ஆம் திகதி புதன்கிழமை இரவு நான் ஒரு கனவு கண்டேன். அதாவது, ஒரு குகைபோன்ற அமைப்புள்ள இடம். அங்கே பரிசுத்த அன்னை மேரி இளநீல உடையில் சாந்தமே உருவாக நின்று கொண்டிருக்கிறார். பக்கத்தில் விநாயகப் பெருமானின் திருவுருவம் வட்டமான கருமை நிறக்கல்லில் முகப்பகுதி மாத்திரம் தெரிந்தது. (இதுபோன்ற ஒரு முழு உருவச்சிலை எம் வீட்டில் இருக்கின்றது) கீழ்ப்பகுதியில் ஓர் அழகான சோலை மிகவும் பிரகாசமாக இருக்கின்றது. இங்கே முருகப்பெருமான் பால முருகனாக கையில் வேலுடன் சிரித்தபடி இங்கும் அங்கும் குதித்து விளையாடுகிறார். அவரைப் பார்த்து 'முருகா! என்னைக் கூட்டிப் போ' எனக் கூறுகிறேன். அந்த அழகான பால முருகனோ, சிரித்தபடி என்னைக் கூப்பிடுவது போல் கையசைத்து விட்டு மறைந்து போகிறார். திடுக்கிட்டுக் கண்விழித்தபோது என் உடம்பெல்லாம் வியர்த்துப் போயிருந்தது. எனக்கு ஏதோவொரு அசம்பாவிதம் நடக்கப்போகிறதோ என்ற ஓர் எண்ணம் தோன்றியது. உடனே எழுந்து சென்று மணியைப் பார்த்தேன் இரவு 1.30. அந்த சமயமே கொழும்பிலிருக்கும் எமது மகளை தொலைபேசியில் உடனேயே காலையில் புறப்பட்டு வந்து என்னைக் கொழும்புக்குக் கூட்டிப்போகும்படி சொன்னேன். கணவர் விழித்துக்கொண்டு இந்த நேரத்தில் யாருக்கு? ஏன் போன் செய்கிறீர்கள்? எல்லோரும் தூங்கியிருப்பார்கள் என்றார்.

நான் இந்தக் கனவு காண்பதற்கும் ஏழெட்டு நாட்களுக்கு முன்பிருந்தே காய்ச்சலால் பீடிக்கப்பட்டு மருந்து குடித்துக்கொண்டிருக்கின்றேன். பூரண குணம் இல்லையென்றாலும்கூட வெறும் காய்ச்சல்தானே என்று எனது பிள்ளைகளிடமும் சொல்லவில்லை. எமக்கு ஆணொன்றும் பெண்ணொன்றுமாக இரு பிள்ளைகளும் திருமணமாகி கொழும்பில் இருந்தார்கள். நானும் கணவரும் பண்டாரவளையிலிருந்தோம். கேட்டுக்கொண்டபடி மறுநாளே வந்து என்னைக் கொழும்பிற்குக் கூட்டிவந்து 24ஆம் திகதி காலை வைத்திய சாலைக்கு கூட்டிப் போகும் வழியிலேயே நினைவிழந்து விட்டிருக்கிறேன்.

மூன்று நாட்களின் பின் நான் கண் விழித்துப் பார்த்தபோதுதான் தெரியும் நான் வைத்தியசாலையிலிருப்பது. இந்த இடைப்பட்ட நாட்களில் எனது சிறுநீரகம் செயற்படவில்லை. சீனியின் அளவு 600ஐ எட்டிவிட்டது. இதயத்துடிப்பு, நாடித்துடிப்பு குறைந்துவிட்டது. காப்பற்றக்கூடிய வாய்ப்பு 10 வீதமே உள்ளது. ஆனாலும் உயிர்பிழைப்பது கடினம். அப்படியே உயிர்த்தாலும் திடீரென 'ஹார்ட் அடக்' வரக்கூடும் அல்லது செயலிழந்து போகும் என்றெல்லாம் டாக்டர்கள் கூறிவிட்டார்களாம். இந்நிலையில் எனது ஈமக்கிரிகைகளை எங்கே எப்படி நடத்துவது என்ற முடிவைக் கூட எனது உறவினர்கள் பேசியிருக்கிறார்கள்.

ஆனால், இன்று எவ்விதக் குறைபாடுமில்லாத முழு மனிசியாக எழுந்து நடமாடி தற்சமயம் எனது அபிமான சஞ்சிகையான 'ஒளி அரசி'க்காக ஆக்கங்களை அனுப்பிக்கொண்டிருக்கின்றேன் என்றால் இதன் முழுப் பொறுப்பும் மகிமையும் அந்த வேல் முருகனையே சாரும். அன்று நான் இந்தக் கனவு காணாமலிருந்தால் வீட்டிலிருந்தபடியே என் ஆவி பிரிந்திருக்கும். இதை நினைத்துப் பார்க்கும் போது எனது உடலெங்கும் புல்லரிக்கிறது. எனக்கு ஏற்பட்ட இவ் அற்புதமான நிகழ்வை என் உள்ளம் நிறைந்த 'ஒளி அரசி' மூலமாக வெளிப்படுத்த வேண்டுமென்பதே என் பேராவல். இதேசமயம் மனித வடிவில் டாக்டர்களாக வந்து என்னுயிர் காத்த எஸ்.எவ். ஜயமான மற்றும் பரனீஸ்வரன் ஆகியோருக்கும் ஹேமாஸ் வைத்தியசாலையின் தாதியர் மற்றும் கருணையுள்ளம் கொண்ட ஊழியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியையும், பேரன்பையும் என் 'ஒளி அரசி' மூலமாகத் தெரிவித்துக் கொள்வதில் பெருமையடைகின்றேன். தெய்வங்கள்தான் இவர்கள் உருவில் வந்து என்னுயிர் காத்திருக்கின்றது என்பது எனது ஆணித்தரமான நம்பிக்கை. எனவே, இந்தக் கட்டுரை அந்த அற்புதமான தெய்வ சக்திகளுக்கு நான் சமர்ப்பிக்கும் காணிக்கை என சொல்லிக்கொண்டு விடைபெறுகின்றேன்.

தெய்வம் எனும் சக்தி இல்லையெனில் இவ்வுலகில் எந்த அசைவுமில்லை என்பதைப் புரிய வைக்கவே இந்தச் சம்பவத்தை எழுதினேன். ▲

# அழகாகத் தோற்றமளிக்க வேண்டுமா?



அழகாகத் தோற்றமளிக்க வேண்டுமென்றால் சருமத்தின் அழகைப் பேண முன்வர வேண்டும். சருமத்தின் தன்மை எத்தகையதென புரிந்து கொள்ளவேண்டும். எண்ணெய்த் தன்மை வாய்ந்த சருமம், நீர்த்தன்மை, உலர்ந்த தன்மை, இளமைப்பருவம், முதுமைப்பருவம், இருபதுகள், முப்பதுகள், நாற்பதுகள் என வயதுக்கேற்ப மாற்றமடையும் சருமம், பருவகால மாற்றங்கள், அதிகமான உஷ்ணம், உணவுப்பழக்கவழக்கம் என்பன சருமத்தின் தன்மையை மாற்றக்கூடியதாகவுள்ளது.

சருமம் மாற்றமடையும் காரணத்தைக் கண்டறிந்து அதற்கேற்ப சிகிச்சையும், பயிற்சியும் வழங்கவேண்டும்.

முதல் காலைப்பொழுதில் எழுந்ததும் முகத்தை அவதானித்தால் கரும் புள்ளிகள் மெல்லிய உவர் தன்மை, நிறம் என்பவற்றில் மாறுபாடுகள் காணப்படும். சாதாரண கிளசரின் கலந்த சோப்பை பயன்படுத்தி முகத்தை கழுவிக்கொண்டால் மூக்கு, நெற்றி, தாடை என்பனவற்றிலிருந்து தூசி அகன்று புதுப்பொலிவு பெறும்.

மேலும் முகப்பொலிவுக்கு கிசிச்சையளிக்கும் முன்பு வெந்நீரில் ஆவி பிடித்து முகத்தை நன்றாக துடைத்த பின்னர் இத்தகைய சிகிச்சைகளை சருமத்தின் தன்மைக்கேற்ப பூசிக் கொள்ளலாம். மேலும் ஆவி பிடிக்கும் போது நீரில் தேயிலை பக்கட் அல்லது எலுமிச்சை இலைகள், ரோஸ்வாட்டர்என்பனவற்றில் ஒன்றையும் போட்டுக்கொள்ளவும்.

எண்ணெய்த் தன்மைவாய்ந்த சருமத்தை பாதுகாக்க முட்டையின் வெண்கரு ஒரு தேக்கரண்டி, தேன் 1/2 தேக்கரண்டி, எலுமிச்சம் பழச்சாறு கலந்து நன்றாக அடித்துக்கொண்டு பரவலாக முகத்தில் பூசி 10 நிமிடங்கள் கழித்து மெல்லிய வெதுவெதுப்பான நீரில்கழுவிக்கொண்டால்எண்ணெய்த்தன்மை அகன்றுவிடும்.

உலர்ந்த சர்மத்துக்கு அரைவாசி பட்டர் புறூட், 1 தேக்கரண்டி தேன் சேர்த்து முகப்பூச்சுக்கலவை தயாரித்துக்கொள்ள வேண்டும். முகத்தில் பூசி 5 நிமிடங்கள் கழித்து கழுவிக் கொண்டால் உலர் தன்மை அகன்றுவிடும். உலரும் தன்மையும், எண்ணெய்த்தன்மையும் கலந்து சருமத்துக்கு ஒரு ரோஜா மலரின் இதழ்கள், 1 தேக்கரண்டி ரோஸ் வாட்டர், 1 தேக்கரண்டி இயற்கையான தயிர், 1 தேக்கரண்டி தேன் சேர்த்து முகத்தில் பூசி சில நிமிடங்களின் பின்னர் கழுவிக் கொண்டால் சருமம் மெருகூட்டப்படும்.

மேலும் மென்மையரன சருமத்துக்கு ஒரு கோப்பை இயற்கையான தயிருடன் 1/2 கோப்பை ஓட்ஸ் சேர்த்து முகத்தில் பூசி 10 நிமிடங்கள் கழித்து வெதுவெதுப்பான நீரில் கழுவிக்கொள்ளவேண்டும். பூச்சுகளைப் பூசும் போது வெள்ளரிக்காய்த் துண்டுகளை கண்களில் வைத்து சிறிதுநேரம் இளைப்பாறுதலும் நன்மை பயக்கும்.




பிரபல சட்டத்தரணி திருவாளர் கங்காதரன் மற்றும் சட்டத்தரணி திருமதி சிவராணி கங்காதரன் தம்பதியினரின் புதல்வன் ரமேஷ் கங்காதரன் ஆஸ்திரேலியா, சிட்னி சர்வகலா சாலையில் பொறியியல்துறையில் (CIVIL ENGINEERING) முதல் வகுப்புத் (1st Class) தேர்ச்சியடைந்து பட்டம் சூட்டப்பட்டார். அவர், ஆரம்பக் கல்வியை கொழும்பு புனித ஜோசப் கல்லூரியிலும், உயர் தரக் கல்வியை கொழும்பு றோயல் கல்லூரியிலும் படித்தார். மேலும், ரமேஷ் கங்காதரன் ஆசியக்கண்டத்தில் சிறப்புத் தேர்ச்சிபெற்ற முதல் மாணவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அதையிட்டு வடகொழும்பு தமிழ் மக்களாகிய நாங்கள் திரு. ரமேஷை மனமார பாராட்டி வாழ்த்துகிறோம்.

ஊர் முழுக்க நல்ல பெயர் ராஜேஷுக்கு. ‘ஆளு ரொம்ப ஸாஃப்ட்; அதிர்ந்துகூடப் பேசத் தெரியாது. வசந்தி ரொம்பவும் கொடுத்துவெச்சவ’ என்று ஆளாளுக்கு சர்டிஃபிகேட் கொடுப்பார்கள். ஆனால், வீட்டுக்குள் அவன் எப்படி என்பது வசந்திக்கு மட்டுமே தெரிந்த ரகசியம்.

கல்யாணம் ஆன முதல்நாள் ராஜேஷ் அவளிடம் பேசிய முதல் டயலாக் இது, ‘மேடையில எல்லாம் பேசுவியாமே....? எனக்கு ரொம்பப் பேசினா பிடிக்காது! வெளி உலகம் சொல்வது போலவே அவன் வார்த்தைகளில் ஆத்திரம் - அவசரம் என்று எதுவும் இருக்காது. மென்மையாகவும், பக்குவமாகவும், நேர்த்தியாகவும் அடுத்தவர் மனதைக் காயப் படுத்திவிடும் சூட்சுமம் அவனுக்குத் தெரியும்.

‘‘அம்மா வீடு இங்க இருந்து நாலு கிலோ மீட்டர்லதானே இருக்கு. நான் அடிக்கடி போய்ட்டு வரலாம்தானே?’’

‘‘போலாம். ஆனா, வரக்கூடாது’’

- இப்படி சுருக்கமாகவும் சுருக்கென்று தைக்கும் படியும்தான் இருக்கும் ராஜேஷின் பதில்கள். இதற்குப் பயந்தே அவனிடம் கேள்வி கேட்பதை அடியோடு நிறுத்திவிட்டாள் வசந்தி. அதனால்தான் அந்த வீட்டில் சண்டையில்லை. சச்சரவில்லை. சந்தோஷமும் இல்லை.

மனைவி, தன் வாய்க்குப் பூட்டுப்போட்டுக் கொண்டது ராஜேஷுக்கு வசதியாகப் போனது. சொல்லப்போனால் அவன் எதிர்பார்த்ததும் அதைத்தான். சமைப்பது, பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்புவது, தன்னை அலுவலகத்துக்கு அனுப்புவது, தானும் வேலைக்குப் போவது இவற்றுக்காகவே பிறவி எடுத்து வந்தவள் அவள் என்றொரு நினைப்பை உள்ளுக்குள் வளர்த்துக்கொண்டான் அவன். அவளுக்கென்று ஒரு மனம் உண்டு. அதில் விருப்பு வெறுப்புகள் உள்ளன என்பதைப் பற்றியெல்லாம் அவன் சிந்திக்கவே தயாராக இல்லை.

‘எந்தக் கடையில் மளிகைப் பொருட்கள் வாங்கவேண்டும்’ என்பதில் தொடங்கி, ‘பிள்ளைகளை எந்தப் பள்ளியில் சேர்ப்பது?’ என்பது வரை எல்லாமே ராஜேஷின் முடிவு தான். வசந்திக்காக எடுக்கப்படும் தீபாவளிப் புடவையின் கலருக்காகக்கூட அவளிடம் கருத்துக் கேட்டதில்லை அவன்.

**(இல்லறவாழ்வின் சந்தோசமான தருணங்களைத் தாங்கிவரும் ரொமான்ஸ்)**



இதற்கெல்லாம் அதிகபட்சமாக ஒரு மனைவி என்ன செய்யமுடியும்? சாப்பிடாமல் உண்ணாவிரதம் இருக்கலாம். ராஜேஷ் அதைப்பற்றி விசாரிக்கக்கூட மாட்டான். சமைக்காமல் இருக்கலாம்... ராஜேஷ் வெளியில் சாப்பிட்டுக்கொள்வான். பேசமாட்டேன் என்று கோபிக்கலாம்... ராஜேஷுக்கு அது சந்தோஷம்தான்.

இப்படிப்பட்ட பிரமாஸ்திரங்கள் அனைத்தையும் பயன்படுத்தி பார்த்துவிட்டுத்தான் பணிந்துபோகத் தொடங்கினாள் வசந்தி. வேறு என்ன செய்யமுடியும்..? கண்ணைக் கசக்கிக்கொண்டு பிறந்த வீட்டுக்குப் போகும் அளவுக்கு இது பெரிய பிரச்சினையில்லை. ''உன் புருஷன் என்ன குடுச்சிட்டு வந்து உன்னை அடிக்கவா செய்யிறார்...?'' என்று எவரேனும் கேட்டால், இவளிடம் பதிலில்லை!

'மருந்துக்குக்கூட மனைவியை மதிக்காமல் ஒரு மனிதன் இருப்பானா? இரத்தமும் சதையுமாக ஒரு மனிஷி இருக்கிறாள் என்கிற உணர்வே இவருக்கு இருக்காதோ' என்றெல்லாம் நினைத்து நினைத்து நொந்து போயிருக்கிறாள் வசந்தி.

வசந்தியோடு ராஜேஷுக்கு விரோதமில்லை. 'வேலைக்குச் சென்று சம்பாதிக்கிறவள்.. எங்கே கொஞ்சம் இடம் கொடுத்தாலும் தன்னை டாமினேட் செய்துவிடுவாளோ' என்கிற பயம்! 'ஆரம்பத்திலேயே இறுக்கிப் பிடிச்சிடு... தும்பை விட்டுட்டு வாலைப் பிடிக்க நினைக்காதே...' என்கிற உபதேசங்கள்... எல்லாம் சேர்ந்துகொண்டு ஆட்டிப் படைக்கின்றன அவனை!

ஒருவருக்கொருவர் பகிர்ந்து, எல்லாவற்றிலும் விட்டுக்கொடுத்து, நேசிப்பதில் கடன்காரர்களாகி... ஒரு நேரம் அதிகாரம் செலுத்தி, மறு நேரம் அடங்கிப் போய்... கோபித்து, கோபிக்க அனுமதித்து... நானாகவும் நீயாகவும் இல்லாமல் நாமாக வாழ்கிற பேரின்பத்தின் ருசி அறியாதவர்கள் ராஜேஷ் தந்தையர்கள்.

இதோ ஜீவாவிடம் கேளுங்கள். அந்த சுவை பற்றி.

''கத்தரிக்கா எனக்குப் பிடிக்காதுனு தெரியும்ல. ஏன் செய்ற?'' அலுவலகத்திலிருந்து வந்ததும் வராததுமாகக் கத்துவான் ஜீவா.

''அப்புறம் எந்தக் காயைத்தான் சமைக்க? கேரட் இனிக்குது. பாவக்கா கசக்குது. கோவக்காய்லாம் ஒரு காயா?'னு' எல்லாத்துக்கும் நொட்டை சொல்றீங்க. அதான் எனக்குப் பிடிச்சதா சமைச்சுட்டேன். ஏன் இந்த வீட்டுல எல்லாம் உங்க இஷ்டப்படிதான் நடக்கணுமா? ஒரு காய்கூட எனக்குப் பிடிச்ச மாதிரி சமைச்சுக்கக் கூடாதா?'' நொடிப்பாள் அக்ஷயா.

'ஐயையோ. இது? மத்தியானம் சாப்பிடவே இல்லையா' என்கிற ஆத்திரமும் அக்கறையும் அடுத்தடுத்து அவளுடைய எல்லாச் செயல்களிலும் வெளிப்படும்.

அவனுக்கு ரொம்பவும் பிடித்தமான உருளைக் கிழங்கு சிப்ஸும் ஏலக்கய் டீயும் ஒருபக்கம் தயாராக சட்டென்று முகம் கழுவி, தலை வாரி, மறுநாள் காலைக்காக வைத்திருந்த பூவைச் சூடி, முன் அறையில் உட்கார்ந்து சேனல் மாற்றிக்கொண்டிருக்கும் கணவன் கையில் டிபனைக்கொண்டு போய்க்கொடுப்பாள்.

அந்த பளிச் அலங்காரத்தையெல்லாம் தாண்டி, அவள் கட்டை விரலில் இரத்தம் எட்டிப்பார்க்கும் சிராய்ப்புதான் தெரியும் அவனுக்கு.


அதுவா? சிப்ஸுக்கு சீவும்போது பட்டுடுச்சு அந்த விரலைப் பின்னால் மறைப்பாள் அக்ஷயா.

சிப்ஸ் செஞ்சாலே இப்படித்தானே ஆகுது? அப்புறம் எதுக்கு செய்யணும்..? இனிமேல் நான் சிப்ஸே போடுறதில்லை. நாளைக்கும் கத்திரிக்கா வை. சாப்பிட்டுப் பழகிக்கிறேன். இறுக்கமாகச் சொல்லிவிட்டு மெதுவாக சிரிக்கத் தொடங்குவான் ஜீவா. சிரிப்பின் முடிவில் சிப்ஸ் தட்டு தூரத்தில் இருக்கும். அக்ஷயா அவன் கைகளில் இருப்பாள். அது இன்னமும் மாலை நேரம்தான் என்பதும்கூட மறந்துபோகும் அவர்களுக்கு.

(தொடரும்...)

இன்றைய இயந்திரமயமான வாழ்க்கை முறையும் சுழற்றியடிக்கும் வேலைப் பளுவும் சேர்ந்துகொண்டு தம்பதிகளுக்குள் இருக்கும் நெருக்கத்தை சுருக்குகின்றனதான். பாலைவனத்திலேயே ஒரு சோலை இருக்கும்போது நாம் வாழும் வாழ்க்கைக்குள் பசுமையை இன்னும் கொஞ்சம் கூட்டிக்கொள்ள முடியுமே! அதற்கு வழிகாட்டத்தான் இந்தப் பகுதி!

திகில் மன்னன் **ராஜேஷ்குமார்** எழுதிய



# இருட்டில் வைத்த குறி 10

''உங்கள் தந்தை எப்போது இறந்தார்?''

''ஓர் அரைமணி நேரத்துக்கு முன்னால்...''

''இயற்கையான மரணம்தானா?''

''ஆமாம். மாரடைப்பு...''

'' மாரடைப்பு என்று நீங்கள் சொல்கிறீர்கள். உடம்பை போஸ்மார்ட்டத்துக்கு உட்படுத்திதான் ஃப்ளைட்டுக்கு கொண்டுவர முடியும்.

யோகேஸ் திடுக்கிட்டான்.

''இயற்கையான மரணம்தான் என்று டாக்டரிடம் ரிப்போர்ட் வாங்கித்தருகிறோம். அவர் ஒரு இருதய நோயாளி.''

''இருக்கட்டும் மரணம் இயற்கையானது தான் என்பதை போஸ்மார்ட்டம் மூலம் உறுதிப்படுத்திய பின்பே... பாடியை ஃபிளைட்டில் ஏற்றப்படுகின்றன''

யோகேஸ் வியத்தான்.

யோகேஸ் கௌன்ட்டர் ஆசாமியிடம் கேட்டான். ''நான் டெலிபோன் செய்து கொள்ளலாமா?''

கௌன்டர் ஆசாமி புன்னைகைத்தான். சம்மதம் என்று அர்த்தம்.

நம்பர்களை சுழற்றினான். சுழற்றி முடிந்ததுமே -

பளிச்சென்று இணைப்புக் கிடைத்தது. முதல் ரிங்கிலையே ரிசப்ஷனிஸட் பெண் ரஸீவரை எடுத்து ''ஒபராய்... இப்பீரியல் ...'' என்றாள்.

'' நான் யோகேஸ் ஃப்ரம் இண்டியா... பேசுகிறேன் அறை எண் 1401. என் சகோதரன் இருப்பான் தயவுசெய்து அவனை என்னோடு பேசச் சொல்கிறீர்களா?''

''ஒரு நிமிசம்!''

ரிஸிவரை காதோடு பொருத்தியபடி - காத்திருந்தான் யோகேஷ். சாங்கி ஏர்போர்ட்டின் கண்ணாடிச் சுவருக்கு அப்பால் ரன்வே தெரிய - நான்கைந்து விமானங்கள் ஒரே நேரத்தில் - இடுப்பிலும் வால் பகுதியிலும் - ஈஸ்ட்மென் நிற வெளிச்சங்களோடு- வானத்தில் எம்பிக்கொண்டிருந்தன. காதுகளை உறுத்தாத - ஆங்கில அறிவிப்புக்கள், கண்ணுக்குப் புலப்படாத ஸ்பீக்கர்களினின்று கசிந்து கொண்டிருந்தன.

சரியாய் நிமிஷ நேரத்துக்குப் பிறகு

புவனேஷின் குரல் ரிஸீவரில் கேட்டது. ''என்ன யோகேஷ்?''

''அப்பாவோட பாடியை ஃபிளைட்டுக்குக் கொண்டு போறதில் ஒரு சிக்கல்.''

''சிக்கல்- என்ன சிக்கல்.?''

''பாடியை போஸ்ட்மார்ட்டம் பண்ணணுமாம்.''

''அப்பாவோட டெத் நேச்சுரல் டெத் தானே? போஸ்ட்மார்ட்டம் எதுக்கு? அப்பா ஹார்ட் அட்டாக்தான் செத்தார்ன்னு சொன்னியா?''

''ம். சொன்னேன் ஃபிளைட்டுக்குள்ளே எந்த டெட்பாடி வந்தாலும் அது போஸ்ட் மார்ட்டத்துக்கு உட்பட்டிருக்கணும்ங்கிறது ஒரு விதியாம்...''

''சரி... இப்போ என்ன பண்ணலாம்?''

''எனக்கு ஒண்ணும் புரியலை.''

''சரி... நீ ஓட்டலுக்கு வந்துடு. யோசிப் போம். விடியறதுக்குள்ளே நாம் ஏதாவது ஒரு முடிவுக்கு வந்தாகணும்.''

யோகேஷ் ரிஸிவரை மாட்டிவிட்டு ஏர் போர்ட்டை விட்டு வெளியே வந்தான். அப்பா இறந்து போன துக்கத்தைக் காட்டிலும்- வைரங்களை எப்படி - இந்தியாவுக்குக் கொண்டுபோகப்போகிறோம் என்பதில் - மனம் கவலையோடு கனத்தது.

பஸ்ஸரின் சத்தம் கேட்டு எழுந்து போய்க் கதவைத் திறந்தான் புவனேஷ். வெளியே யோகேஷ் சோர்வாய்த் தெரிந்தான். தலை முடியை இரண்டு கைகளாலும் கோதிக் கொண்டே உள்ளே வந்தான். புவனேஷ் கதவைச் சாத்தித் தாழிட்டான்.

''போஸ்ட்மார்ட்டம் பண்ணாமே அப் பாவை ஃபிளைட்டுக்குக் கொண்டுபோக முடியாது புவனேஷ்! பேசாம வைரங்களை வெளியே எடுத்துடறது நல்லது.''

''வைரங்களை வெளியே எடுத்துட்டா... போஸ்ட்மார்ட்டம் முடிஞ்சபின்னாடி திரும்ப வும்- அதை அப்பா உடம்புல மறைச்சு வைக்க முடியாதே?''

''அப்படீன்னா வைரங்களைக் கொண்டே போறதுக்கு வேற ஏற்பாடுதான் பண்ணணும்?''

''நாம கொண்டுபோற திங்க்ஸ்ஸ மறைச்சு வெச்சு.''

''முட்டாள்தனமா உளறாதே... யோகேஷ். சிங்கப்பூர் கஸ்டம்ஸ் ரொம்பவும் கெடுபிடி. கண்ணையே ஸ்கேனராக்கிப் பார்ப்பாங்க.''

இருவரும் - பேசிக்கொண்டிருக்கும் போதே - அறை வாசலில் இருந்து பஸ்ஸர் சத்தம் எழுந்தது.

கொஞ்சம் பயமாய் - யோகேஷும் புவனே ஷும் ஒருத்தரையொருத்தர் பார்த்துக்கொண் டார்கள்.

''மறுபடியும் போலீஸா...?''- யோகேஷ் கேட்டான்.

''இருக்காது. அவங்க அப்பவே போயிட் டாங்களே...''

''போய்க் கதவைத் திறந்து பாரு.''

புவனேஷ் போய்க் கதவைத் திறந்தான்.

வெளியே பிரணவ் தலாலோ நின்றிருந்தார். நீளமாய் நைட் கவுன் மாதிரி ஒரு ட்ரெஸ்ஸை மாட்டியிருந்தார். கண்களில் சின்னதாய் ஒரு கலக்கம்.

''வாங்க ஸார்...'' யோகேஷ் தலையசைக்க

பிரணவ் உள்ளே வந்தார். கட்டிலில் மல் லாந்திருந்த மார்த்தாண்டத்தை நோக்கிப் போனார். அருகே போய் நின்று சில விநாடி கள் அவரையே உற்றுப் பார்த்துக்கொண்டி ருந்து விட்டு - யோகேஷின் பக்கமாய் திரும்பினார்.

''அப்பா... எத்தனை மணிக்குக் காலமா னார்...?''

நேரத்தை சொன்னான் யோகேஷ்.

''ஹார்ட் அட்டாக்...?''

''ஆமாம்.''

புவனேஷ் குறுக்கிட்டான்... ஆச்சரியக் குரலில்.

''அப்பா இறந்த செய்தியை உங்களுக்கு யார் ஸார் சொன்னார்கள்?''

''எனக்கு யாரும் சொல்லவில்லை. வீட்டி லிருந்து உங்களைப் பார்த்துப் பேசுவதற்காக... காரில் புறப்பட்டு ஹோட்டாலுக்கு வந்தேன். இங்கு வந்த பின்னால் தான் எனக்கு விஷயம் தெரியும்! அதுவும் ரிசப்ஷனிஸ்ட் சொல்லி.''

யோகேஷும் புவனேஷும் தங்கள் நெற்றி களைச் சுருக்கினார்கள். ''எங்களைப் பார்ப்ப தற்கு இந்த ராத்திரி நேரத்தில் எதற்காக வந்தீர் கள் ஸார்?''

''அப்படி உட்கார்ந்து பேசலாம்?''

''வாங்க ஸார்.''

குழப்ப முகங்களோடு- நாற்காலிக்கு உடம்பைக் கொடுக்க- அவர்கள் எதிரில் உட் காந்தார்கள்.

''என்ன விஷயம் ஸார்?''

யோகேஷ் மறுபடியும் கேட்க - பிரணவ் புன்னகைத்தார்.

''நீங்கள் காலையில் செண்டோஸா ஏன் போகவில்லை...?''

''அப்பாவுக்கு உடம்பு சரியில்லை. எனவே, திரும்பி விட்டோம்...''

**(தொடரும்...)**

# உருளைக்கிழங்கு கப் பேஸ்ரீ






**நிரப்ப வேண்டிய கலவை :**
150 கிராம் அவித்து மசித்த உருளைக்கிழங்கு
100 கிராம் வெங்காயத்தாள்
சிறிதளவு மிளகுதூள் உப்பு
பச்சை மிளகாய், பச்சை பட்டாணி

முதலில் கோதுமை மா, மாஜரின், சீஸ்தூள், உப்பு கலந்து குழைத்துக்கொள்ளவேண்டும். சிறிதளவு நீர் விட்டு மாவை நன்றாகப் பிசைந்து பதமாக வைத்துக்கொள்ளவேண்டும்.


நறுக்கிய பச்சை மிளகாய் வெங்காயத்தாளை வதக்கி உப்பு, மிளகுதூள் சேர்த்து உருளைக்கிழங்கையும் சேர்த்துக் கறிக்கலவையைத் தயாரித்துக்கொள்ளவேண்டும். விரும்பினால் காரத்திற்கு மிளகாய்த்தூளும் சேர்த்துக்கொள்ளலாம்.

இறுதியாக மாக்கலவையை பலகையில் வைத்து உருட்டி வட்ட வடிவங்களாக வெட்டிக்கொள்ளவேண்டும். கப் கேக் பேங்கிங் தட்டில் வெட்டிய வட்டங்களைப் போட்டு கறிக்கலவையை நிரப்பி மேற்பரப்பில் வட்ட வடிவத்தையும் போட்டு முட்டையின் மஞ்சட் கருவினைப் பூசி பேக் செய்துகொள்ளவேண்டும். (சீஸ்துருவல் இல்லாமலும் செய்யலாம்)

**தேவையான பொருட்கள் :**
150 கிராம் கோதுமை மா
25 கிராம் மாஜரீன்
25 கிராம் சீஸ் துருவல்
1 தேக்கரண்டி உப்பு
1/2 கோப்பை தண்ணீர்







# பேஸ்ரீ கிறிசென்ட்


**தேவையான பொருட்கள் :**
150 கிராம் கோதுமை மா
30 கிராம் மாஜரீன்
1 தேக்கரண்டி பேக்கிங் பவுடர்
உப்பு
1/2 கோப்பை தண்ணீர்


**நிரப்பும் கலவை :**
சிறிய டின் மீன்
உப்பு மிளகுதூள்
ஒரு வெங்காயம்
பச்சை மிளகாய்
எலுமிச்சம் பழச்சாறு




கோதுமை மா, மாஜரீன் உப்பு, பேக்கிங் பவுடர் சேர்த்து கொஞ்சம் கொஞ்சமாக தண்ணீர் சேர்த்து மாவை பதமாக குழைத்துக்கொள்ள வேண்டும்.

படத்தில் காட்டிய படி வட்ட வடிவமாக உருட்டி கூம்பு வடிவங்களாக வெட்டிக்கொள்ள வேண்டும்.







பேஸ்ரீயில் பரவலாக கறியைத் தடவி, உருட்டி பேக் செய்துகொள்ள வேண்டும். விரும்பினால் முட்டையின் மஞ்சட் கருவையும் மேற்பரப்பில் பூசி பேக் செய்துகொள்ள வேண்டும்.

# கொழும்பு வலய ஆசிரிய ஆலோசகரின் மொழிபெயர்ப்பு வினாத்தாள்

## தரம் 5 மாணவர்களை புலமைப் பரிசில் பரிட்சைக்குத் தயார்படுத்தும் வினாத்தாள்

வினாத்தாள் II **2015** நேரம் : 45 நிமிடங்கள்

**அடுத்து வரவேண்டியவற்றைக் கீறுக.**

1. ○ △ ○ △ ○ △ ○ △ ○ .................., .................., ..................

2. 4 3 2 4 3 2 4 3 2 .................., .................., ..................

3. (→) (↓) (←) (↑) (→) (↓) (←) (↑) (→) .................., .................., ..................

4.  .................., .................., ..................

**எண்கோலத்தை பூர்த்தி செய்க.**

5. 1, 3, 5, 7, .................... .................... ....................
6. 3, 6, 10, 15, .................... .................... ....................
7. 30, 29, 27, 24, .................... .................... ....................
8. 3, 1, 3, 2, 3, .................... .................... ....................

(8, 2, 1, 4, 0)

9. அடைப்பில் உள்ள இலக்கங்களைப் பயன்படுத்தி ஆக்கக்கூடிய பெறுமதி கூடிய எண்ணை எழுதுக.
...............................................
10. அடைப்பில் உள்ள இலக்கங்களைப் பயன்படுத்தி ஆக்கக்கூடிய பெறுமதி குறைந்த எண்ணை எழுதுக.
...............................................

**ஐந்து சொற்களில் ஒன்று தொடர்பற்றது. அதன்கீழ்க் கீறிடுக.**

11. வாய், கண், மூளை, காது, மூக்கு.
12. கணிதம், தமிழ், ஆங்கிலம், புத்தகம், விஞ்ஞானம்.
13. மரம், விறகு, சீமெந்து, கல், மண்.
14. கறுப்பு, நிறம், சிவப்பு, பச்சை, வெள்ளை.

**கீழுள்ள வாக்கியங்களை இரு வாக்கியங்களாகப் பிரித்து எழுதுக.**

15. கமலன் கடைக்குச் சென்று சீனி வாங்கினான்.
    1. ...............................................................................................
    2 ...............................................................................................
16. கோயில் மணியொலி கேட்டு மக்கள் கூடினார்கள்.
    1. ...............................................................................................
    2. ...............................................................................................
17. விமலா வைத்தியசாலைக்கு போய் வைத்தியரைச் சந்திப்பாள்.
    1. ...............................................................................................
    2. ...............................................................................................

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| லை, | சி, | டு, | ச, | ழ, | ம் , | ல |
| ள, | ழி, | ட், | ற், | னி, | ட , | ன் |

**அடைப்பில் உள்ள எழுத்துக்களில் சொற்களின் வெற்றிடத்துக்குத் தேவையானதை எழுதுக.**

18. சி........ந்தி வ......... பி.........னியது
19. கா........றினால் பட்........ம் கி........ந்து வி........டது.
20. இ........மையாகப் பே........ப் ப........குங்கள்.

**சில குறியீடுகளும் அவற்றின் கருத்துக்களும்.**

| | | | |
|---|---|---|---|
| ⦸ | தீவு | △ | கடலால் |
| ⊘ | வடிவமானது | ✳ | அழகான |
| ⊗ | இலங்கை | ⍋ | மாங்காய் |
| □ | சூழப்பட்டது | | |


**குறியீடுகள் குறிக்கும் வாக்கியங்களை எழுதுக.**

21. ⊗ ✳ ⦸ ........................................................................

22. △ □ ⦸ ........................................................................


23. ⊗ ⍋ ⊘ ........................................................................

24. ⊗ ⦸ △ □ ........................................................................

25. 



**மேலுள்ள கோட்டுப்படத்தில் இறுதியில் வரவேண்டியதைத் தெரிவு செய்க.**




26.  ?


? க்கும் பொருத்தமானதைத் தெரிவு செய்க.

1  2  3 

27. 


**மேலுள்ள வரைபடம் பாடக்கூடியோர், ஆடக்கூடியோர், பாடிக்கொண்டே ஆடக்கூடியோர்களுக்கிடையிலான தொடர்பினைக் காட்டுகின்றன. இவற்றுள் பாடிக்கொண்டே ஆடக்கூடியோரைக் குறிக்கும் எழுத்து யாது?**

| | | |
|---|---|---|
| A | B | C |
| 1. | 2. | 3. |

28. 


**மேலுள்ள வரைபடம் உயிருள்ளது, உயிரற்றது, கதிரை, குதிரை என்பவற்றுக்கிடையிலான தொடர்பினைக் காட்டுகின்றன. இவற்றுள் கதிரை, குதிரையைக் குறிக்கும் எழுத்துக்கள் எவை?**

1. AC 2. AD 3. BD

**பிழையான கருத்துக்கள் இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.**

29. 1. பாலன் இரவு வரை தொலைக்காட்சி பார்த்தான்.
2. விமலன் இரவு முழுவதும் வானில் பறந்து கொண்டிருந்தான்.
3. அமலன் இரவு முழுவதும் பரீட்சைக்குத் தயாராகிக் கொண்டிருந்தான்.

30. 1. பல்லி எதிரி வாலைப் பிடித்தால் வாலை அறுத்துவிட்டுத் தப்பிச்செல்லும்.
2. ஆமை எதிரி அருகில் வந்தால் தலை, கால்களை ஓட்டுக்குள் இழுத்து தப்பிக்கொள்ளும்.
3. பூனை எதிரியைக் கண்டால் மண்ணிற்குள் புதைந்து ஒளித்துவிடும்.

**பின்வரும் அடுக்குத் தொடர்ச்சொற்களை கீறிட்ட இடத்தில் இட்டு நிரப்புக.**

| |
|---|
| மெல்ல மெல்ல. கூட்டங்கூட்டமாக, வர வர, உயர உயரப், கட்டுக்கட்டாக, பார்த்து பார்த்து, சீப்புச்சீப்பாக, சொல்லிச்சொல்லி, போகப்போக, துண்டு துண்டாக. |


31. 1. அவர்களை அப்படி செய்ய வேண்டாமென்று ............................................ களைத்து விட்டேன்.
2. கலை விழாவிற்கு சனக்கூட்டம் ............................................ அதிகரித்துக் கொண்டிருந்தது.
3. முதியவர் ............................................ படியேறி மாடியை அடைந்தார்.
4. பறவைகள் ............................................ பறந்து சென்றன.
5. வங்கியில் ............................................ பணம் வைத்திருந்தார்கள்.

32. 1. நீங்கள் வருவீர்களென்று ............................................ ஏமாந்து விட்டேன்.
2. பழக்கடையில் வாழைப்பழம் ............................................ விற்பனைக்கு இருந்தது.
3. ............................................ பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?
4. கரும்பை............................................ வெட்டி எல்லோரும் சாப்பிட்டார்கள்.
5. அகன்ற காட்டுக்குள் ............................................ பயம் அதிகரித்துக் கொண்டிருந்தது.

**பின்வரும் வாக்கியங்களை தன்மை, முன்னிலை, படர்க்கை என இனங்கண்டு அதற்கு எதிரே எழுதுக.**

33. 1. "ஐயா உங்களுடன் நான் கதைக்க வேண்டும்." ............................
2. "நீ போய் கணக்கப்பிள்ளையிடம் கேட்டு வா" ............................
3. "அவன் தனது பிழையை உணர்ந்து கொண்டான்" ............................
4. "அது புல் மேய்ந்தது" ............................
5. "நீங்கள் வீட்டுக்கு போகலாம்" ............................

34. அருகே கொடுக்கப்பட்டுள்ள சொற்களை ஏற்ற இடத்தில் எழுதி வசனத்தை பூர்த்தி செய்க.
1. நாங்கள் என்றுமே தனித்து ............................................ (வாழ, வாள) முடியாது.
2. பிறர் எமக்கு செய்யும் உதவியை என்றுமே ............................................ (மறந்து, மரந்து) விடலாகாது.
3. ............................................ (காளம், காலம்) அறிந்து செய்யும் உதவியை இவ்வுலகை விட பெரிதாக மதிக்க வேண்டும்.
4. ஒருவர் ............................................ (தினை, திணை) அளவு உதவி செய்தாலும் அதனை ............................................ (பனை, பணை) அளவாக நினைக்க வேண்டும்.

1. 

2. 

35. இவ் வீதிக் குறியீடுகள் குறிக்கும் தகவல்களை எழுதுக.

1. ....................................................................................................

2. ....................................................................................................

36. கருத்தினை தமிழில் எழுதுக.

1. GOOD MORNING

....................................................................................................

2. GOOD NIGHT SISTER

....................................................................................................

37. கருத்தினை தமிழில் எழுதுக.

1. ஒபகே செபசனீப கோமத?

....................................................................................................

2. ஒபகே தாத்தா கவுத?

....................................................................................................

38. இலங்கை அரச இலட்சினையில் காணப்படும் மூன்று பகுதிகளை எழுதுக.

.............................. .............................. ..............................

39. உலகின் ஆறு கண்டங்களில் உமக்குத் தெரிந்த மூன்று கண்டங்களின் பெயர்களை எழுதுக.

.............................. .............................. ..............................

40. இலங்கையில் உள்ள நதிகளில் உமக்குத் தெரிந்த மூன்று நதிகளின் பெயர்களை எழுதுக.

.............................. .............................. ..............................

## மே மாத ஒளி அரசியில் வெளியான வினாத்தாளிற்குரிய விடைகள்.

| | | | |
|---|---|---|---|
| 1. 3 | 2. 2 | 3. 3 | 4. 2 |
| 5. 3 | 6. 1 | 7. 3 | 8. 3 |
| 9. 3 | 10. 2 | 11. 2 | 12. 1 |
| 13. 1 | 14. தாலாட்டுப் பாடல்கள் | | 15. நான் |
| 16. சூடுகண்ட பூனை அடுப்பங்கரை நாடாது | | 17. 1. 1 | 2. L |
| 3. O | 18. 1. பத் | 2. கியல | 3. யமுதா |
| 19. 1. VII | 2. XIII | 3. IV | 4. XIV |
| 20. 1. 6 | 2. 11 | 3. 9 | 4. 14 |
| 21. 1. 0.3 | 2. 0.12 | 3. 0.06 | 4. 0.7 |
| 22. 1. $\frac{9}{10}$ | 2. $\frac{4}{10}$ | 3. $\frac{8}{100}$ | 4. $\frac{32}{100}$ |
| 23. 1. 5 | 2. 3 | 24. 12, 18 | 25. ரூபா 14 |
| 26. 243 | 27. அக்கா, கொக்கு | 28. 14 | 29. 5, 4 |
| 30. 2 | 31. 3 | 32. 2 | 33. 3 |
| 34. 2 | 35. 1 | 36. 1 | 37. 3 |
| 38. - 40. கருத்துள்ள வாக்கியங்கள் | | | |

# Good Habits

## நற்பழக்கங்கள்






பெற்றோரை வணங்கி
பாடசாலைக்கு செல்வோம்.
Let us Worship Parents
Before Going to School.



காலை உணவை கட்டாயம்
உண்ணுவோம்.
I will Never Forget my
Break Fast.




நேரத்துடன் பாடசாலைக்கு
செல்வோம்.
Let us go to School
Without Delay.

## Nursary Rhymes - பாலர்களுக்கான ஆங்கில பாடல்


### *Baa Baa Black Sheep*

Baa baa black sheep
Have you any wool?
Yes sir Yes sir
Three bags full
One for my master
and one for my dame
And one for the little boy
who lives down the lane.



வா வா கறுப்பு செம்மறியே
ஏதாவது பஞ்சு இருக்கிறதா?
ஆம் சேர் ஆம் சேர்
மூன்று உறைகளில் உள்ளன
ஒன்று என்னுடைய தலைவருக்கு
ஒன்று என்னுடைய தலைவிக்கு
ஒன்று அருகாமையில் வாழும்
சின்னப் பையனுக்கு.

பா பா பிளக் ஷிப்
பா பா பிளக் ஷிப்
ஹாவ் யூ எனி வூல்
யேஸ் சேர் யேஸ் சேர்
திரீ பாக்ஸ் புல்
வன் போர் மை மாஸ்டர்
அன்ட் வன் போர் மை டேம்
அன்ட் வன் போர் த லிட்டில் போய்
ஹு லிவ்ஸ் டவுண் த லேன்.



# பிறந்தநாள் வாழ்த்துக்கள் ஜூன் 2015


ஏ. றக்ஷிகான்,
01 ஆம் திகதி


கே. ஜஸ்மிகா,
05 ஆம் திகதி, நவாலி


ஆர். ரெஷாமி,
06 ஆம் திகதி


ஏ. அபிலஷன்,
07 ஆம் திகதி


கி. பிரதீவ்,
08 ஆம் திகதி, நவாலி


ஜெ. கிஷலினி,
08 ஆம் திகதி


எம். சலுஜன்,
08 ஆம் திகதி


வை. லஜாவன்,
09 ஆம் திகதி, மானிப்பாய்


என். கெமிஸ்ரன்,
09 ஆம் திகதி, நவாலி


எம். பவிஷா,
10 ஆம் திகதி, நவாலி


எஸ். சங்கவி,
14 ஆம் திகதி, நவாலி


எஸ். மகதி,
14 ஆம் திகதி


எம். சகான் ஜேகரன்,
16 ஆம் திகதி, மாத்தளை


கே. மதுஷாலினி,
17 ஆம் திகதி, ஆனைக்கோட்டை


ஏ. அபிஷன்,
18 ஆம் திகதி, ஆனைக்கோட்டை


எஸ். தர்மிதன்,
19 ஆம் திகதி, மானிப்பாய்


யூ. கேசவரமன்,
21 ஆம் திகதி


கே. பிரதீவ்,
26 ஆம் திகதி, நவாலி


ஆர். அனுசரம்,
28 ஆம் திகதி


ஆர். கஜனிகா,
30 ஆம் திகதி



**வவுனியா திருச்சிலுவை கன்னியர் மடம் கனரா முன்பள்ளியில் ஜூன் மாதத்தில் பிறந்த தினத்தைக் கொண்டாடும் மழலைச் செல்வங்கள்...**

முன்பக்க படப்பிடிப்பு, அலங்கார அனுசரணை






Email : vanni_inn@yahoo.com

Facebook : vanniin

Hotel Vanni Inn

Chinese, Indian, Sri Lankan Food available

# HOTEL VANNI INN


- A/C Room
- Non A/C Room
- Common Room
- Quality Foods
- Wedding Hall
- Vehicle Parking














2nd Cross Street, Vavuniya.

2ஆம் குறுக்குத்தெரு, வவுனியா.

024 222 2074

024 222 2074